Acc No 179851

O-,87K
N24
179851

உ

கடவுள் துணை.

மதுரைமீனாக்ஷியம்மன்

திருவருள்பெற்ற

பொன்னழகரென்னும்

# கள்ளழகர் அம்மானை.

இஃது

சிக்கிந்தாமலையில்கோவிலன் சமாதியடைந்த

சங்கப்புலவரிலொருவராகிய

பலவிந்துவான்பாடியது.

இவை,

மதுரை-சென்னை-புதுவை-இச்சங்கங்களில்

தமிழ்த்தலைமைப்புலமை நடாத்திய

க. வேதகிரிமுதலியார் குமாரன்

ஆயுள்வேதபாஸ்கரன்

கந்தசாமிமுதலியாரவர்களால்

சீர்திருத்தி,

## பி. நா. சிதம்பரமுதலியார்

பிரதர்ஸ் அவர்களது

சென்னை

வித்யாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

இதன்விலை] 1924. [அணா—12

1.400 ... 24

15

கடவுள் துணை.

### மதுரைமீனாட்சி அம்பாள்

விசுவாசம்பெற்ற

### பொன்னழகரென்னும்

# கள்ளழகர் அம்மானை.

### காப்பு.

விநாயகர் துதி வெண்செந்துறை.

மூந்திமுந்திவிநாயகனே முருகாசரஸ்வதியே
கந்தனுக்குமுன்பிறந்த கற்பகமேமுன்னடவாய் •
தொந்திவயிற்றோனே தோருதசேவகனே
தந்திமுகத்தோனே தற்பரனேமுன்னடவாய்
பேழைவயிற்றோனே பெருமாள்மருகோனே
வேழைமுகமுடைய விநாயகனேமுன்னடவாய்
தாழைமரத்தடியில் தனியேஅமர்ந்தகண்ணே
தழைந்தாலின்கீழிருந்து தண்ணீர்மதம்பொழியும்
இரண்டாலின்கீழிருந்து எண்ணைமதம்பொழியும்
தாயார்வடிவுதேடி தடத்திலமர்ந்தவனே
எந்தன்குருவேஎன் னெண்ணந்தவித்திடுவாய்
சிந்தைதனிலுன்னுடைய சிர்பாதம்நான்மறவேன்
குளத்தங்கரைப்பிள்ளையரே குரலோசைத்தந்தருள்வா
ய், ஆலிலைமேற்பள்ளிகொண்ட ஆயன்மருகோனே
புத்தடிவிநாயகனே புத்திமெத்ததந்தருள்வாய்
கூவுங்குயில்போலே குரலோசைமங்காமல்
நாவுதவராமல் நல்லோசைமங்காமல்
ஏடுதவராமல் எழுத்தாணிசாயாமல்
சுத்தியூபாரதத்தை தப்பாமலப்போது
ஏற்றறியகொம்பா லெழுதும்விநாயகனே
ஆத்திமரத்தடியில் அமர்ந்தசிவன்புத்திரனே
கங்கையின்புத்திரனே கருணைமிகுந்தோனே



காசியிலேதானிருந்து கனகமுடிவேதியர்கள்
மூந்நூறுவேதியர்கள் மூர்க்கமுடன்வந்தார்கள்
அந்தணரைக்கண்டவுடன் அடிபணிந்துதெண்டனி
ட்டார், ஆசாரமேடைதனை அலங்கரித்துமண்ணுடை
யான், வேதப்பிராமணர்க்கு விடுதிகளும்விட்டாரே
ஆசாரமண்டபத்தில் அமர்ந்திருந்தார்வேதியரும்
மண்ணுடையாக்கவுண்டன் கூடியங்கேதானிருக்க
காசிப்பிராமணரும் கவுண்டர்தனைப்பார்த்து
எங்கள்தனையழைத்த விபரமென்னசொல்லுமென்றார்
அப்போ-செந்தாமரைநாச்சி சிணுங்கிநின்று ஏது
சொல்வாள், என்னையா வேதியரே எந்தனுக்குமைந்
தனில்லை, பிள்ளையில்லாமலடியென்று பேரானேன்
வையகத்தில், மைந்தனில்லாக்கவலை மனக்கவலைமெத்
தவையா, பிள்ளையில்லாச்சோறு புழுவோடஒன்றல்ல
வோ, மைந்தனில்லாச்சோறு மருந்தோடஒன்றல்ல
வோ, தானதருமங்கள்தான் செய்தேன்வெகுகோடி
என்னதாம்செய்தாலும் எந்தனுக்குப்பிள்ளையில்லை
மலடிமலடியென்று மானிடங்களேசுதையா
புத்திரர்களுண்டாமோ போதவேயெங்களுக்கு
பஞ்சாங்கம்தான்பார்த்து பரிவுடனேசொல்லுமையா
என்றுஇருவோரும் இதமுடனேதான்பணிந்தார்
காசிப்பிராமணர்கள் காரணர்கள்தான்பார்த்து
சாஸ்திரத்தைப்பார்த்து தனஞ்சியர்களேதுசொல்வா
ர், புத்திரசந்தானமினி உண்டாமோமங்கையரே
முன்னேநீசெய்த்து முகங்களுந்தாநெடுங்கி
வயதுசென்றுபோச்சுதடி மங்கையரேஉந்தனுக்கு
மைந்தனுண்டாவதற்கு வகையில்லைமங்கையரே
இன்னமொருவார்த்தைச்சொல்வேன் இங்கிதமாய்கே
ளுமம்மா, மீனாட்சியம்மன் மிகப்பெரியசன்னதியில்
அரியதவமிருந்தால் ஆண்பிள்ளையுண்டாகும்
பெண்களுமுண்டாகும் பிரபலமாய்வாழ்வீர்
என்றுதான்சொல்ல இருவருந்தான்கேட்டு

சந்தோஷமாகி சரீரங்கள்பூரித்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டு
ஐயாவேஇன்னமொன்று அடியேநான்சொல்லுகின்
றேன், தவசிருக்கும்நல்முறைமை தான்சொல்லவே
ணுமையா, பத்திபுரிந்திருக்க பாங்குடனேசொல்லு
மையா, என்றுசொல்லித்தான்கேட்க ஏதுசொல்வாரந்
ணரும், அந்தநல்லசந்நதிக்கு போகவினிக்கூடாது
ன்றைச்சடாமுனிகள் ஒருகோடிகாவலுண்டு
ந்நதியைச்சுற்றிச் சடாமுனிகள்தானுமுண்டு
வழிநடக்கக்கூடாது வகையுடனேசொல்லுகிறோம்
அந்தமுனிகள்கண்டால் அடித்துரத்தம்கொள்ளுமது
அந்தமுனியைவிட்டு அப்புரமேபோனக்கால்
மீனாட்சியம்மன் மிகப்பெரியசந்நதியாம்
அந்தநல்லசந்நதிமுன் அரியதவமிருக்க
பொன்னுலேகம்பம் முன்னுலேஉண்டுபண்ணி
அந்தநல்ல தூண்மேலே அரியகும்பம்தானிருத்தி
கும்பத்துமேல்பொன்னூசி குணமுடனேதானிருத்தி
ஊசிமுனைமேலே பாசிமுனைதானிருத்தி
பாசிமுனைமேலே பாரத்தவமிருந்தால்
புத்திரருண்டாகும் பொற்கொடியேஉந்தனுக்கு
என்றுசொல்லக்கேட்டு இருதோளும்பூரித்து
நல்லதென்றுசொல்லி தளினமுள்ள மன்னுடையா
ன், செந்தாமரை நாக்ஷி சிரித்துசந்தோஷமாகி
வந்தபிராமணர்க்கு வாரிபணங்கொடுத்து
துப்பட்டிசோமன் துரிசுடனேதான்கொடுத்து
ஊருக்கனுப்பிவைத்தான் உண்மையுள்ளமன்னவனும்
காசிபிராமணர்கள் கடுகியேபோனபின்பு

காசிப்பிராமணர்கள் சொன்னபடி செல்வநாக்ஷி
தவசுக்கு போகும்போது முனிகள்
குறுக்காட்டுதல்.

அரியதவம்செய்யவென்று அவள்பெரியநாக்ஷியரும்
மன்னனுக்குத்தானுரைத்து வழிகூடித்தானடந்தாள்



தனித்துவழிநடந்தாள் தாமரைபெரியநாச்சி
மீனாட்சியம்மனவர் சன்னதிக்கேவருவாளாம்
வைகைநதியோரம் தானணுகிவரும்போது
கண்டுதேமுனிகளெல்லாம் காரிழையாள்வருகிறதை
சடாமுனிகள்கண்டலவோ தடமுங்குறுக்காட்டி
முனிகளெல்லாங்கூடி முன்னேநின்றுஏதுசொல்லும்
காலிரண்டும்எந்தனுக்கு கண்கள்ரண்டுமுந்தனுக்கு
மூக்கிரண்டுமுந்தனுக்கு முழிகள்ரண்டுமெந்தனுக்கு
தொடைகள்ரண்டுமெந்தனுக்கு தோளுரண்டுமுந்தனு
க்கு, கைகளிரண்டுமுந்தனுக்கு கடவிலாவெந்தனுக்கு
பங்கிட்டுக்கொள்ளுதடா பாரமுனிகளங்கே
செந்தாமரைநாட்சி தானங்கேவந்தாளே
முனிகள்வந்துசூழ்ந்ததப்போ மொய்க்குழலாளபக்கலி
லே, அருகில்வரபயந்து அகலவங்கேநின்றிடுமாம்
பத்தினியைக்கண்டவுடன் பாரமுனிகளெல்லாம்
அருகேவரப்பயந்து அடிபணிந்துதெண்டனிட்டு
தாயாரைக்கண்டவுடன் தனித்துவழிகூடுமாம்
அரியசெல்வநாட்சி அதுகடந்துதானடந்தாள்
வைகைநதியருகே தான்வந்தாளப்போது
தவமிருந்தார்கோடியுண்டு தவசுநிலைமுன்னாக
பெரியனாட்சி தவமிருக்கல்.

அவ்விடத்திற்சுத்திசெய்து அரியபெரியநாட்சி
பொன்னுலேகம்பமது முன்னுலேதானிருத்தி
பொன்கும்பமுன்வளர்த்தி பொன்னூசிதானிருத்தி
ஊசிமுனைமேலே பாதிமுனைதானிருத்தி
பாசிமுனைமேலே பாரத்தவமிருந்தாள்
ஆருண்டுதிங்கள் அரியதவமிருந்தாள்
படர்ந்தசடைபந்தலிடும் விழிந்தசடைவேறாணும்
சிவனேமகாதேவா தேவிபரமேஸ்வரியே
ஐயோசிவனே ஆதிமகாதேவா
எழுதும்பிரமாவே ஈசனேஎன்குருவே

அஞ்சுமணிக்கயற்றா லடித்துப்பணங்கேட்டு
நெற்றியிலேகல்லைவைத்து நிறுத்தினான்வெய்யலிலே
பொன்னழகர்சங்கரரும் பொருந்தியிருவர்களும்
மண்ணுடையானரமனைக்கி குறிப்புடனேவந்து நிற்க
அரியபெரியநாட்சி அவள்பதரித்தானெழுந்து
எங்கேவந்தீர்சேவகரே எனக்கறியச்சொல்லுமென்றா
ன், அப்போதிருவரும் அடிபணிந்துதெண்டனிட்டு
மருத்துவச்சிகழுத்தொடித்து வகையாயிருவரும்
ஆழக்குழிபரித்துத் தாழப்புதைத்துவிட்டாள்
ஈஸ்பரனார் தன்னருளால் இருவருமே தான்பிழைத்
தோம், பிழைத்துவந்தோம்தாயாரே பேருலகையாள்
வதற்கு என்றுசொல்லக்கேட்டு இருதோளும்பூரித்து
வாரியெடுத்து வர்னமுகம்முத்தமிட்டு
சேர்த்துயெடுத்தணைத்து திருமார்பைமுத்தமிட்டு
அறுசுவையும்போசனமும் அன்புடனேதான்படைத்
து, உண்டுபசியாறி உத்தமர்கள்வீற்றிருந்தார்
எந்தாயேமாதாவே எங்களையரெங்கேயென்றார்
தாமரைப்பெரியநாட்சித் தயங்கிமிகவேதுரைப்பாள்
அப்பாமகனே அதுசேதிகேளாயோ
சிறுக்காம்புலியூரான் சேவகரைத்தானனுப்பி
கூட்டிப்போயங்கே கொல்லுகிறான்பாதகனும்

பொன்னழகரென்னுங் கள்ளழகர்செல்லாத்
தாக்கவுண்டன் வரங்களைவென்று
தகப்பனைமீட்டுவருதல்.

என்றுசொல்லக்கேட்டு எரியறந்துகண்சிவந்து
அப்படியாதாயே அரைக்ஷணமேபோய்வாரேன்
என்றுபுறப்பட்டார் இருவர்களுமப்போது
வனத்தின்குளத்திலே வாளைகுதித்தாப்போல்
சிறுக்காம்புலியூரே சீக்கிரமேவந்தார்கள்
செல்லாத்தாக்கவுண்டனைச் சினத்துடனேதான்பிடி
த்து, அஞ்சுமுறமைகளை அடித்துகருவறுத்து
தகப்பன்றனையழைத்துத் தன்பதியைவந்தாராம்



மைந்தன்கவலை மனக்கவலைதீருமையா
பிள்ளைக்கவலை பெருங்கவலைதீருமையா
என்றுசொல்லிஆரணங்கு ஈஸ்பரரைதெண்டனிட்டா
ள், அந்தமொழிகேட்டு ஆனதொருஈஸ்பரியும்
அரனாரைத்தான்பார்த்து அம்மையுமையேதுரைப்பா
ள், பிள்ளைவரந்தாருமையா பேதையிந்தபெண்ணுக்கு
என்னடிஈஸ்பரியே என்னவகைசொல்லுகிறாய்
பெரியவயதாகி போச்சுதிந்தப்பெண்ணுக்கு
பிள்ளைகளுமுண்டாமோ பொய்வார்த்தைபேசுகிறாய்
அல்லதையாவீசுரரே அவன்பாவம்பொல்லாது
பாரத்தவசுசெய்த பாவம்விடாமாட்டாது.
ஆதலால்நல்லவரம் அரிவைபற்குதாருமையா
நல்லதென்றுயீஸ்வரரும் நாயகியைத்தான்பார்த்து
தவசுமிகச்செய்த தாமரைப்பூநாச்சியர்க்கு
வெள்ளலறிசெவ்வலறி விதமானபூவிரண்டும்
தாமரைபெரியநாட்சி தன்கையிலேதான்கொடுத்தாள்
பூவைமுழங்கும்படி புத்திரருண்டாகுமென்றார் [ள்
தையநல்லாள்பார்வதியும் தன்பலமும்தான்கொடுத்தா
தன்பலத்தினாலே தங்காளுமுண்டாவாள்
காணிக்கிப்புத்திரரும் கன்னிகையுமுண்டாவாள்
என்றுவரங்கொடுத்து ஈஸ்வரியுமூவர்களும்
மாயமுடன்போய்மறைந்தார் வளமுடனேஅப்போது
புத்திரர்வரங்கொடுத்து போய்மறைந்தாரன்னேரம்
தாமரைப்பெரியநாட்சி சந்தோஷமுண்டாகி

பெரியநாட்சி வரம்வாங்கிக்கொண்டு
சிற்றாலைப்பட்டணம்வருதல்.

சிற்றாலைப்பட்டணமே சீக்கிரமேவந்திருந்தாள்
சங்கரனார்தன்னருளால் தான்கெர்ப்பமுண்டாகி
மூன்றுநல்லதிங்களிலே முகம்வெளுத்துதானுமங்கே
ஆறுநல்லதிங்களிலே அடிவயருவுண்டாகி
பூரணகெர்ப்பம் பொற்கொடிக்கிஅன்னேரம்
திங்களுமொன்பதாச்சி தேன்மொழிநாட்சியற்கு

### செல்லாத்தாக்கவுண்டன் குழந்தைகளைக்கொல்லும் படி மருத்துவச்சியை அனுப்புதல்.

சிறுக்காம்புலியூறி செல்லாத்தாக்கவுண்டனவன்
அரப்புவிக்குங்கிழவியைப்போல் ஒருஅவ்வையாரைத்
தானழைத்து, நமக்குளதிராளி நல்லதொருமண்ணு
டையான், அவன்வயற்றிலாண்பிறந்தால் நம்மஆயுசு
க்குயீனம்வரும், அவனுடையவாசலுக்கு அரப்புவிற்
கப்போறாப்போல், நீபோய்மருத்துபங்கள் நேராகத்
தான்புகுந்து, ஆண்பிறந்தால்நீயு மரைக்ஷணமேகழு
த்தொடித்து, ஆழக்குழிபறித்து தாழப்புதைத்துவிடும்
பெண்ணைப்பிறந்தால் பிறபலமாயெண்ணையிட்டு [து
எண்ணையிட்டுக்குளிப்பாட்டி ஈந்தவள்தன்கைகொடுத்
வந்தநல்லநாழிகைக்கு வரிசைகளுநான்கொடுப்பேன்
பட்டுபட்டாவளியும் பரிவுடனேநான்தாறேன்
நல்லதென்றுசொல்லி நாடியங்கேஓடிவந்து
அரப்புத்தலையில்வைத்து அவளுமங்கேவருகையிலே
பத்துமாதஞ்சென்று பாவைபுலம்பையிலே
மருத்துவச்சியில்லாமல் வகையானமண்ணுடையான்
அவ்வையாரெதிரேவந்து அழைத்தங்கேகூட்டிவைத்
தான், வருகுமந்தவேளையிலே வாழ்மயிலாள்கண்டா
ளே, மெய்நொந்துஅழுகிறதை மெல்லிநல்லாள்கண்
டாளே, சோபமதுதானாகி சோர்ந்திருக்கும்வேளையி
லே, செவ்வலறிபூவாலே தீர்க்கமுள்ளபொன்னழகா
வலதுவிலாவில் வகையுடனேதான்பிறந்தான்
வெள்ளலறிப்பூவாலே வீரியவான்தம்பிசங்கன்
இடதுவிலாவில் இயல்பாகத்தான்பிறந்தான்
ஈஸ்பரிதன்பலத்தினாலே தங்காளுந்தான்பிறந்தாள்

### மருத்துவச்சி பொன்னழகரை கழுத்தொடித்து மண்ணில் புதைத்தது.

அப்போமருத்துவச்சி ஆண்பிள்ளை ரெண்டையுந்தா
ன், கழுத்தொடித்துத்தான்புதைத்தாள் கட்டழகன்த



ங்களையே, ஆதிசிவனாரும் அன்புடனேதானறிந்து
வெண்ணீரைஉச்சரித்து விரும்பியங்கேவிட்டெறிந்தா
ர், வெண்ணீறுபட்டவுடன் விரிந்தகழுத்தொன்றாகி
பாலகருஞ்சீராகப் பாங்காய்ப்பொருந்தியதே
நிலவரையின்கீழே வளர்த்தினளீஸ்பரியும்
சோபந்தெளிந்தெழுந்தாள் துரிசாய்பெரியநாட்கி
அப்போமருத்துவச்சி அரியநாட்சிக் கேதுசொல்வா
ள், முன்னேபிறந்ததெல்லா முதிரமாய்ச்போச்சுதம்மா
பின்னாகத்தான்பிறந்தாள் பேடைமயில்தங்காளும்
தாமரைப்பூநாட்சிகேட்டுத் தாங்கியேதானிருந்தாள்
நிலவரையின்கீழ் வளர்ந்தாரிருவர்களும்
பதினாறுவயதுஎன்று பரமனிடகட்டளைதான் [ர்
எட்டானைப்பலமுடையான் இயல்புடையபொன்னழக
ஏழானைப்பலமுடையாள் எழிலுடையதம்பிசங்கன்
நிலவரையில்நின்றார் நீதியுடன்இருவர்களும்
தங்காளைஎண்ணையிட்டுத் தயவாகக்குளிப்பாட்டி
தாமரைப்பெரியகாட்சி தன்கையிலேதான்கொடுத்து
அவ்வையார்கிழவி அன்புடனேதான்போனாள்

### மருத்துவச்சி செல்லாத்தாக்கவுண்டனிடத்தில் வெகுமதிவாங்குதல்.

சிறுக்காம்புலியூறு செல்லாத்தாக்கவுண்டனிடம்
வந்துமருத்துவச்சி வகையுடனேதானுரைத்தாள்
அவ்வையார்க்கப்போது ஆபரணந்தான்போட்டு
சேலைப்பணிதிகளுஞ் சிறப்புடனேதான்கொடுத்தான்
அப்போதுமருத்துவச்சி அன்புடனேதான்வாங்கி
போய்வாரே னென்றுசொல்லி போய்விட்டாள்மருத்
துவச்சி, மருத்துவச்சிபோனபின்பு மன்னவனும்அப்
போது, அப்படித்தானே அவனிருக்கும்வேளையிலே

### மண்ணுடையாக்கவுண்டன் பிறந்து தவசுசெய்து புத்திரவரம் வாங்கிக்கொண்டு வருதல்.

அத்தைமலைக்கொழுந்தி அம்மாள்பெருமாளும்
தாமரைப்பூநாட்சி தனதுகொழுந்தியரும்

செம்மாளின்பின்போன செங்கண்மால்சன்னதியில்
புத்திரரைவேண்டி போதத்தவமிருந்தாள்
அரியதவ நிலையை அரிராமர்தானுங்கண்டு
புத்திரசந்தானமது போதக்கொடுக்கவென்று
ஆதி நாராயணரும் அன்பாய்மனமகிழ்ந்து
பஞ்சாங்கவேதியர்போல் பாங்காய்வடிவெடுத்து
அத்தைமலைக்கொழுந்தி அவனருகில்வந்துநின்று
என்னவரம்கேட்கவந்தாய் இயல்பெரியமங்கையரே
மாயன்வுபாயன் வகையுடனே தான்கேட்க
அத்தைமலைக்கொழுந்தி அன்புடனேஎன்னசொல்வாள், பிள்ளைகளுமில்லாமல் பெரியவரம்கேட்கவந்தேன்
புத்திரருண்டாகவரம் பிரபலமாய்த்தரவேண்டும்
சந்தானமய்க்கம் தான்தீரவரங்கொடுப்பீர்
என்றுசொல்லிமங்கையரும் இறைஞ்சியேதெண்டனிட்டாள், நல்லதென்றுநாராணரும் நாடிவரங்கொடுத்தார், ஆண்புத்திரர்மூன்று அடிகளைக்கிப்பெண்ணிரண்டு, மாயன்வரங்கொடுக்க வகையுடனே தான்வாங்கி
அம்மான்பெருமாளும் அரமனையேவந்தாளே
அதுவே நிலையாக அத்தைமலைக்கொழுந்தி
வய்யம்பெருமாளை வகையாகயீன்றெடுத்து
செய்யபெருமாளைத் திறமுடனே பெற்றெடுத்தாள்
அரியபெருமாளும் ஆண்மையுடனேபிறந்தார்
தங்கையிருவோரும் சமர்த்துடனே தான்பிறந்தார்
சிறுக்காம்புலியூரில் திறமுடனே தான்பிறந்தார்,
காரும்பறைச்சிக் காரிழையாள் தன்வயிற்றில்
வீரமலைச்சாம்பானும் வீரியனுமேபிறந்தான்
ஆதிகாலமுடைய ஆண்மையுளசாம்பானும்
இப்படித்தானே யிருக்குமந்த நாளையிலே

### பொன்னழகரென்னும் கள்ளழகர் நிலவரையில் வளர்ந்து வீடுவந்து சேருதல்.

சிவனருளில்வந்துதித்த சிறுபுலிதம்பிசங்கள்
நிலவரையில்வளர்த்தார்கள் நிகரில்லாக்கள்ளழகர்



சிற்றுலைப்பதிநோக்கி சிக்கிரமேவந்தார்கள்
வந்தாரரண்மனைக்கி வகையுடனேயப்போது
தாமரைப்பூநாட்சியரைத் தான்கேட்பான் மண்ணுடையான், அந்தநல்லசேவகரும் ஆரடிப்பெண்ணமுதே, என்றுமேகேட்க ஏதுசொல்வாள்நாட்சியரும்
நம்முடையமைந்தரையா நாயகரேசொல்லுகிறேன்
வந்தவரலாற்றை வகையுடனே தானுரைத்தாள்
கேட்டுமகிழ்ந்தானே திருவாயுள்ளமண்ணுடையான்
இப்படியாக இருக்குமந்த நாளையிலே

### மண்ணுடையாக்கவுண்டன் அரமனைகட்டுவித்து பொன்னழகரென்னுங் கள்ளழகருக்கு சோபனம் செய்தல்.

அரமனைக்கட்டவென்று அனைவோருந்தானினைந்து
பவழத்தால்கால்நாட்டிப் பக்கவளை தான்போட்டு
வெள்ளியால்கால்நாட்டிப் பக்கவளை தான்போட்டு
பளிங்குநல்லமண்டபமும் பந்தடிக்குங்கூடங்களும்
எரும்பேருமண்டமும் மியல்பாகவுண்டுபண்ணி
பாம்பேருமண்டபமும் பரிவுடனேகட்டுவித்து
சுத்திமதிலக்கோட்டை சூரியனைக்காணமல்
தங்காளரமனையும் தப்வுடனேசோடினையாய்
அன்னவுஞ்சல்தானுடை பொன்னூலேசங்கிலியும்
தங்காளரமனையும் தயவுடனேசோதினையாய்
இப்படித்தானும் இருக்குமந்த நாளையிலே
ஏழுவயதானா ளீதிராளிஅஞ்சிடவே
பத்துவயதாகி பகைவர்களைவோறுத்தார்
பன்னிரண்டுவயது பாங்குடனேசென்றபின்பு
சோபனம்செய்ய துருசுடனேமண்ணுடையான்
நெல்லிவள நாட்டான் நீதியுள்ளமண்ணுடை
மக்களிருவருக்கும் வகையுருமைசெய்யவென்,
அத்தைமலைகொழுந்தி அம்மான்பெருமாளு
கோனாட்டுக்காருளன் குலம்பெரியமைத்துனர்

அம்மான்பெருமாள் அரமனைக்கிவந்தார்கள்
வந்தநல்லஉறன்முறையை வாவென்றுதானழைத்து
பட்டுபாய்போட்டு பாங்காயிருங்களென்றார்
வண்மையுடனிருந்து வரிசையுடன்தான்பேசி
பெண்ணுமதுகேட்டுப் பிரியமுடன்சம்மதித்து
உருமையுடன்சம்மதித்து ஒத்துருமைதான்பேசி
வலுமையுடன்பேசி வரிசையுடன்சம்மதித்து
கல்யாணநாள்குறித்து கடுகியேமண்ணுடையான்
பிரியமுடன்தான்பேசி பெருமையாய்,நாள்குறித்து
பவழக்கால்தானட்டி பந்தலெங்குந்தான்போட்டு
மேல்கட்டுகட்டி விதமாய்அலங்கரித்து
சோலையெழுதி துய்யப்புறாவெழுதி
வாழைமரமெழுதி வர்னக்கிளியெழுதி
தென்னமரமெழுதி சிறக்கமயிலெழுதி
அன்னமுடன்தாருக்கள் அரியவேதானெழுதி
மாடப்புராக்களும் வர்னமுள்ளபட்சிகளும்
பேய்க்கரும்புநாட்டி பிரமனையுந்தான்போட்டு
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
ஆயிரப்பெருந்திரியும் அடவாகத்தான்போட்டு
மாப்பிள்ளைஇருவரையுழ்வகையாகஅலங்கரித்து
பெண்ணையலங்கரித்து பிரியமுடன்கூட்டிவந்து
பொன்னலேசுண்டுவிரல் புகழ்பெறவேயுண்டுபண்ணி
பொன்னல்விரல்பிடித்து பிரியமுடனமர்த்தி
கல்யாணசோபனங்கள் கடுகிமுடித்தார்கள்
கொட்டிமுழக்கி கோதையர்கள்பாடிநிற்க
அழகுமணம்செய்தார்கள் அனைவோருந்தானரிய
பெண்ணையுமாப்பிள்ளையும் பிரியமுடன்கூட்டிவந்து
நாலாநாள் நீராடி நல்லோரைத்தான்பணிந்து
கல்யாணம்தான்முடித்து காருளன்பொன்னழகர்
பேரணியுந்தான்முழங்கப் பிரியமுடனப்போது
சிற்றூலப்பட்டணத்தில் சிறப்புடனேகூட்டிவந்து
வெள்ளியும்பொன்னும் விதமாகத்தானெடுத்து



வந்தவுறமுறைக்கி வகையாய்ஆசனமிட்டு
ஊருக்கனுப்பிவைத்து வுகந்திருக்கும்நாளையிலே
பெண்ணவிபட்டால் பிலமுங்குறையுமென்று
கொண்டுசிறைபோட்டானே மண்ணுடையான்தன்மக
னும், பொங்கியிடுஞ்சோறுகரி புகைவாசம்வீசுதென்பா
ர், ஆக்கியிடுஞ்சோறுகரி அனல்வாசம்வீசுதென்பார்
அண்ணார்ந்துப்பார்த்தால் ஆண்பிலம்குறையுமென்று
கொண்டுசிறைபோட்டானே மண்ணுடையான்தன்மக
னும், தம்பியுடன்பொன்னழகர் தாஷ்டீகரிருவர்களும்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே

சோழமகாராஜனுக்குப் பொன்னழகரென்னுங்
கள்ளழகர் பகுதிகொண்டுபேர்குதல்.

சோழமகாராஜனுட துரைமக்கள்தன்பேரும்
மாடப்புறாச்சோழனென்றும் மணிப்புறாச்சோழனெ
ன்றும், கருங்காலிசோழனென்றுங் கனகமுடிசோழ
னென்றும், ஆறுக்கொருகூறு அரண்மனைக்கிமேல்வா
ரம், கரந்துவைத்தபால்தனையே காகமதுதீண்டாது
பசுவும்புலியுமொரு பார்துறையில் நீர்குடிக்கும்
எலியுடனேபூனைகளும் இருந்துவிளையாடும்
நீதியுள்ளசோழன் நெல்லிவளநாட்டை
பொன்னழகருக்குப் பொருந்திமிகப்பேசி
பதிகாவல்தான்பேசி பாங்குடனேபொன்னருக்கு
பொன்னருக்குத்தான்கொடுத்து பொருந்திமிகவிருக்க
பாதிகாவல்ப்பணமும் பகுதிகளுஞ்செல்லாமல்
நிருபமதுதானெழுதி நீதியுள்ளபொன்னருக்கு
ஓலையெழுதியொரு தூதுவனைப்போகவிட்டார்
அப்போது தூதுவனும் அரைக்ஷணமேஓடிவந்து
சிற்றூலப்பட்டணமே சீக்கிரமேவந்துகண்டு
நிருபமதுமுன்னேவைத்து நின்றுதெண்டஞ்செய்தா
னே, ஓலைதனைப்பார்த்து உட்படுத்திப்பொன்னழகர்
தம்பிசங்கனெங்கேயென்று தான்கேட்கும்வேளையிலே
அந்தட்சணமே அடவுடனேசொல்வார்கள்

தங்களரண்மனைக்கித் தான்போனாரென்றுசொன்னார்
தாதியழையுமென்று தான்சொன்னாரப்போது
அந்தக்ஷணமே ஆளோடிப்பார்க்கையிலே
அங்கையுமில்லையென்று அன்புடனேசொன்னார்கள்
சோழராசன் அரண்மனைக்கி துருசுடனேபோகவேணு
ம், எங்கேயென்றுபார்த்து இக்ஷணமேவாருமென்றார்
அந்தமொழிகேட்டு ஆளோடிப்பார்க்கையிலே
பார்க்குமந்தவேளையிலே பறைப்பயலுமோடிவந்தான்
ஆண்டவனேபருக்கென்று அன்புடனேதெண்டனிட்
டு, வேட்டைக்கிப்போனானென்று வீரசாம்பான்தானு
ரைத்தான், நல்லது நல்லதென்று நாடியங்கேபொன்
னழகர், புரதிக்கர்வல்பணமும் பாங்குடனேதான்முடிந்
து, உலுப்பைமுவத்தேதிகளும் ஒன்றுகுறையில்லாமல்
பத்தாளுந்தலைமேலே பாங்குடனேமுன்னனுப்பி
வீரசாம்பான்கைதனிலேமெய்முடிப்பைத்தான்கொடுத்
து, முன்னேஅனுப்பிவைத்தார் மூர்க்கமுள்ளபொன்
னழகர், புரவிதனிலேறிபொன்னாண்டார்தானடந்தார்
அந்தநல்லச்சேவுகனும் அனேகதூரம்பின்னேநிற்க
புரவிதனைநிருத்தி பொன்னழகரேதுரைப்பார்
என்னகாண்சேவுகனே நீநடக்கமாட்டாயோ
உங்களுடகுதிரைமுன்னே ஓடவினிக்கூடாது
என்றுசொல்லச்சேவுகருமேதுரைப்பார் பொன்னழக
ர், வாருங்காண்சேவுகரே வகையுனக்குச்சொல்லுகிறே
ன், பாவியுடதன்வாலைப் பிலமாய்ப்பிடியுமென்று
மீட்டினான்குதிரைதனை மேலாகத்தான்பறக்க
வால்பிடித்தசேவகனும் மகிழ்வுடனேதொங்கையிலே
கைகளிரண்டுந்தானெரிய கலங்கியேசேவுகனும்
மீட்டாதேமீட்டாதே மெய்மயக்கமாகுதையா
சற்றேபுரவிதனை தான்நிறுத்தவேணுமையா
நல்லதென்றுபொன்னழகர் நற்புரவிதனைநிறுத்தி
வந்தநல்லசேவுகனை வழிகூட்டிவாருமென்று
முன்னேநடந்தாரே மூர்க்கமுள்ள்பொன்னழகர்



சம்பானுமுன்னோட தன்புரவிபின்போக
சோழராசனரண்மனைக்கி துருசுடனேவந்தல்லவோ
கரிகாலச்சோழனுக்கு கனகமுடிமுன்னேவைத்து
சோழனையுந்தெண்டனிட்டு சுகமாகவீற்றிருக்க

சோழனரண்மனைக்கி பொன்னழகர்போன சங்கதி
கேட்டு சங்கன்கோபித்து படையெடுத்துப்
போய் சோழனிடத்தில் வெகுமதி பெற்
றுத்தங்களூர் வந்து சேருதல்.

வேட்டைக்கிப்போய்தம்பிசங்கன் விடுதிவந்துசேர்ந்த
ல்லவோ, அண்ணருமெங்கேயென்று அதட்டிமிககே
ட்கையிலே, சோழராசனரமனைக்கிச் சோடாளும்வீந்த
ல்லவோ, அழைத்துக்கொண்டுபோனார்கள், அன்புட
னேயென்றுசொன்னார், என்றுசொல்லக்கேட்டு எரிபர
ந்துகண்சிவந்து, அண்ணரையும்மோசம்பண்ண அ
ழைத்தானேசோழனுந்தான், ஆக்கரித்துப்பற்கடித்து
ஆனைபடைசேனைதளம் ஆனைமேல்பேரிகைஅதிர்ந்து
முழங்கிடவே, குதிரைமேல்டங்காவும் கூடமுழங்கிட
வே, சோழனுடகோட்டையின்மேல் துரிசாய்ப்படை
கூட்டி, அண்டங்கள்தானதிர அல்பாய்படைநிறுத்தி
கோட்டைசுத்திப் பாளையத்தை கூட்டமிட்டான்தம்பி
சங்கன், அந்தப்படைதானுங்கண்டு அலறியேசோழ
னுந்தான், திடுக்கிட்டுச்சோழனுந்தான் சேதியென்ன
பொன்னழகர், பொன்னழகரைப்பார்த்துப் பொருந்தி
யேதான்கேட்க, பொன்னழகர் தானுமப்போ பொற்
கோட்டைமீதேறி, பார்க்குமந்தவேளையிலே பாங்கான
தம்பிசங்கன், தம்பிசங்கனென்றல்லவோதானறிந்து
பொன்னழகர், சோழராசனண்டையிலேதுருசாகவோ
டிவந்து, ஒன்றுக்குமஞ்சாதே வுண்மையுள்ளராசமன்
னா, மாத்தான்படையுமல்ல மருமன்னர்தானுமல்ல
நம்முடையதம்பியற்குச் சொல்லாமல் வந்துவிட்டோ
ம், தன்படையைக்கூட்டித் தம்பிசங்கனிங்கேவத்தான்
இத்தவகைவிபரம் இயலுடனேதானுரைக்க

கரிசாலச்சோழனுக்குக் கனபிரியமுண்டாகி
பொன்னழகர்தனையழைத்துப் பொருந்தியே சோழம
ன்னன், பொற்கோட்டைத்தான்திறந்து பொன்னழக
ர்தனையனுப்பி, தம்பிசங்கன்றன்னை தயவாயழையுமெ
ன்றார், அப்படியேநல்லதென்று அழைத்துவந்தார்
பொன்னழகர், தம்பிசங்கன்றன்னை தயவுடனேகூட்டி
வந்து, அறமனையிலிருவருக்கு மன்பாய்விருந்துசெய்
து, அறுசுவைபதார்த்தமுடன் அன்புடனேதான்ப
டைத்து, அரிபிளவுவெள்ளிலையு மள்ளிமிகக்கொடுத்
து, சந்தனங்கஸ்தூரி சவ்வாதுதான்பூசி
உடுவரையும்வெகுமதியும் உண்மையுடனேகொடுத்து
ஏறும்பரியுமிவருக்குத்தான்கொடுத்து
ஊருக்கனுப்பிவிட்டான் உண்மையுள்ள சோழமன்ன
ன், வந்தபடைசேனையெல்லாம் வகையுடனேதானனு
ப்பி, சிற்றாலைப்பதிநோக்கிச் சீக்கிரமேவந்தார்கள்
அத்தைபிள்ளைமூவர்களும் அறிவுள்ளசாம்புவனும்
பொன்னழகர்சங்கருமே பொருந்தியிருக்கையிலே

தங்காள் அண்ணமாரிடத்தில்வந்து விளையாட
கிளிமயில் புறாகேட்க வேட்டைக்குப்
புறப்படுதல்.

அன்னஊஞ்சல்விட்டிறங்கி அன்பானதங்கையரும்
நல்லதங்காளுத்தமியும் நாடியங்கேவந்துநின்று
அண்ணமார்தன்னருகில் அன்புடனேவந்துநின்று
என்பிறவி அண்ணாவே ஏற்கையுள்ளமன்னவரே
சின்னண்ணாவென்பிறவி செல்வத்திருமுகமே
கொஞ்சிவிளையாடக் குலக்கொடியாளெந்தனுக்கு
பஞ்சவர்ணநற்கிளியும் பவளவர்ணத்தாராவும்
மயிலுங்குயிலு மாடப்புறாவினமும்
பேடையுடன்தாறாவும் நான்பிடித்துவிளையாட
அண்ணாவேயென்பிறவி அதுவேட்டைதானாடி [கு
கொண்டுவந்துதரவேணும் குலக்கொடியாளெந்தனுக்
என்றுதங்காள்சொல்ல ஏதுசொல்வான்தம்பிசங்கன்



அறியபிறவியம்மா அதுவோசிலபாரம்
அப்படிநல்லதென்று ஆண்மையுள்ளதம்பிசங்கன்
வேட்டைகளுந்தானாட விதமாகக்கச்சைகட்டி
அத்தைபிள்ளைமூவரையும் ஆண்மையுடன்தான்கூட்டி
ஆயிரம்காலாளுடனே அன்புடனேகூட்டமிட்டு
வில்லெடுத்து அம்பெடுத்து வெள்ளிகட்டுவேலெடுத்து
எரிவலையுங்கண்ணிகளு மின்பமுடன்தானெடுத்து
எண்ணைக்கச்சைவரிந்துகட்டி இருபுறமுஞ்சுங்குவிட்டு
மாதலம்புசல்லடங்கள் வகையாகத்தானெடுத்து
துத்தியப்புஅங்கிகளும் சோடுவச்சிறசீருவும்
வர்ணகச்சைவருஞ்சிகட்டி வகையுடனேசுங்குவிட்டு
அத்தைபிள்ளைமூவர்களும் ஆனதொருகாலாளும்
வீரநல்லசாம்பனும் ஏரியனுமுன்னடக்க
வெள்ளாங்குளத்தாரு மேல்புறமாஞ்சோலையிலே
இருண்டவனத்திலே எல்லோரும்வந்திறங்கி
கன்னிகளுங்குத்தி கடியதொருபட்சிகளை
பஞ்சவர்னநற்கிளியும் பவளவர்னத்தாராவும்
மயிலுங்குயிலும் மாடப்புறாவினமும்
அன்னமும்தாராவும் அநேகமாய்த்தான்பிடித்து
செம்மானும்பொன்மானுந் திரளாகவேபிடித்து
வேட்டைகளுந்தானாடி வேர்த்துவிரிவிரித்து
தண்ணீருத்தாகம் தானாகியப்பொழுது
வெள்ளாங்குளத்தருகில் விருப்பமுடனோடிவந்து
மண்டியிட்டுநீர்குடித்தான் மதகரியன்தம்பிசங்கன்
தண்ணீர்குடிக்கிறதை தான்கண்டுவேங்கையது
அதம்பியேவேங்கயது ஆக்கரித்துதானெழுந்து
தம்பிசங்கன்மேலே தாண்டியேபாய்ந்ததுவே
கண்டானேதம்பிசங்கன் கண்கள்பொரிபறக்க

அண்ணமார்கள் வேட்டையாடி வெள்ளாங்
குளத்தில் வேங்கைகொன்று வீடுவந்து
சேர்ந்து தங்காளுக்கு பட்சிகளை
கொடுத்தல்.

வீரவாள்தானெடுத்து வீசினான்தம்பிசங்கன்
பட்டுருவிவேங்கை பதறிவிழுகையிலே

தலையூருக்காளிக்கு அபையமென்றுவிழுந்ததுவே
வேங்கைதனைவெட்டி வீரமுள்ளதம்பிசங்கன்
ஆனைபடைசேனைதளம் அனைவோரையுங்கட்டி
வீடுவந்துசேர்ந்து விதமாகஅப்போது
தங்காளரண்மனைக்குத் தான்வந்துஅப்போது
பந்தடிக்குமாளிகைமுன் பாங்குடனேவந்துநின்று
அரியபிறவியரை அன்புடனேதானழைத்து
மயிலுங்குயிலு மாடப்புறாவினமும்
பஞ்சவர்ன்னநற்கிளியும் பவளவர்ன்னத்தாராவும்
தங்காள்கையில்கொடுத்து தான்விடுதிபோனபின்பு
அவரவரறண்மனையில் அன்புடனேபோயிருந்தார்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
அபயமென்றசத்தம் அவன்காளிதன்செவியில்
செப்பூசிக்கொண்டு செவியிலிடித்தாப்போல்
வெள்ளாங்குளத்தருகில் வேங்கைவீரிட்டசத்தம்
என்னவென்றுதானறிய எண்ணியேதன்மனதில்
தன்னுடையசேவகரைத் தானழைத்துஅன்னேரம்
வெள்ளாங்குளத்தருகில் வீறிட்டசத்தமது
கண்டுவரச்சொல்லி கடுகஅனுப்பிவைத்தான்
ஆளோடிக்குளத்தருகில் ஆராய்ந்துபார்க்கையிலே
வெள்ளாங்குளத்தோரம் வேங்கைமடிந்திடவே
கண்டார்கள்சேவுகர்கள் கண்கொள்ளாவேங்கைதனை
வெள்ளாங்குளத்தாரை விசாரித்தார்சேவுகரும்
வெள்ளாங்குளத்தாராம் விபரமாய்த்தானுரைத்தார்
நெல்லிவளநாட்டான் நிகரில்லாக்கோனுட்டன்
பூங்காவனந்தனிலே புனல்வேட்டைதானாடி
மானுங்குயிலினமும் வகையானபட்சியெல்லாம்
பாவைமயில்பிடித்து பாங்கானதம்பிசங்கன்
குளக்கரையிலோடிவந்து குலவையிட்டுத்தம்பிசங்கன்
தண்ணீர்குடிக்கையிலே தான்கண்டுவேங்கையது
தண்டையிட்டுவால்முறுக்கித் தம்பிசங்கன்மேல்பாய
எழுபதடிகுதித்து இருபிளவாய்வீசிவிட்டான்



வெள்ளாங்குளத்தாரார் விபரமதுதானுரைக்க
அந்தமொழிகேட்டு அரைக்ஷணமேஓடிவந்து
தலையூருகாளியுடன் தானுரைத்தானப்போது
சீறியவன்காளி சினத்துடனேஆர்ப்பரித்து
கண்கள்சிவந்து காளியவன்ஆக்கரித்து
வேங்கைதனைகொன்றவனை விட்டுவிடப்போறதில்லை

## வேங்கையைக்கொன்ற சேதிகேட்டு காளி கோபித்து நெல்லிவள நாட்டைக் கொள்ளையிட ஆலோசனை பண்ணுதல்.

வெட்டாதபோனுக்கால் வேட்டுவனும்நானல்லவோ
என்னுடையவேங்கைதனை இவன்தானோவெட்டுரவன்
நான்வளர்த்த வேங்கைதனை நாடியிவன் வெட்டுவா
னோ, என்றுசொல்லிபாசையிட்டு எரிபரந்துகண்சிவந்
து, தலையூறுங்காளியவன் தான்சினந்துகண்கலங்கி
படைமன்னர்சேவுகரை பாங்குடனேதானழைத்து
நெல்லிவளநாட்டைக் கொள்ளையிடவேணுமென்று
படைக்கூடிபேசிப் பாங்குடனேகூட்டமிட்டு
இப்படியாய்வேட்டுவர்கள் இருக்குமந்தவேளையிலே

## தங்காள் சொற்பனம்கண்டு அண்ணமாரிடத்தில் சொல்லுவது.

அந்தநல்லவேளையிலே அன்புமிகுதங்கையரும்
அன்னஊஞ்சல்மேலே அசைந்துநித்திரைசெய்யலி
லே, ஆவேசம்கண்டலவோ அலரியங்கேதானெழுந்
து, அண்ணருடபக்கலுக்கு அன்புடனேஓடிவந்து
அண்ணாவியென்பிறவி ஒருஆவேசம்கண்டனடா
சின்னண்ணாஎன்பிறவி ஒருசொற்பனங்கண்டேனடா
மேனாட்டுவேடுதளம் வெகுகூட்டம்வரவுகண்டேன்
தட்டான்சதிக்கக்கண்டேன் தனிவழியே போகக்கண்
டேன், தலையூருகாளியவன் தான்வளர்க்கும்பன்றியது
செந்நெல்கதிரையெல்லாந் தின்றளிக்ககண்டேனடா
பச்சனுகவுண்டன்மகள் பாரச்சிரைபோகக்கண்டேன்

என்றுதங்காள்சொல்ல ஏதுசொல்வாரண்ணருமே
அரியபிறவியரே ஆனதங்காளுத்தமியே
வேங்கைபுலியுடனே வெள்ளாடெதிர்ப்பதுண்டோ
தவளைகுதித்ததினால் தண்ணீர்கலங்கிடுமோ
வந்தவந்தவேடுவரை வாளினால்சங்கரிப்பேன்
ஏதுக்குமஞ்சாதே என்பிறவித்தங்கையரே
உன்னுடையஅரமனைக்கி உத்தமியேபோய்வாரும்
என்றுஅனுப்பிவிட்டு இவரிருக்கும்வேளையிலே

வேட்டுவர்படைகூடி புறப்பட எத்தனிக்கிற
சமையத்தில் கெவுளிசொல்ல அதற்கு
குறிகாரனை அழைத்து கேட்க
அவன் சொல்லுகிறவிபரம்.

தலையூருக்காளியவன் தன்படையைகூட்டமிட்டு
மந்திரிக்கர்த்தரையும் வகையுடனேகூப்பிட்டு
கொன்றுகொள்ளையிட்டு மண்ணுடையான்தன்மகனை
வெட்டிச்சிரைபிடித்து விருதுசின்னம்தான்முழக்கி
சேனைபடைகாவலரைச் செந்தூளியாக்கிவிட்டு
நெல்லிவளநாட்டை நிருதூளியாக்கிவிட்டு
வருவமென்றுசொல்லி வகையுடனேதான்பேசி
எல்லோருங்கூடி இப்படிக்கிபேசயிலே
பாழ்மூலைப்பல்லியது பலபலென்றுசொல்லுகுது
தீய்மூலைப்பல்லியது திகுதிகென்றுசொல்லுகுது
அலைக்கொட்டிப்பல்லியது ஆக்கரித்துச்சொல்லுதடா
பொல்லாதநிமத்தமது போனதேயானுக்கால்
போனதேயாமாகில் பிழைமோசம்வந்துவிடும்
அளவறுத்துப்பாராமல் அவ்விடத்தில்போகொணாது
கொங்காமேல்ப்போனால் குடிகேடுவந்துவிடும்
குறியில்தெரிந்தவரைக் கூட்டிவந்துபார்க்கவேணும்
கனத்தபடைமன்னரெல்லாங் காளிக்கறிக்கையிட
மதவானைக்காளியவன் வரிசையுடன்தான்கேட்டு
கோடங்கிகாரனைக் கூட்டிவரச்சொன்னானே
எவ்வூரில்தானே இருப்பாண்டாகுறிகாரன்



வெங்கலநாட்டுக்குள்ளே வேதியனொருவனுண்டு
தட்டையநாட்டுக்குள்ளேஒரு சாஸ்திரியுந்தானுமுண்
டு, இருவரென்றபோகளையும் இக்ஷணமேகூட்டிவந்து
தான்கேட்கவேணுமென்று தலையூருக்காளியவன்
ஆளையனுப்பினான் அழைத்தோடிவாருமென்று
துரிசாயழைத்துவரச் சொன்னானேகாளியவன்
நல்லதென்றுசொல்லி நாடியங்கேதானோடி
சீக்கிரந்தானோடிச் சினமேஅழைத்துவந்தார்
எல்லவருங்கூடி இருக்குஞ்சபைதனிலே
வந்தாரேசாஸ்திரிகள் வகையாய்ச்சபைநடுவே
இருங்களென்றுசொல்லி இன்பமுடன்தானுரைத்தார்
சாஸ்திரிமார்தானிருந்து தயவுடனேயேதுரைப்பார்
எங்களையழைத்தவகை ஏதுமையாசொல்லுமென்றார்
வாருமையாசாஸ்திரியே வண்மைக்குறிபார்க்க
அழைத்துவரச்சொன்னோம் அன்பாயிருவரையும்
நன்றாய்க்குறிபார்த்து நலம்பெறவேசொல்லுமென்றா
அப்போதுஜோசியரும் ஆண்மையுடன்பார்த்து [ர்
பன்னிரண்டுராசிகளும் பாங்குடனேதான்பார்த்து
கெவுளிகளுஞ்சொன்ன கெணிதமதைத்தான்பார்த்து
பாழ்மூலைபல்லிசொன்ன பலன்களைத்தான்பார்த்து
மனதில்நினைத்ததெல்லாம் வருத்தமாய்காணுகுது
சிந்தையில்நினைத்ததெல்லாம் திறமுடனேசாவாகும்
வந்திடுமேதூதாட்கள் வல்வினைகள்மெத்தவுண்டு
அந்திரமேபோனாலும் அதில்மணமேயில்லையென்று
குறிதானும்சொல்லுதையா கோபமுள்ளமன்னவரே
ஆமையாவேதியரே ஆராய்ந்துசொல்லுமையா
பல்லிசொன்னவார்த்தை பார்த்தறிந்துசொல்லுமை
என்றுசொல்லிகேட்க ஏதுசொல்வார்வேதியரும் [யா
எல்லோருங்கூடி நீங்கள் ஏகமாய்த்தான்பேசி
கொள்ளையிடவேணுமென்று குறித்தாப்போல்காணுது
போனதேயாமாகில் பிழைமோசம்மெத்தவரும் [து
தலைகளுருண்டுவிடும் தளங்களெல்லாந்தான்மடிய

போகிறதேயல்லாமல் பொருந்திவரப்போறதில்லை
என்றுதான்பல்லியது இதமாகச்சொல்லுகுது
போகிறதுஞாயமல்ல புண்ணியரேசொல்லுகிறேன்
அப்படியானுக்கால் அதுக்குவகைசொல்லுமையா
மறுக்கால்குறிபார்த்து வகையுடனேசொல்லுகிறார்
நெல்லிவளநாடு நிகரில்லாக்கோனாடு
சிற்றாலைப்பட்டணமும் சேர்ந்தபொன்னிவளநாடு
சிறுக்காம்புலியூரு திறமாகக்காணுகுது
வீரமலையும் வெற்றியுள்ளரங்கதளம்
வடபத்ரகாளி வடிவுள்ளசன்னதியில்
மதுக்கரைச்சொல்லி மாகாளிகோவில்முன்னே
களித்தின்னும்மல்லன்வன் காவலாய்க்காணுகுது
பொல்லாதகாவலிலே போகவினிகூடாது
மேனாட்டைவிட்டு விரும்பியினிப்போகாதே
அல்லவென்றுபோனுக்கால் அகமாகப்போய்விடுவீர்
என்றுதான்சொல்ல ஏதுசொல்வான்காளியவன்
கோனாடுகொள்ளையிட குறிப்பறிந்துசொன்னுக்கால்
பச்சிலைகடகமும் பச்சைவடம்தாமரையா
பாங்குடனேதுப்பட்டியும் பரிவானசாலுவையும்
இருவருக்குந்தந்திடுவோமியல்பாகச் சொல்லுமையா
அப்படியேநல்லதென்று ஆராய்ந்துசொல்லுகிறார்
அறிந்தமட்டுஞ்சொல்லுகிறேன் அன்பானகாளிமன்னா
மதுரைக்கரைச்சொல்லி மாகாளியம்மனுக்கு
தேனிலபிஷேகஞ் செய்துவரவேணுமையா
பாலும்பழமும் பாங்கானமுக்கனியும்
நல்லெண்ணைபால்தயிரு நாடியபிஷேகஞ்செய்து
களித்தின்னுமல்லனுக்கு கனகபூசைசெய்யவேணும்
அதுக்குவகைவிபரம் அன்புடனேசொல்லுகிறோம்
கம்பரிசிமாவிடித்துக் கருப்புக்கட்டிதான்கலந்து
களிபோலேதான்கிளறி கனமாகவுண்டைசெய்து
பூசனிப்பழம்போலே போதவேதானுருட்டி
எழுபதுகாளியுருண்டை இதமாகத்தானுருட்டி



நார்ப்பதுகலமரிசி நன்றாகப்பொங்கலிட்டு
ஆட்டுக்கிடாய்நூறு அடவாகச்சமைத்துவைத்து
முட்டையிடுங்கோழி முந்நூறுசுட்டிவைத்து
மதுக்குடங்கள்நூறு வரிசையுடன்தானுமங்கே
எழுபதுவண்டியிலே இதமுடனேதான்போட்டு
வண்டிதனைநடத்தி வரிசையாய்க்கொண்டுசென்று
காளிக்கபிஷேகம் கனமாகத்தான்முடித்து
களித்தின்னுமல்லனுக்கு கனபூசைசெய்தாக்கால்
இன்பங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
கொள்ளைக்கிடமுங் கொடுப்பானேமல்லனுந்தான்
அந்தமொழிகேட்டு ஆண்மையுள்ளவேட்டுவர்கள்
நல்லதென்றுசம்மதித்து நாட்டாருமப்போது
குறிசொன்னஅய்யருக்கு குணமுடனேநல்வரிசை
கொள்ளைசெய்துவந்தபின்பு கொடுக்கிறோமென்றுசொ
ல்லி, போய்வாருமென்று பொருந்திவிடைகொடுத்தார்

### ஜோசியர் சொன்னபடி வேட்டுவர் காளிக்கும் களித்தின்னு மல்லனுக்கும் பூசைசெய்து கொள்ளையிட்டு வரப்போனது.

கம்பரிசியுருண்டை கனமாகத்தானுமங்கே
எழுபதுகளியுருண்டை ஏற்கையுடன்சேர்த்து
ஆட்டுக்கிடாய்நூறு அடவுடனேதான்சமைத்து
நார்ப்பதுகலமரிசி நன்றாகப்பொங்கிவைத்து
முட்டையிடுங்கோழி முன்னூறுசுட்டுவைத்து
எழுபதுவண்டியிலே யேற்றியேசோதுகரி
நாட்டார்கள்கூடி நாடியங்கேகொண்டுசென்று
மறுக்கரையப்பன் மகிழவேபூசைசெய்து
களித்தின்னுமல்லனுக்கு கனபூசைசெய்வதற்கு
அன்பதுமாத்து அடவுடனேதான்விரித்து
கொண்டுவந்தசோறுகறி கொட்டிவைத்தார்முன்னாலே
ஆட்டுக்கிடாய்கோழி அடவுடனேமுன்னேவைத்து
பச்சிலைகள்வைத்துப் பரிவாகத்தூபமிட்டு
எல்லவருங்கூடி இனிதாகத்தெண்டனிட்டு

கைகட்டி நின்றார்கள் கனமான நாட்டாரும்
களித்தின்னுமல்லனவன் கண்ணுருட்டி தான்முழித்
து, முட்டைபோல்கண்ணிரண்டும் முழித்துவிழியுருட்
டி, கொட்டாவியிட்டுக் குறிப்புடன்வாய்திறக்கையிலே
பல்லுவொருமுழமாம் பருத்தசுரக்காய்போலே
கண்டானேமல்லனவன் காளிமக்கள்சேவகத்தை
கண்டார்கள் நாட்டார்கள் கால்நடுங்கிகைநடுங்கி
பயப்படவேண்டாமென்று பரிவுடனேகையமர்த்தி
நாட்டார்கள்கிட்டவந்து நலமுடனேமல்லனுந்தான்
என்னவரங்கேட்கவந்தீர் இயல்பான நாட்டாரே
ஒளியாமற்றானு முள்ளபடிசொல்லுமென்றான்
எல்லோரும்வந்தசேதி எனக்கரியச் சொல்லுமென்றா
ன், நாங்கள்வந்தசேதி நன்றாகச்சொல்லுகிறோம்
நெல்விவள நாடு நிகரிலாக்கோனாடு
கொள்ளைக்குப் போகவேணும் குணமாய்வரங்கொடை
யா, என்றுசொல்லிகேட்கையிலே ஏதுசொல்வான்மல்
லனுந்தான், சாப்பிட்டுச்சொல்லுகிறேன் சற்றேபொ
றுங்களென்று, மண்டியிட்டுவாய்திறந்து வகையாய்
களியுருண்டை, எடுத்தெடுத்துபோட்டானே இன்பமு
டன்மல்லனுந்தான், நெல்லரிசிசோறும் நேராய்க்கி
டாக்கறியும், சுட்டுவைத்தக்கோழி சுகமாகமுன்னூறும்
இத்தனையுந்தின்று இனியமதுக்குடங்கள்
நூறையுமப்போது நுகர்ந்தானரைநொடியில்
இத்தனையுந்தின்று ஏதுசொல்வான்மல்லனுந்தான்
எங்கடா நாட்டாரே என்வயதுரொம்பலையே
கால்வயறுகூட காணிலியேயென்றுசொல்லி
தண்ணீருதாகந் தானாகியப்போது
காவேரியாற்றுக் கரையோரம்வந்தலவோ
உறிஞ்சினான்தண்ணீர் ஒருகாண்டியில்லாமல்
அரைவயறுநிரம்பி அடவாகயோடிவந்து
இதுதானோபூசை இன்னமுண்டோ நாட்டாரே
நாட்டார்களப்போது நடுநடுங்கியேதுசொல்வார்



கொள்ளைபலித்துக் குணமுடனேவந்தாக்கால்
வேண்டியபூசை விதமாகவேகொடுப்போம்
என்றுசொல்லிச்சொல்ல ஏதுசொல்வான் மல்லனுந்
தான், நம்முடையகாவலது நாடவினிக்கூடாது
சங்கமருமேகண்டால் சங்கரிப்பான்தப்பாது
போனால்பிழையீர்கள் பொல்லாதவேட்டுவரே
எனைகேட்டதற்காக இன்னமொன்றுசொல்லுகிறேன்
பாதியிரவில் பதினைந்துநாழிகையில்
ஒருவறறியாமல் ஓடியேகொள்ளையிட்டு
வாங்களென்றுசொல்லி வரங்கொடுத்தான் மல்லனுந்
தான், அப்படியே நல்லதென்று அடிபணிந்துதென
டனிட்டு, வந்துமேவேட்டுவர்கள் வகையாகக்கூட்டமி
ட்டு, வெள்ளிக்கிழமை விரும்பிபயணமென்று
கட்டுசோர்கட்டி கடுகப்பயணமென்று
நாய்பிடிக்கும்பயல்களைப்போல் நாலாயிரங்கோடி
சாயந்தரவேளை தானேபுறப்பட்டார்கள்
பொழுதுபோனபின்பு போனார்கள்வேடுவர்கள்
பாதிநல்லராத்திரியில் பாங்கானவேடுதளம்
பச்சனாமுதலிமகள் பாங்காய்ருதுவாகி
குடிசிலிருந்தவளை கூட்டமிட்டுவேடுதளம்
மூடுபல்லக்கில்வைத்து முழிக்காமலேதூக்கி
வேண்டியகொள்ளையெல்லாம் விதமாகத்தானுமிட்டு
மதுக்கரைச்செல்லி வழிதனிலேவாறமல்
கூனூர்வழியாகக் கூட்டமிட்டுவேடுதளம்
தடங்கள்தெரியாமல் தப்பியங்கேவேடுதளம்
விடியவொருஜாமம் விதமாயிருக்கையிலே
வனங்களெல்லாஞ்சுத்தி வழிகள்தெறியாமல்
தன்னாறுஎல்லை தயவாய்சுமையிறங்கி
மூடுபல்லக்கை முன்னாலேதானும்வைத்து
விளையாடிப்போவோமென்று விபரமில்லாவேட்டுவர்
கள், தட்டுக்காரங்கட்டுவாருந் தயவாயிருப்பாரும்
சுடுகுடுப்பான்போடுவாரும் சந்தோஷம்பேசுவாரும்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே

வேட்டுவர்கள் பொன்னருடசீமையில் கொள்ளையிட்டு
பச்சணுமுதலி மகளை சிறையெடுத்துக் கொண்டுபோய்
வனத்தில்வைத்து விளையாடும்போதுபச்சணுமுதலி
மகள் நித்திரைதெளிந்து புலம்புகிறசத்தங்கேட்டு
தங்காள் அண்ணமாரிடம் சொல்வது.

பச்சணுமுதலிமகள் பாங்காகக்கண்முழித்து
நித்திரைதெளிந்தல்லவோ நினைவுதடுமாறி
பல்லாக்கைத்தான் திறந்து பார்த்தாளேமெள்ளவங்கே
வனத்தையுங்கண்டு வகையாகப்பெண்மயிலாள்
இனத்தையுங்காணுமல் ஏங்கிமுகம்வாடி
ண்டாளேவேடுதளம் காதலியுமப்போது
மனதுமிகவாடி மாதுபுலம்புகிருள்
அப்யோசிவனே ஆதிமகாதேவா
என்செய்வேன்பாவி யெம்பெருமாளீஸ்வரியே
இனத்தையறியாமல் எத்தனையுந்தானெடுத்து
கொண்டுவந்துவிட்டாரே கொடியநல்லவேடுவரும்
எந்தன் தலைவிதியோ வென்றுமிகவலரி
முகத்திலறைந்துகொண்டு முக்கணனுர்தஞ்சமென்று
மார்பிலறைந்துகொண்டாள் மகாதேவர்தஞ்சமென்ரு
மாரளவுகண்ணீரை மங்கைநல்லாள்விட்டழுதாள் [ள்
தங்காவபயமென்று தான்ழுதாள்மங்கையரும்
பொன்னருக்கபயமென்று பொற்கொடியுந்தானழுதா
சங்கருக்கபயமென்று தையலருந்தானழுதாள் [ள்
அபயமென்றசத்தம் அருமையாய்க்கேட்குதங்கே
செப்பூசிகொண்டு செவியால்பிடித்தாப்போல்
உடுக்கூசிகொண்டு யுட்செவியில்விட்டாப்போல்
கேட்டுதே அப்போது கிளிமொழியாள்தங்காளுக்கு [து
திடுக்கென்றெழுந்திருந்தாள் தேன்மொழியாளப்போ
சரேலென்றெழுந்திருந்தாள் தையநல்லாள்நாயகமும்
அன்னலுஞ்சல்விட்டிறங்கி அலறியேயோடிவந்து
பொன்னலுஞ் சல்விட்டிறங்கி பொற்கொடியும்வந்து
நின்று, சொந்தஅண்ணவீட்டுக்குசுந்தரியுமோடிவந்து



சின்னண்ணுஎன்பிறவி பேர்பெரியராசாவே
சீமைக்கபகேடு சீக்கிரமேவந்துதையா
வேஞெதெரியாது எந்தனிடசெவியால்
ஆரோவொருமங்கை அழுதுபுலம்புஞ்சத்தம்
என்செவியில்தான்கேட்டு இதமாகவோடிவந்தேன்
இப்படிக்குச்சொல்லி யிருக்குமந்தவேளையிலே

ஊரார்கள்கொள்ளை போச்சுதென்று அண்ணமா
ரிடத்தில் சொல்லி அண்ணமார்கள் வேடுவர்
படைவெட்டிக் கொள்ளையை மீட்டிவந்
து ஊராருக்கொடுத்தல்.

ஊராருமோடிவந்து வுத்தமர்கள்முன்னுலே
அலறிமிகவழுது அனைவோருமேதுசொல்வார்
நாடுகொள்ளைபோச்சுதே ராஜாவேயென்னசெய்வோம்
எப்படிதான்பிழைப்போம் என்றுமேதானழுதார்
அந்தமொழிகேட்டு ஆக்கரித்துதம்பிசங்கன்
பொன்னருந்தம்பியரும் பொங்கிமிகக்கோபமதாய்
அஞ்சாதேவேடுவரை அரும்புசெய்தவேடுவரை
வெட்டிக்கறுவறுத்து மீட்டுவந்துநான்தருவேன்
என்றுமேசொல்லி யெறிபறந்துகண்சிவந்து
அத்தைபிள்ளைதம்பியரை அன்புடனேதானழைத்து
கச்சைகட்டி ஆயுதமும் கடுகவேதானெடுத்து
பொன்வில்லைகைபிடித்து புகழுடனே அம்பெடுத்து
வெள்ளிக்கட்டுவில்லெடுத்து விதமான அம்பெடுத்து
சாம்புவனைத்தானழைத்து தமுக்கடிக்கச்சொன்னுர்கள்
அடித்தசத்தங்கேட்டு ஆனபடைகூட்டமிட்டார்
கோட்டைக்குகாவல் குதிரைபடைசேனைவைத்தார்
தன்காட்டுக்காவல் தானிருந்தார்பொன்னழகர்
சிறந்ததளத்தையெல்லாம் சீக்கிரமாய்தானிறுத்தி
தலைக்கோழிகூவுமுன்னே தம்பிசங்கன் அத்தைபிள்ளை
சாம்புவனைக்கூட்டித் தானடந்தான் அன்னேரம்
மூவர்களுமோடி மூர்க்கமுடன்பார்க்கையிலே

கெக்கலிகைபோட்டு கெலித்துவிளையாடுமுறசை
தம்பிசங்கன்செவியால் தான்கேட்டான்கோபமிஞ்சி
மீசைதுடித்திடுமாம் மின்கோபம்வந்திடுமாம்
ஆகட்டுமென்றுமே அதட்டியேதம்பிசங்கன்
தடத்தில்குழுபாறையிலே சாம்புவனைக்காவல்வைத்து
தம்பிசங்கன்அத்தைபிள்ளை தானிருவருங்கூட்டி
அவர்களுக்குமுன்னாலே ஆனதொருசங்கன்புதை
சங்கன்புதையிலே தான்போய்தம்பிசங்கன்
அம்மான்பெருமாளும் அடங்கிமிகத்தானிருந்து
புனுகுசவ்வாது போதவேதானணிந்து
சவ்வாதுபரிமளங்கள் தான்மிகுந்துபூசினதால்
ஆடுகிறவேட்டுவற்கு அவ்வாசம்வீசுறது
ஆரடாஅண்ணமாரே அரியபுனுகுவாசம்
சவ்வாதுவாசம் தனித்தனியேவீசுதடா
புனுகுபூனையிந்தப் புதைக்குள்ளிருக்குதடா
சவ்வாதுபிள்ளையிந்த சங்கிலிலிருக்குதடா
புதையைசுத்திவாங்களடா புனுகுபூனைபிடிப்போம்
என்றுசொல்லிவேடுவர்கள் யெல்லோரும்தடியெடுத்து
புதையைகலக்கையிலே புலியரும்பிணைப்போலே
வேங்கைகுமிரிடவே விழுந்தார்கள்வேடுவர்கள்
கால்கள்தடுமாறி கலங்கியங்கேவிழுவாரும்
சிறுபுலித்தம்பிசங்கன் சீக்கிரமாய்த்தான்பார்த்து
அம்மான்பெருமாளும் ஆக்கரித்துப்பற்கடித்து
வீசினான்வேட்டுவரை வெள்ளரிக்காய்ப்போலே
வெள்ளிகட்டுவேலெடுத்து வீரிட்டுக்குத்திடுவார்
பன்றிவேலித்தானெடுத்து பதரிடவேகுத்திடுவார்
அப்போதுவேடுபடை அலறிமிகப்பிரண்டு
அய்யோசிவனேயென்று அலறிவிழுவாரும்
இந்தநல்லகொள்ளைக்கு ஏன்வந்தோமென்பாரும்
மூட்டைகளைத்தான்போட்டு முடுகியங்கேவோடுவாரும்
கொள்ளைக்குவந்திடத்தில் குடிகேடுவந்துதென்று
போட்டதுபோட்டாற்போல் புலம்பியங்கேவோடுவா



ரும், குறிக்காட்டிகுறிக்காட்டிக் குடல்சரியக்குத்திடவே
முரிந்துதேவேடுதளம் முக்கண்ணுக்குரிச்சிமட்டும்
குமுருபாறைவழிதனிலே ஓடுகிறவேடுவரை
சாம்பன்குருக்காட்டித் தடமறிந்துகொண்டானே
குலவைவிட்டுச்சாம்பானும் குருகாட்டிக்கொண்டானே
ஐயோசுவாமியென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
கும்பிட்டவேடுவரை கொடியதொருசாம்பானும்
சீருவைத்தானுருவி சினத்துமேசாம்பானும்
மூக்குகளைத்தான்பிடித்து முடிக்கியறுத்துவிட்டான்
வந்தவந்தவேட்டுவரை வகையாகமூக்கறிந்தான்
விடாதேவிடாதேயென்று வெட்டித்துறத்திடவே
ஆயிரமூக்கறிந்து அடவாய்க்குவித்துவிட்டான்
தம்பிசங்கன்வந்து தயவாகச்சாம்புவனை
விட்டுவிடுவேடுவரை வெட்டவினிவேண்டாம்
போய்பிழைக்கட்டும் பொல்லாதவேடுவர்கள்
என்றுசொல்லிக்கேட்டு இதமாகவிட்டுவிட்டான்
குவித்ததொருமூக்கையெல்லாங் கொடியதொருசாம்பு
வனும், தோரணமாய்க்கோர்த்து சுறுக்காகக்கொண்டு
வந்து, பூரணமாகவல்லோ புனிதனுமூக்கறையன்
மூக்கறையம்மனுக்கு முன்னாலேகட்டினானே
சாமிதனைப்பணிந்து சாம்புவனுமப்போது
தம்பிசங்கன்முன்னாலே சாம்பன்பணிந்துநின்றான்
அத்தைபிள்ளைதன்னுடனே அன்பாகமூவர்களும்
வந்ததளத்திடத்தில் வகையாகமூவர்களும்
கொள்ளைமுதலையெல்லாம் கொடுத்துஅனுப்பிவிட்டு
பச்சணுமுதலிமகள் பாங்கானதங்கையரே
மூடுபல்லாக்குடனே முன்னுக்கெடுத்துவந்து
பச்சணுமுதலியுட பாங்கானஅரண்மனைக்கு
கொடுத்துஅனுப்பிவிட்டு குணமானதம்பிசங்கன்
தங்களரண்மனைக்குத் தான்வந்தாரப்போது
அண்ணருடன்சொல்லி அன்பாகவீற்றிருந்தார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

### தலையூருக்காளிபன்றி பொன்னழகர் சோலையை அழித்தது.

மேனாட்டுவேடுவர்கள் வீற்றிருக்கும்நாளையிலே
மாரிமருந்து மழைகளுமில்லாமல்
தலையூருக்காளியவள் தானிருக்கும்நாளையிலே
இட்டபயிர்களெல்லாம் இதமுடனே தான்கருகி
பூண்டுஞ்செடிகளும் பூமிகளுந்தான்வரண்டு
மழைமாரியில்லாமல் வாடியிருக்கையிலே
பூமிவரண்டு புனலுமிகவில்லாமல்
தலையூருக்காளி தான்வளர்க்கும்பன்றியது
எழுபதடிக்கொம்பன் இன்பமுள்ளபன்றியது
தலையூருக்காளி தன்னாட்டைத்தான்கடந்து
இறையுமதுசிக்காமல் ஏங்கியேபன்றியது
நெல்லிவளநாட்டை நேராகத்தானோக்கி
சிற்றாலைபட்டணத்தில் சீக்கிரமாய்வந்துநின்று
வயல்களிலேதான்புகுந்து வறுமையுள்ளபன்றியது
செந்நெல்கதிரையெல்லாம் தின்றளித்துப்பன்றியது
பொன்னழகர்பூங்காவில் புகுந்துபடுத்துறங்கும்
பகல்முப்பதுவும் படுத்துறங்கும்பன்றியது
இரவிலேதானெழுந்து இனியதொருகதிரையெல்லாம்
தின்றுகருவறுத்து திரும்பிவந்துபூங்காவில்
படுத்துறங்கித்தானிருக்கும் பாங்கானபன்றியது
இப்படிபன்றியது இருக்குமந்தவேளையிலே
பூக்குடலைக்கொண்டு பூவெடுக்கும்நம்பியானும்
பன்றியருகில்வந்து பறந்தோடிபூவெடுத்தான்
பன்றியைக்கண்டானே பார்ப்பானுமப்போது
அதப்பிடப்பன்றியது அய்யனுமேகீழ்விழுந்தான்
குத்திக்கிழித்ததே கொற்றவனார்பார்ப்பானை
குத்தியேகோளாறு கொடியபுண்ணாக்கியதே
பார்ப்பானெழுந்திருந்து பதறியங்கேயோடிவந்து
பொன்னருடன்சொல்லி பொங்கிமிகவழுதான்
பார்ப்பானுரைகேட்டுப் பதறிமிகச்சினந்து



பூங்காவனத்தைப்போய் பார்த்தாரேயன்னேரம்
பார்க்குமந்தவேளையிலே பலமானபன்றியது
சோலையெல்லாந்தானழித்து சுற்றிப்படுத்திருக்கும்
கோலத்தைக்கண்டு கோபித்துபொன்னருமே

### பொன்னழகர் சங்கர்பன்றியைக்கொல்லுதல்.

அந்தட்சணமே அடவாகவூரில்வந்து
ஆனைபடைசேனையெல்லாம் அனைவருமேகூட்டமிட்
நாங்கள்பதினாயிரம் ராணுவங்கள்கூட்டமிட்டு [டு
வெளியிலேவந்து விருப்பமாய்க்கூட்டமிட்டு
பூந்தோட்டம்தானோக்கி போகின்றவேளையிலே
தங்கையரும்வந்து தயவுடனேபேசுசொல்வாள்
சங்கரீர்பொன்னழகர் தமிழ்வீமாஅண்ணாவே
வரத்தால்பிறந்தது மாகாளிபன்றியது
வெள்ளிக்குழம்பன் வெகுசயனப்பன்றியது
அறுபதடிபாயும் யானைபலமுள்ளதுதான்
தியானித்துப்பார்த்து திட்டமுடன்போய்வாரும்
அச்சேதிதான்கேட்டு ஆண்மையுள்ளசங்கருந்தான்
கேட்டாரேசங்கரும் கீர்த்திபெற்றமுடிமன்னன்
அரண்மனைக்கிஆளனுப்பி ஆனதொருதம்பிசங்கன்
ஏழானைக்கையிலே இருப்புலக்கைதான்கொடுத்து
படைமுரசைத்தான்முழக்கி பாங்காகப்போகையிலே
தமுக்கோசைதான்கேட்டு தானெழுந்துபன்றியது
அப்பாலொருவனத்தில் அன்பாகபோனதுவே
பார்த்தார்கள்சோலையிலே பன்றிதனைக்காணமல்
தாரையெடுத்து தம்பிசங்கன்தான்தொடர்ந்தான்
மண்மேல்நடந்து ஆதரிக்கும்மங்கைநல்லாள்சித்துனிதா
தாரைமேலேதொடர்ந்து தானங்கேபோகையிலே [ய்
வனத்தில்படுத்துறங்கும்மாகாளிபன்றிதனை
கண்டுமேயெல்லோரும் கருமலைக்கியொப்பெனவே
யானையைவிட்டார்கள் அடித்துமேகொல்லுமென்று
கொள்ளடித்தாப்போலே குமுருதேயானைகள்தான்
மலைச்செல்லுகடிக்குதென்று மகிழ்ந்துவுறங்கிடும்

உறங்கியேகண்விழித்து வுருமிமிகப்பார்த்து
யானையைக்கண்டு அதம்பியேபன்றியது
மலைகள்சிலையோட மண்டியிட்டுதானெழுந்து
ஆக்கரித்துபன்றியது அப்பாலேபோகையிலே
நாய்களெல்லாமோடி நலமாய்க்குருக்காட்ட
பேய்கள்போலலைமோதி பிரண்டுகிடக்கையிலே
நாய்களைத்தான்மீறி நலமாகவேபோயி
வீரமலைச்சோங்கில் விதமாயபடுத்துறங்கும்
தாரையெடுத்து தான்போயிக்கண்டல்லவோ
ஏழானைசையிலே இருப்புலக்கைதான்கொடுத்து
போடுமென்றுவிட்டானே பொங்கியேதம்பிசங்கன்
ஏவிவிட்டயானைகளும் இருப்புலக்கைதன்னாலே
பூமியதிர்ந்திடவே போட்டுதேயப்போது
கண்டுபேபன்றியது கிகைவேதானெழுந்து
வாலைமுறுக்கி வகையுடனேபோகையிலே
நாய்களெதிர்க்க நலமுடனேபன்றியுந்தான்
குடலைசரியக்குத்தி கொன்றுதே நாய்களைத்தான்
நாய்களைக்கொன்று நலமுடனேபோகையிலே
மீறிபேபோகுதென்று விசாரமுடன்றான்தொடர்ந்தார், தன்னூர்திசைநோக்கித் தான்போகுதென்றுசொல்
சித்துளிநாய்களைத்தான் சீக்கிரமாய்ஏவிவிட்டார் [லி
மானம்பார்த்துவூளையிட்டு மங்கைநல்லாள்சித்துளிநா
மின்னல்போல்மின்னி வேகமுடனோடி [ய்
காகமபரந்தார்போல் கடிகியேதானோடிவந்து
முடிக்கிக்குருக்காட்டி மூர்க்கமுடன்தானோடி
பார்த்துமெள்ளத் தான்மறைந்து பதுங்கிப்பிடித்ததுவே, பிறங்காலைப்பற்றி பிடித்திழுத்துக்கொண்டதுவே
இழுத்துடன்பன்றி ஏங்கிவீரிட்டதுவே
வீரிட்டசத்தமது விரும்பியேதான்கேட்டார்
கேட்டானேசத்தமது கிருபையுடன்தம்பிசங்கன்
ஓட்டமாயோடி ஒருநொடியில்மூவர்களும்
வெள்ளிகட்டுவேலை விக்முடனேதானெடுத்து



கண்டந்தபன்றியை கைதனிலேவேல்வாங்கி
குத்தினான் அப்போது குலவையிட்டுபன்றிதனை
அண்டம்சிலையோட அலரியேபன்றியது
தலையூருக்காளிக்கி அபயமென்றுவிழுந்ததுவே
பன்றியைக்குத்திப் பரிவாகதானெடுத்து
கறிக்கொம்புதானூதி கனகபடைக்கூட்டமிட்டு
பல்லாக்குமேலே பரிவுடனேசங்கருந்தான்
சித்துளிநாய்க்குட்டியைச் சிறப்புடனேதானும்வைத்து
பல்லக்குடனே பரிவாகத்தானடந்து [து
சிற்றூலைப்பட்டணமே சீக்கிரமாய்வந்தார்கள்
வந்துமேபன்றிதனை வகையாகத்தானிறக்கி
வாருதிணன்சதையும் வரிசையாய்த்தானரிந்து
பதினாயிரங்கூறு பாங்குடனேதான்போட்டார்
வீடுகள்தப்பாமல் உண்மையாய்த்தான்கொடுத்து
வரிசையுடனே வாழ்ந்திருக்கும்நாளையிலே

காளி பன்றியிறந்துபோன தறிந்து நெல்லிவள
நாட்டுக்குகொள்ளைக்கிப் போகயோசனைசெய்து
அசாரியனை அழைத்து சூதுபண்ணி பொன்
னரை வெள்ளாங்குளத்திற்கு அழைத்து
வரச் சொன்னது.

அபயமென்றசத்தம் அவன்காளிதன்செவியில்
உருக்குநாருசமது உருக்கிட்டபாவனைபோல்
செப்புநாருசம் செவியில்விட்டபாவனைபோல்
கேட்டந்தகாளிக்கி கிலேசமெத்தவுண்டாகி
மந்திரிக்கந்தரை வகையுடனேதானழைத்து
தானாபதிகள் தளகர்த்தர்கூட்டமிட்டு
வேடுபடைகள் மெத்தவேகூட்டமிட்டு
பன்றியைக்கொன்றானே பாலருகில்சங்கருந்தான்
நெல்லிவளநாட்டைக் கொள்ளையிடவே னுமினி
சிற்றூலைப்பட்டணத்தைச் சேரவேகொள்ளையிட
போகிறதுஎந்தவழி புத்திகளைச்சொல்லுமென்றான்
அப்போதளகர்த்தர ரனைவோருஞ்சொல்லுகிறார்

முன்னமேபோயி மூக்கறிந்துவந்தோம்
இன்னமும்போனால் எவர்பிழைக்கப்போறார்கள்
கொன்றுமடிப்பாரே குண்ணுடையான்மக்களுந்தான்
என்றுமேசொல்லயேதுசொல்வாள்காளியுந்தான்
ஏழைமதிவேட்டுவரே யிப்படித்தான்சொல்வாரோ
மாண்டுமடிந்தாலும் வைகுந்தம்போனாலும்
வேட்டுவர்கூட்டமெல்லாம் வேரறுந்துபோனாலும்
சண்டைகளும்செய்யாமல் தான்விடவேபோகாது
இன்னமொன்றுசொல்லுகிறேன் இறங்கிதமாய்க்கே
ளுங்கடா, செம்பனென்னுந்தட்டானைச் சீக்கிரமாய்த்
தானழைத்து, கொடியநல்லஆசாரிக்கூப்பிடவேவந்து
விட்டான், செம்பகுலஆசாரி சிறுகிணற்றுத்தட்டானு
ம், ஏனையாசுவாமி எனையழைத்தகாரியமேன்
செம்பத்தட்டான்கேழ்க்கச் செப்புவான்காளியவள்
நம்மிடபன்றிதனை நல்லதம்பிசங்கன்கொன்றான்
நாடுபடைகூடி நாமாள்வசிமையிலே
கொள்ளையிட்டுநாமவனைக் கொன்றுவரவேண்டும்
என்னஉபாயம் இதற்குநீசொல்லுமடா
என்றுசொல்லக்கேட்டு ஏதுசொல்வான்ஆசாரி
அப்படியானால் அடியேனுஞ்சொல்லுகிறேன்
பொய்யாளிபண்ணி பொன்னரிடமேபோயி
சதிசூதுசெய்து சத்தியத்திற்குள்ளாசி
வாறேன்ஐயாவே வகையுடனேஇப்போது
என்றுமேசொல்ல ஏதுசொல்வார்வேடுவரும்
அப்படியேவுள்ளார்க்கு அவனைமெள்ளக்கொண்டுவந்
தான், வேண்டும்வெகுமதிகள் விரும்பியேநான்தாரேன்
அப்படியேநல்லதென்று ஆசாரிதானெடுத்து
செம்பகுலஆசாரி சீக்கிரமாய்த்தானெழுந்து

ஆசாரிமாத்தினால் ஆளிபண்ணி மூலாம்பூசி
பொன்னடத்தில் கொண்டுவருகிறது.

மரணாளிதான்கடைந்து வாகானதட்டானும்
பொன்னால்மூலாம்பூசி பொய்யாளிவுண்டுபண்ணி



பொய்யாளிதானெடுத்துப் புரப்பட்டான்தட்டானும்
சிற்றாலைப்பட்டணத்துத் திசைநோக்கித்தானடந்தான்
வாறானொருவனுமாய் வழிதனிலேஆசாரி
செம்பகுலவாசாரி சிறுகிணற்றுத்தட்டானும்
சிற்றாலைப்பட்டணமே வந்தானேஆசாரி
பொய்யாளிதானெடுத்து பொழுதிரங்கும்வேளையிலே
பொன்னர்கொலுவில் புகழ்பெரியமண்டபத்தில்
கொலுவிருக்குமண்டபத்தில் கொண்டுவந்துதட்டானு
ம், மன்னனுக்குமுன்னேவந்துவகையாகத்தெண்டனி
ட்டான், எங்கிருந்துஎங்கேவந்தாய் என்றாரேபொன்
னருந்தான், தட்டானுமப்போது தாழ்ந்துமிகவேது
சொல்வான், கரிகாலச்சோழன் கனகமுடிவேந்தனுக்கு
பொனாளிபண்ண போய்வந்தேன்ஆண்டவனே
வுறையூருபட்டணம்யான்உத்தமனேயென்றுசொன்னா
ன், இவ்விடத்தில்வந்ததென்னவென்றார்பொன்னருந்
தான், அப்பவேஆச்சாரி அடிபணிந்துதெண்டனிட்டு
ஆண்டவனேகேளும் அடியேனான்சொல்லுகிறேன்
கரிகாலச்சோழன் காரணமாய்எனையழைத்து
பொன்னாளிவேணுமென்று பொருள்மிகவேதான்கொ
டுத்து, செய்துவரச்சொன்னார்கள் திறமாகவெந்தனைத்
தான், வாங்கியேயானும் வகையானதென்மதுரை
திரனவல்லிமட்டும் சீக்கிரமாய்நான்போயி
தங்கத்தைவாங்கிதான் சமைத்தேனான்பொன்னாளி
கொண்டுபோறேன்சாமி குறிப்பானராசாவே
பொழுதுகளும்போயினதால் போகப்பயமாகுதைய
சமைத்துவந்தபொன்னாளி தனைவாங்கிவைத்திருந்து
வீடியகாலம்வந்துவிட்டால் விருப்பமுடன்போய்விடு
வேன், என்றுசொல்லிபொன்னாளியெடுத்தவனுமுன்
னைவைத்தான், தங்கையரண்மனையில் தயவுடனேவை
த்திரென்றார், தங்கையைப்பார்த்து தயவுடனேயேது
சொல்வான், மாறாட்டம்பண்ண வந்ததொருபொன்னா

ளி,வந்தவகையறியாமல் வாய்மறந்துபேசாதே
சதிசெய்யப்பொன்னுளித் தட்டானும்கொண்டுவந்தா
ன், வெட்டிவிருந்திடுங்கள் வேட்டகாரவீரனுக்கு
சீமைதனைபாழாக்கச்செம்பதட்டான்கொண்டுவந்தான்
ஊரைக்கெடுக்க யுளவாகத்தட்டானும்
வந்தகருமமிது வகையான அண்ணாவி

தட்டான் கொண்டுவந்த பொன்னுளியை
பொன்னரிடத்தில் வைத்திருக்கச் சொ
ல்ல தங்கைவேண்டாமென்று தடுத்
துச்சொல்லி வருகிறது.

கேடுவரும்போது கெடுமதிகள்தோற்றுது
இனிமேல்படும்பாடு எவரறியப்போறார்கள்
என்புத்திகேளாமல்அண்ணா யேளிதங்கள்பண்ணாதே
உத்தமாபத்தினியேஎன் னுடர்ப்பிறப்பேதங்கையரே
நம்பியேதட்டானு நம்மிடத்தில்வந்தவனை
கொந்தார்க்குழலியரே அவனைக்கொன்றுகுலைசெய்வா
அந்தரமாய்வந்தவனை அடித்துத்துரத்துவாரோ[ரோ
அடைக்கலமாய்வந்தவனை அனியாயம்செய்யலாமோ
பெண்புத்தியாலே பெருமாள்பிள்ளைப்போனார்
சீதையிடசொல்கேட்டு செம்மானின்பின்போனார்
இலட்சுமியாள்சொற்கேட்டு இலட்சுமணரும்பின்போ
னார், அந்தக்கதைபோலேதட்டானை ஆக்கினைகள்செய்
வாரோ, மண்ணுள்ளமட்டும் வளரும்அபகீர்த்தி
ஆதீனம்போனாலும்மை நம்மதடைக்கலமாய்வந்த
நாடுபரிபோனாலும் நம்மைநம்பிவந்தவனை [வனை
அடைக்கலமாய்வந்தவனை அழிவுசெய்யப்போகாது
பெண்பிறந்ததங்கையரே பேர்பெரியநாயகியே
அறியாபிறவியரே அரண்மனைக்குப்போய்ச்சேரும்
போமென்றசொற்கேட்டு பொற்கொடியாளேதுசொல்
வாள், உங்கள்விதியி லுள்ளபடிதான்முடியும்
என்சொல்லைக்கேட்டீரோ என்பிறவிஅண்ணாவே
நம்மிடசொல்லைக்கேட்பீரோ நலமுடனேஅண்ணாவே



அரசுநிலைக்கி அபகேடுவந்திருக்க
விதியின்பயனை விலக்கவினிகூடாது
என்றுசொல்லித்தங்கையும்யெழுந்திருந்து அப்போது
சீறிவருநாகமெனச் சிவந்துமேகண்சிவந்து
ஏழாந்தளமாம் ஏறும்பேறுமண்டபத்தில்
பஞ்சணைமெத்தையின்மேல் பைங்கொடியாள்போயிரு
ந்தாள், தட்டானுங்கொண்டுவந்த தங்கப்பொன்னுளி
யைத்தான், தங்கையரண்மனையில் தான்வாங்கிவையு
மென்றாள், அப்படியேதங்கையரும் அரண்மனையில்தா
னும்வைத்து, உட்கூதவைத்தாளுமிட்டு உறுதியுடன்சா
த்தி, தாதியரைநம்பாமல் தாங்களும்தாள்பூட்டி
தட்டானைதானழைத்து தயவுடனேகூட்டிவந்து
அன்பாயிலைபோட்டு அசனமதுதான்படைத்து
உண்ணுமென்றுசொல்லி உபசரித்தார்தட்டானை
அசனமதுசெய்து ஆலித்தெழுந்திருந்து
நமக்குகைவசமாச்சுதென்று கனமுடனேதட்டானும்
காராளர்பெருமையெல்லாம் கண்ணாள தன்னாலே
யென்றுபெரியோர்கள் இசைத்ததுமெய்யாச்சுதென்று
மனதிலேதானினைந்து மகிழ்ச்சியாய்உண்டதின்பின்
அரிபிளவுவெள்ளியும் அள்ளியேதான்கொடுத்தார்
வாங்கியேதட்டானும் வாயிரம்பத்தான்போட்டு
சித்திரகூடமண்டபத்தில் திறமுடனேபோய்ப்படுத்தா
ன், நாலுசாமம்சென்று நலமாய்விடிந்தபின்பு
ஆற்றங்கரைக்கிப்போய் அடவாகப்பல்விளக்கி
காலுமுகம்சுத்திசெய்து கபடுமனதில்வைத்து
முந்தாணிகொண்டு முகந்துநீர்தான்துடைத்து
பொன்னருடகொலுவில் பிரியமுடனோடிவந்து
தெண்டனிட்டுகைதொழுது தெரிசனம்கண்டேனென்
றான், கண்டுதொழுது கபடனுமேயேதுசொல்வான்
நம்ம-ஆசாரச்சாவடியில் நானசைந்துநித்திரைசெய்ய
லிலே,சொற்பனங்கள்கண்டதைநான்சொல்லுகிறேன்
கேளுமையா,வைத்தஅடக்கலமும்வகைமோசம்போக

க்கண்டேன்,என்னை-அடித்துப்பரிக்கக்கண்டேன் அனி
யாயம்செய்யக்கண்டேன், கரிகாலச்சோழனுக்குநான் க
ள்ளனாமேயாகக்கண்டேன், விலைமதிக்காப்பொன்னாளி
வேடுபரிபோகக்கண்டேன், ஆதலாலிப்போது ஐயனே
போகவேண்டும், நான்வைத்தஅடக்கலத்தை வகையுட
னேதாருமென்றான், அப்போதுபொன்னாண்டார் அறி
யதங்கைமுன்னோடி, என்பிறவிதங்கையென றெழுப்பி
னார்பொன்னாண்டார், தங்கையெழுந்திருந்து தயவுட
னேஅப்போது, அன்னவூஞ்சல்விட்டிறங்கி அரியபிற
வியரும், தாளைத்திறந்து தங்கையும்நிற்கையிலே
பொன்னரும்நாளிதனை போதவேதாருமென்றார்
மங்கிச்சுடர்பட்டு மரனாளியாயிருக்க [ர்
அப்போதுதங்கையும்அண்ணார்கையில்தான்கொடுத்தா
தன்கையிலேவாங்கிப்போனார் தட்டான்கையில்கொடுத்
தார்,இருக்கையிலேவாங்கிதட்டான் ஏங்கிமுகம்வாடி
படியானனாளிதனைப் பழிகாரத்தட்டானும்
கற்றூணிற்றானிடித்தான் கருவாளிதட்டானும்
மொளுநெல்லச்சாவடியில்மூட்டிக்கொண்டான்தட்டா
னும்,மார்மேலடித்துக்கொண்டுமண்மேற்பிரண்டழுதா
ன், தன்முகத்திலறைந்துக்கொண்டு தயாபரனேசாட்சி
யென்றான், தங்கத்தினால்சமைத்த தாள்வில்லாபொன்
னாளி, மூத்துநவரத்தினத்தால் முடித்துவைத்தபொன்
னாளி,கோமேதகநீலம் குறித்துவைத்தபொன்னாளி
பொற்கம்பியாலேநான் போதவேசெய்துவந்தேன்
விளக்கமுள்ளபொன்னாளி வேலைமிகச்செய்துவந்தேன்

தங்கைசொன்னதை கேளாமல் பொன்னாளியை
வாங்கி வைத்திருக்க விடிந்து தட்டான்வாங்
கிவைத்ததல்லவென்று சத்தியத்திற்குப்
பொன்னரை சம்மதித்துப்போனது.

கரிகாலச்சோழனுக்குக் கனமுடனேகொண்டுவந்தேன்
மரனாளிதான்கொடுத்து வகைமோசம்செய்தீரே
கண்டகினாவெனக்கு கைமேல்பலித்துதையா



என்னுடையகட்டுமில்லை எவர்கள்துணையுமில்லை
வைத்தஅடக்கலத்தை வயிரெரியக்கொண்டீரே
என்னை-அடித்துப்பரித்தீரே அனியாயஞ்செய்தீரே
என்றுசொல்லிதட்டானும் எடுத்தானேஓட்டமுந்தான்
ஓடுகிறதட்டானேபொன்னர் யொருநொடியிற்றானழை
த்து, நீ-வைத்ததல்லவென்றாயே வயணமுள்ளஆசாரி
உனக்கென்னனிண்ணயங்கள் உரைக்கவேவேணுமெ
ன்றார், யென்றுசொல்லத்தட்டானு மிருதோளும்பூரித்
து, வெள்ளாங்குளத்தடியில் விதமானசத்தியங்கள்
செய்துதரவேண்டுமென்றான் செம்பகுலவாசாரி
நல்லதென்றுசம்மதித்தார்நலமானபொன்னருந்தான்
சத்தியமென்றசத்தம் சங்கருமேதான்கேட்டு
பொட்டிமகன்தட்டானும் பிழைமோசம்செய்தானே
யென்றுதம்பிசங்கன் யெரிபறந்துகண்சிவந்து
வெட்டவேண்டும்தட்டானை வீரவாள்தன்னாலே
பீரங்கிகத்தி பெரியகத்திதானெடுத்தான்
தட்டானுமப்போது தடுமாறியேவிழுந்தான்
விழுந்தெழுந்துதட்டான் விதமாகத்தானோடி
பொன்னரிடுப்பை போதவேகட்டிக்கொண்டான்
தம்பிசங்கனப்போது தாண்டியேதான்குதித்து
வெட்டுகிறேன்அண்ணா நீ விட்டுவிடுதட்டானை
யென்றுசொல்லிதம்பிசங்கன் ஏரிட்டுதான்பார்த்து
காலோடேதான்கழிந்தான் கருவாளிதட்டானும்
பொன்னருங்கையமர்த்தி போர்வீமர்தம்பிசங்கர்
கோபம்கொடியவளே கோநாட்டுபரிநகுலா
கரிகாலச்சோழனுக்கு கனமுடனேபோரவன்னம்
நாமடித்துபரித்தாரென்று லபகீர்த்திவந்துவிடும்
வெட்டிபரித்தரென்றால் வீண்கீர்த்திவந்துவிடும்.
அவன்கேட்டநிண்ணயங்க ளன்பாகச்செய்திடலாம்
நாளைப்பொழுதில் நல்லதிங்கட்கிழமையிலே
நிட்சையங்கள்செய்துதாரேன் நிற்காதேஆசாரி
திங்கட்கிழமைக்கித் திரும்பிவரச்சொன்னார்கள்

தம்பிசங்கன் நிற்கிறதை தான்கண்டுஆசாரி
கால்நடுங்கிகைநடுங்கி கருத்துடனேயேது சொல்வான்
அப்படியே நான்வருவே னாண்டவனேசாமியென்றான்
மறுக்காலொருவார்த்தை மனதிலேதானினைந்து
அஞ்சிப்பயந்து அடிபணிந்துதெண்டனிட்டு
பொன்னரைப்பார்த்துப் பொய்த்தட்டான் சொல்லுகி
றான், கோனாட்டுக்கொற்றவனே குண்ணுடையான்தன்
மகனே, வைகைநாடாளும் மகாராசாஎன்துரையே
பேருக்கோவேளாழன் புகழுக்கோதர்மரையா
வார்த்தைக்கோவேளாழன் வழக்குக்கோதர்மரையா
பூவிரண்டுபூர்த்தாலும் நாவிரண்டுபூர்க்காது
நம்பிவருவேன் நல்லதொருதிங்களிலே
என்றுசொல்லித்தட்டானும் எடுத்தானேயோட்டமுந்
தான், திரும்பிமிகப்பாராமல் திசைகேடன்போனானே
போனானேதட்டானும் பொன்னரைக்கைவசமாக்கி
புலிவாயிலகப்பட்ட புள்ளிமான்போனதுபோல்
மான்பாரைசேவல் மனக்கனவுதான்கடந்து
காட்டுதிசைநோக்கி கடுகிநடந்தானே
தட்டான்வருகிற தடத்தன்வழியாக
எருதுமேல்பொதிபோட்டு செட்டிமாரெதிரேவருகையி
லே, தட்டானைக்கட்டு தான்பொதியைவீசினதே
கண்டுசெட்டிமார்கள் கடுகியேயோடிவந்து
வாரும்பிள்ளாயாசாரி வளமாய்பொதியெடுத்து
யெருதுமேல்போடுமென்றால் இனியுசெட்டிமார்களெ
ல்லாம், தட்டானுமென்னாலே தானாகாதென்றானே
யெருதைபிடியுமென்று இனியதட்டான்கைகொடுத்தா
ன், நெடுங்கயற்றைதான்பிடித்து நெடுமரம்போல்நிற்
கையிலே, நின்றதொருதட்டானை நின்வழியபாய்ந்தது
வே, அடிவயற்றில்காயம்பட்டு அலறியேதட்டானும்
கீழேவிழுந்தானே கெருவமுள்ளதட்டானும்
விழுந்ததட்டான்மேலெருது மிரண்டுமிகப்பாய்ந்தது
வே, குந்திமிகப்பாயலிலே கூவென்றுதட்டானும்



ஐயையோசெட்டியாரே அனியாயமாய்க்குத்துதடா
வீணிலேஜீவன் விதமாகப்போகுதடா
யென்றுதட்டான்சொல்லையிலேஎருதைமிகப்பிடித்தார்
உருண்டெழுந்துதட்டானும்உளரியேஎன்னசொல்வா
ன், பூண்டவிதிப்படியோ பொன்னருடபாவமிதோ
வேட்டுவர்சொற்கேட்டு விதமுடனேவந்தோமே
வழியில்சனியன் வந்துதொடர்ந்ததென்றான்
மண்ணில்பிரண்டுதட்டான் மயக்கந்தெளிந்தபின்பு
தடவியெழுந்திருந்து தன்னூருத்திசைநோக்கி
சத்தியத்துக்குள்ளாகத் தானாகிவந்தோமென்று
குஞ்சிரிப்புத்தான்சிரித்துக் கொண்டுமேதட்டானும்
நாற்கூணிதான்கடந்து நாட்டார்சபையில்வந்தான்
வந்ததட்டான்தனைப்பார்த்துக் வகையுடநாட்டாரும்
ஏதையாஆசாரி இந்தரத்தகுறிகளெல்லாம்
சிந்தைகலக்கமென்ன சிகப்புக்குறியென்னவென்றார்
வாருமையா நாட்டாரே இதுஎந்தவகைசொல்லுகிறே
ன், புத்தியுள்ளநாட்டில்ப்போய்ப் பொன்னரைக்கண்டு
மேதான், சதிமோசத்தாலே சத்தியத்திற்குள்ளாகி
திங்கட்கிழமையிலே செய்திடவேசம்மதித்தார்
சிங்கந்தின்வாயிலே சிக்கினஆனையைப்போல்
பங்கப்படுத்திவந்தேன் பாங்குள்ளபொன்னரைத்தான்
ஊரைவிட்டுக்காதவழி யோடிவருகையிலே
புலிவந்துயெதிர்த்ததுகாண் போர்மன்னாயெந்தனைத்
தான், கழுத்திலேகைபோட்டு கட்டிப்பிடிக்கையிலே
கால்நிகம்என்மேற்பட்டு காயங்களாச்சுதையா
பொட்டெனவேவீசினேன் போய்விழுந்துபுலியுமது
விழுந்துபுலியுமது மிரண்டோடிப்போச்சுதையா [ள்
யென்றுசொல்லத்தட்டான் ஏதுசொல்வார்நாட்டார்க
ஆகட்டுமாசாரி அந்தவழிகாட்டுமென்றார்
காட்டுமென்றசொற்கேட்டு கருவாளிதட்டானும்
குருட்டுமுழிமுழித்தான் கூறுகெட்டதட்டானும்
என்னமதியிருக்க என்னமதிநினைத்தோம்

இருந்தாலிருக்கட்டு மின்னமொருபொய்யுரைப்போம்
என்றுசொல்லிதட்டானுமியல்புடனே தான் துணிந்து
நான்-வந்ததிசையரியேன் வழிநடந்தகாடறியேன்
நான்-போனதிசையரியேன் போய்வந்தகாடறியேன்
என்றுசொல்லத்தட்டானும் ஏதுசொல்வார்நாட்டார்
கள், ஆகட்டுமாசாரி அந்தநல்லக்காரியமும்
நீ-போய்வந்தகாரியத்தை புகலுமடா ஆசாரி
ஆனால்கேள்சொல்லுகிறேன் அன்புள்ள நாட்டாரே
பொன்னிவள் நாட்டில்ப்போய் பொன்னரையுந்தெண்
டனிட்டு, அஞ்சிப்பயந்து அவர்களையுந்தான்வணங்கி
மாயப்பொன்னூளியினால் வசையுடனேயுட்படுத்தி
பொன்னரையுங்சங்கரையும் பொருந்தவேயுட்படுத்தி
நாளுந்தவணையிட்டு நான்வந்தேன் நாட்டாரே
இங்கிருந்தாலென்னாகு மியம்பக்கேள் நாட்டாரே
வையமலைமேற்புரமாய் வந்திரங்கவேணுமையா
அதிகலம்படையெடுத்து அங்கேநாம்போகவேணும்
எல்லோரும்பயணமா யிருக்கவேவேணுமென்றார்
என்றுசொல்லிதட்டா னெழுந்துவழிநடந்து
தாயார்மனைதனிலே தட்டானும்போம்புகுந்தான்

## தட்டான் பொன்னர் சம்மதித்ததை வேட்டுவற்குச் சொல்லிவிட்டு தாயாரிடத்தில்வந்துசொல்ல அவன்பெண்சாதி சண்டையிட்டு தாலியை அறுத்தெரிதல்.

அப்போதவன்தாயார் அவனைப்பார்த்தேதுரைப்பாள்
என்மகனே தம்பிஉன் னிடந்தனிலேயிக்காயம்
கள்ளிமுள்ளூகிழித்துதோ காயம்வந்தவாறேது
அல்லவம்மாதாயாரே அடியேன்வரும்வழியில்
புலியுமேவந்தெதிர்க்க பிடித்தடித்தேன்கையாலே
அந்தப்புலிநகங்கள் அங்கமெல்லாம்கீறிற்றம்மா
என்றமொழிகேட்டுமவன்பெண்சாதியேதுசொல்வாள்
அல்லகாண்என்கணவா யழகாகப்பேசாதே
உம்முடையசேவகத்தை இவ்வுலகம்அறியாதோ



வீண்பேச்சுபேசியிங்கே வெட்கங்கெட்டுப்போகாதே
இருட்டுவீட்டுக்குள்போனால் என்பிறகேவந்திடுவாய்
படுக்கையிலுள்ளேயொரு பாம்புயிருக்குதென்றால்
உடுத்ததுகில்ப்போட்டே போகிறஎன்கணவா
இப்பவுன்சேவகத்தை யேன்சும்மாபேசுகிறாய்
புலியிருக்குமிடந்தனிலே போகவுன்னாலாகுமோதான்
புலிவருகுதென்றால் போய்விடுமேயுன்னுயிர்தான்
என்றுமவள்சொல்ல எழுந்திருந்துகோபமதாய்
பெண்சாதிதன்னை பிடித்தடித்தான்தட்டானும்
அடிபட்டுத்தட்டாத்தி ஐயோசிவனேயென்று
போவாய்நீபாழாய் பொன்னருடவாளாலே
சாவாய்கெடுவாய் சங்கருடகைவாளால்
என்றுமேதட்டானை ஏசிப்பலவிதமாய்
மங்கிலியந்தனையறுத்துதட்டான் மார்மேலேவிட்டெரி
ந்தாள், தாலியறுத்தெரிந்து தரையில்விழுந்தழுதாள்
மண்ணில்ப்பிரண்டழுது மலையிலேபோய்புகுந்து
தள்ளிக்கதவடைத்துத் தாள்பூட்டிக்கொண்டாளே
மூக்காடுபோட்டுத்தட்டாத்தி மூலையிலேபோய்ப்படுத்தா
ள், அதின்பிறகுதட்டானும் அன்புடனேதாய்மனையில்
உண்டுபடுத்திருந்தான் யுளவாளித்தட்டானும்
மற்றுநாள்காலமேகாளி மகாசேனைதான்கூட்டி
வேலாளும்வில்லாளும் வெள்ளிகட்டுசேவகரும்
கச்சைகட்டிசுங்குவிட்டு கனவேடர்கூட்டமிட்டு
வையமலைதிசைநோக்கி வருகுதேதருணுவமும்
நாலுதிக்கும்வெள்ளைவீசி நடந்தார்படையுடனே
செந்தூள்கருந்தூள் செங்கதிரைத்தான்மறைக்கும்
இனங்கள்பிரியாமல் அக்ரோணிசேனையுடன்
கனத்தபாறைவழிதனிலே கடிகிநடந்தார்கள்
எட்டியப்பார்மலையாரும் பழனியப்பார்மலையாரும்
ஒட்டியாணம்புலித்தோலும் ஒலியிடும்ஆயுதமும்
கட்டமுதுகட்டி கம்பரிசிதினைமாவும்

வெல்லவென்றுபடையெழும்பி வேலவரைத்தானினைந்
து, மேளத்தலைவேடுவர்கள் முன்னே நடந்திடுவார்
பம்பத்தலைவேடுவர்கள் பக்கம்நடந்திடுவார்
கனத்தமுகில்போலே கானகத்தே தானடந்தார்
நடுகாணிமேடனவும் நடந்தார்படையெடுத்து

### காணிசேவுகன் தட்டானைக் கூப்பிட அவன் தாயார் புலம்பல்.

தடம்கொண்டுபோகவேணும் தட்டானை அழையுமென்
றார், அந்தமொழிகேட்டு ஆனதொருசேவகனும்
ஓட்டமாயோடி ஆசாரிக் குண்மையுடனே துரைப்பான்
நூடுபடையும் நடக்குதுகாண் ஆசாரி
தடம்கூட்டிப்போகத் தட்டானும்வாருமென்றான்
அப்போது ஆசாரி அங்கலாய்த்துக்கொள்வானும்
வெள்ளித்தடுக்கு மேல்வளையம்தானும்பண்ணி
முத்துக்கடுக்கன்பண்ணி முருகும்பலதுபண்ணி
செய்துகொடுத்துச் சீவனங்கள்செய்துவந்தேன்
தாய்வார்த்தைகேளாமல் தான்பாவியானேனே
மனைவிசொல்கேளாமல் மாளவேபோறேனே
உங்களைவிட்டுமம்மா னாகாரியாய்ப்போறேன்
என்னையிழந்தீர்கள் எந்தாயேமாதாவே
காலாளும்வந்துதினி கட்டமுதுகட்டுமம்மா
போறவிடத்துக்குப் போக்குச்சோர்தாருமம்மா
அப்படிக்கிச்சொல்ல அவனுடையதாயாரும்
சுற்றிவந்துபார்த்தாளே மகன்தன் கூத்தமுள்ளபொன்
னுடம்பை, சேர்ந்தயிடையழகும்மகனே செம்முருக்க
ன்பூப்போலே, ஆனபணிபூண்டயழகுபொன்னர்தன்
கையிலே, மாளவென்றுஎன்மகனே வளர்த்தேன்அரு
மையுடன், இந்தஉடம்பைமகனே இலங்கும்பொன்னர்
தன்கையினால், வாளுக்கிறையிடவே வளர்த்தேனேஎன்
மகனே, நாட்டார்கள் சொற்கேட்டுநடந்தாயேவேம்பா
நீ,மனவிக்கிப்புத்திசொல்லி மகனே நீபோய்வாடா
யென்றுதாய்சொல்ல ஏதுசொல்வான் தட்டானும்



என்தாயேகேளுமவன் எனக்கேத்தமனைவியல்ல
கல்நெஞ்சுமாபாவி காளித்தட்டான் தன்மகளும்
என்னை-போனவழிமீளாமல் போவையென்றுசாபமிட்
டாள், மங்கிலியந்தானறுத்து மார்மேலேவிட்டெறிந்
தாள், தாயேயென்கண்ணின்முன்னே தாலியறுத்தெறிந்
தாள், நானென்னபுத்திசொல்வேன் நலமில்லாபாவிக்கி
தான், நீதானேசொல்லி நின்றுபழைத்திடுங்கள்
நான்போறேன் நாளைக்கி நமனுலகிற்றப்பாது
கட்டமுதுவாங்கி கடிகிமிகநடந்து

### தட்டான் காளிபடைகண்டு சிலவார்த்தைசொல்லி பாளையத்தை வீரமலையோரத்தில் யொளிய வைத்து பொன்னரை கூட்டிவருகிறே னென்று சிற்றுலைப்பட்டணம்வந்தவுடன் தங்கைகனவுகண்டு அண்ணமாரிடத்திற் சொல்வது.

நடுகாணிமேடுகளில் நாட்டார்படைதனிலே
வந்துமேசேர்ந்து வகையுடனே தான்பார்த்து
தலையூருக்காளிதனைத் தான்பணிந்துஏதுசொல்வாள்
காளிவயற்றில் காரணமாய் நீபிறந்தாய்
யேழைவெள்ளாம்பயல்கள் ஏதுத்துத்தான் நிற்பானோ
இந்தபடைபெருக்கில் ஏழைவெள்ளாம்பயலெதிரோ
என்றுசொல்லித்தட்டானும் எல்லவற்குமுன்னடந்தா
ன், நல்லதலையூருவிட்டு நடுகாணிதான்கடந்து
வல்லால்த்துறைகடந்து வருகுதேபாளையமும்
வையடலைதான்கடந்து வந்தபடைஅத்தினையும்
தெற்குவீரமலைவரைக்குந் திரட்டினான்பாளையத்தை
ஏழுகரைநாட்டாரை இருந்தழைத்துத்தட்டானும்
பாளையத்தையெல்லாம் பதுங்கவைத்துந்தட்டானும்
வீரமலைக்கு விதமானகீழ்புரமாய்
சிற்றுலைப்பட்டணமும் சிறக்கயிருக்குதையா
சிலைபெரியபொன்னருக்குச் செம்பனுக்குதானெதிரு
வாள்பெரியசங்கனுக்கு மணியனுக்குந்தானெதிரு

இருவருக்குஞ்சரிபண்ணை ஏதுசொல்வான்தட்டானும்
காளிவயற்றில்பிறந்த காரணையென்சுவாமி
தம்பிசங்கன்தானெழுந்தால் தவத்துடனேனின்றுமல்
லோ, எதிருடிநின்று இருபிளவாய்ச்செய்துவிடு
என்று-திட்டஞ்சொல்லித்தட்டானும் சீக்கிரமேதான
டந்தான், சிற்றலைப்பதிநோக்கிச் செம்பகுலவாசாரி
கெலிவுடனேதட்டானும் கெம்பிரமாய்வாறனே
யெட்டாந்தளமும் யியல்பெரியமண்டபமும்
தட்டானங்கடந்து தான்வந்தானப்போது
பத்தாந்தளந்தாண்டிதங்கை பந்தடிக்குமண்டபத்தில்
சித்திரகூடமும்செம்பொன்னல்மண்டபமும்
குயிலுமயிலு கூடிவிளையாடும்
மாடப்புராக்கள் வந்துவிளையாடும்
கூடவிளக்கெரிய குயில்வந்துதாலாட்ட
மாடவிளக்கெரிய மயில்வந்துதாலாட்ட
பஞ்சணமெத்தையிலேதங்கை பாங்காயுறங்கையிலே
ஆவேசம்கண்டுதங்கை அலரியெழுந்திருந்து
சொற்பனங்கண்டுதங்கை துருசாயெழுந்திருந்து
அன்னலுஞ்சல்விட்டிரங்கிதங்கை அலரியெழுந்திருந்
வெள்ளிக்கதவில் வெங்கலூத்தாள்திறந்து [து
அண்ணரறமனைக்கி அலறியேயோடிவந்து
சாந்தணியும்மண்டபத்தில் தங்கையும்வந்துநின்று
சின்னண்ணையென்பிறவி சிறுபுலியேஅண்ணாவே
பெரியண்ணையென்பிறவி பேர்பெரியபுண்ணியனே
என்று-கூப்பிட்டாளன்னேரம் குலக்கொடியாள்தங்கை
யரும், தங்கைநல்லாள்தானெழுப்ப சங்கருமேதானெ
ழுந்து, என்பிறவிதங்கையரே என்அழைத்தாயுத்தமி
யே, அண்ணருங்கேட்க அருங்கிளியாளேதுசொல்வா
நான்-சொற்பனங்கண்டு துரிசாகவந்தேனன் [ள்
கேளண்ணையென்றுகிளிமொழியாள்சொல்லுகிறாள்
தட்டான்சதிக்கக்கண்டேன் தனித்துவேறாகக்கண்டே
ன், முத்தத்துப்பொன்முருங்கைமுறிந்துவிழக்கண்டே



னன், தலைக்கிடையுறக்கிணறுதவிழ்ந்துமிடியக்கண்டே
கோபுரவாசல் குறிநிலைக்குலையக்கண்டேன் [ன்
சித்திரமண்டபமும் தேர்கூடமாளிகையும்
உத்திரம்தெரிந்துவிழ வுண்மையாய்க்கண்டேனன்
கூந்தலக்கமுகு குலைசாய்ந்ததென்னமரம்
தாருடனேவாழைகளும் தலைசாயக்கண்டேனன்
குதிரைகட்டும்லாயங்களும் கூடம்பாழாகக்கண்டேன்
ஆனைகட்டுஞ்சாவடியில் அறுகுமுளைக்கக்கண்டேன்
ஏர்சிறந்தமாளிகையி லிருள்வந்துவாவக்கண்டேன்
அத்தைபிள்ளைமச்சினரும் அம்பபட்டுசாயக்கண்டேன்
செய்யபெருமானும் சிலைநாணிதெரியக்கண்டேன்
ஒத்தைகுதிரைவிட்டுசங்கரொருவருமேபோகக்கண்டே
ன், நான்-கண்டதொருசொற்பனங்கள் கைமேல்பலிக்கு
மண்ணை, பெண்ணறியாள்கண்டகினு பொய்போகமாட்
டாது, வேடுபடைகள் வெகுபடைகள்வருகுதண்ணை
வூருநீறாகிவிடும் ஒருநாளுந்தப்பாது
சின்னண்ணையென்பிறவி சினத்தபடைவந்தாலும்
என்னைவிட்டுப்பிரியாமல் எதிர்த்தாரைச்சங்கரையும்
கோட்டைவிட்டுப்போகாதேகொற்றவனேஅண்ணாவே
சத்தியத்துக்குள்ளாகித் தட்டான்பின்போகாதே
என்றுதங்கைசொல்ல யேதுரைப்பார்பொன்னண்டார்
உத்தமாபத்தினியே ஒருகொல்லுவாசகியே
இடிஇடிந்துவானிடிந்தா லினிவேடாதங்குவாரோ
வென்னீர்கொதித்ததினல்வீடுவெந்துபோவதுண்டோ
தவளைக்குதித்ததினற் றண்ணீர்கலங்கிடுமோ
என்முன்னெதிர்ப்பாருண்டோ ஏந்திழையேதங்கைய
ரே, என்னபுதுமையிது எடுத்துரைத்தாயென்பிறவி
ஆகட்டுமண்ணாவே அப்படிக்கிச்சொல்லலாமோ
வல்லாற்குவல்லார்வழியிதுண்டுஅண்ணாவே
நலமறியாவேட்டுவரை நம்பவினிக்கூடாது
மேனாட்டுவேடுவர்கள் வெகுபதருஅண்ணாவே
அருமைதங்கைசொல்ல அண்ணருமேயேதுரைப்பார்

என்பிரவிதங்கையரே இனிகேளுமென்வார்த்தை
சொன்னபடிதட்டானைச் சோதிக்கவேண்டாமோ
தட்டான்தமக்கெதிரோ தையநல்லாள்பத்தினியே
இரைகாணுப்பெரும்புலிமுன் ஏழைமான்யெதிர்ப்பது
ண்டோ, வேங்கைப்புலிமுன்னே வெள்ளாடெதிர்ப்பது
ண்டோ, புலியிருக்குங்காடுதனில்புல்வாய்கள்மேய்வது
ண்டோ, தங்கையரேஎன்பிறவிதயங்காதேயென்றுசொ
ல்லி, என்றுசொல்லித்தங்கையரே இயல்பாயனுப்பிவி
சோழிசதுரங்கன் சொக்கட்டான்போட்டார்கள் [ட்டு
கயறுதவரையிலே கள்ளவன்தட்டானும்
உடல்நடுங்கிகால்நடுங்கி ஓடிவந்தான்தட்டானும்,
வாய்பொத்திகைகட்டிவகையுடனேதெண்டனிட்டான்
பகைத்துவந்ததட்டானைப்பாவியைாய்த்தான்பார்த்து
வந்ததொருதட்டானை வாருமென்றுதான்கேட்டு
எரிட்டுப்பாக்கையிலே ஏதுசொல்வான்தட்டானும்
தேவரீர்சொன்னபடியெனக்குச் செய்துதரவேண்டுமெ
ன்றான், சத்தியத்துக்குள்ளாகத்தட்டான்பின்போறதற்
கு,ஆட்டத்தைவிட்டல்லவோ ஆக்கரித்துப்பொன்ன
ண்டார், எழுந்திருந்துபொன்னண்டார் ஏந்திழையை
தானழைத்து, தவனை சொன்னபிறகாரம்தட்டானுமோ
டிவந்தான், தட்டான்தனக்குநான் சத்தியம்செய்துவா
றேன்; நான்போயவருமளவும் நல்லதங்காள்பத்தினி
நாடுசீமைபோனாலும் நகர்கொள்ளைபானாலும் [யே
படுபழிகள்வந்தாலும் பரகெதிகள்வந்தாலும்
ஊருகொள்ளைபோனாலும் யுலகமெல்லாம்போனாலும்
சீமைகொள்ளைபோனாலும் சேனைதளம்வந்தாலும்
கோட்டையைச்சுற்றி கோடிபடைவந்தாலும்
தங்கையேஎன்பிறவி தயங்கியினிவேண்டாம்
என்றுமேபுத்திசொல்லி இதமுடனேபொன்னருமே



தம்பிசங்கன்தனையழைத்துத் தயவாகயேதுசொல்வார்
தட்டான்பின்நான்போயி தயவாய்வருமளவும்
கொங்கர்படைவந்தார் குலவையிட்டுக்கொம்பதினால்
வெங்கலமுரசறைந்து வெற்றிக்கொம்புதான்பிடித்தால்
அரைக்கணமேநான்வாறேன் அத்தைபிள்ளைதன்னுட
என்னாணைதம்பியரே எங்கையும்போகாமல் (னே
கோட்டைவிட்டுப்போகாதே கொம்பனையைக்காத்திரு
ங்கள், என்றுசொல்லிபொன்னருமே இன்பமுடன்வெ
ளியில்வந்து, வையமலைச்சாம்பானை வகையுடனேதா
னழைத்து, மேட்டுமேலே நீயிருந்து வேடுபடைவந்தா
க்கால்; கோட்டைக்குப்போகாமல் குத்திவிடுவேட்டுவ
ரை, பத்திரமாய்க்காத்துக்கொள் பாகனேயென்றுரை
த்தார். அந்தமொழிகேட்டு ஆனதொருசாம்பனும்
சாமியெனப்பணிந்து தான்சொல்வானப்போது
அடியேன்கைவீரியத்தை யாவர்களுந்தானறிவார்
முந்திவந்தவேட்டுவரை முன்வீச்சாய்வீசிடுவேன்
பிந்திவந்தவேட்டுவரைப் பின்வீச்சாய்வீசிடுவேன்
தவலைமுழக்கிடுவேன் ஆண்டவர்தன்செவியிற்கேட்டிட
வே, வீரபாகன்சொன்னதெல்லாம்விதமுடனேபொன்
னண்டார், கேட்டுமேயேதுசொல்வார் கிருபையுடனப்
போது, எச்சரிக்கையாகவே இருமென்றார்சாம்புவனை
குதிரைதனைப்போயி கொண்டுவாவென்றுரைத்தார்
அப்போதுசாம்பன் அறியப்புரவிதனை
கல்லணையும்தானிருக்கி கடிவாளம்தான்பூட்டி
பொன்னருக்குமுன்னாலே புரவிதனைவிட்டானே
தட்டான்யடவுமென்று தான்புரவிமீதேறி
தெற்குவழியாகச் சீக்கிரமாய்த்தானடந்தார்
குதிரைதனைமீட்ட கொண்டுபறந்ததுவே
தட்டிடவேபாய்ந்தது சலங்கைகலகலென

### அண்ணமார் தங்கைகனவைகேட்டு தைரியம் சொல்லி விளையாடும்போது தட்டான்வரக்கண்டு பொன்னர் சகலரையுமழைத்து கோட்டையும்தங்கையும் பார்க்கச்சொல்லி போகும் போது வெள்ளாங் குளத்தூருரிடத்தில் தட்டான் ஞாயஞ்சொல்ல அவர்களைப் பொன்னர் வைது வெள்ளாங்குளத்திற்கு சத்தியம் சொல்லப்போனது.

வெள்ளாங்குளத்திற்கு விதமுடனே தான்வரவே
தட்டானும்பின்றொடத் தான்புரவிமுன்பாக
அப்படிபோகையிலே அவ்வூரில்சாவடியில்
குடியானரெழுபதுபேர் கூடியொருஞாயம்
பேசியிருக்கையிலே பிரபலமாய்த்தட்டானும்
ஓட்டமாயோடிவந்து பொன்னுண்டாரைத்தெண்டனி
வெள்ளாங்குளத்தூறு வெள்ளாழர்தன்னுடனே (ட்டு
நம்முடையஞாயமதை தலமாகச்சொல்லுமென்றான்
நல்லதென்றுபொன்னுண்டார் நற்புரவியைத்திருப்பி
போடா நீஆசாரி பொய்வழக்கைச்சொல்லுமென்றார்
அப்போதுஆசாரி அவர்களிடம்யோடையிலே
பொற்புரவிதனைதிருப்பி பொன்னருமப்போது
குதிரைவிட்டிறங்காமற் குண்ணுடையாள்தன்மகனும்
பரிமீதில்தானிருந்தார் பாங்குடனேபொன்னுண்டார்
பார்த்துமேகாருளர் பாங்காயனைவோரும்
குதிரையைவிட்டிறங்காமல் கூற்றுவனைபோலிருந்தார்
இருவர்வழக்காகி இங்கேவந்தார்நம்மிடத்தில்
ஆசாரிதன்வழக்கை அன்பாகமேன்மைசெய்வோம்
பொன்னருடவழக்கை பொருந்தியேதட்டிவைப்போம்
எல்லோருமங்கே யிவ்விதமாய்ச்சம்மதித்து
வந்ததொருதட்டானை வழக்காளிகள்பார்த்து



வாடா நீஆசாரி புன்வழக்கையுரையுமென்றார்
அப்போதுஆசாரி அவரிடத்தில்சொல்லுகிறான்
கரிகாலச்சோழனுக்கு கனமுடனேமுத்தளக்க
பொன்னுளிசெய்வதற்கு பொன்னுயிரம்வாங்கி
மாத்ததிகப்பொன்தேடி மதுரைக்குயப்பாலும்
போகவென்றுசொல்லிப் பெருமையுடன்தானெழுந்து
வழிநடந்துபோயி மாத்ததிகம்பொன்தேடி
நாலுதேசம்சுத்தி நன்றாகப்போய்ப்பார்த்து
சுத்தித்திருந்து சுகமதுமல்லாமல்
வாய்வரண்டுநாவுலர்ந்து மனமுமிகத்தளர்ந்து
எங்கைசுத்திபார்த்தாலு மிதமாகச்சிக்காமல்
மதுரையைவிட்டு மாமதுரைபோய்சேர்ந்து
கடைத்தெருவீதியெல்லாம் கடுகிமிகத்தேடி
எங்கைசுத்திபார்த்தாலு மிதமாய்க்கிடைக்கவில்லை
ஆகட்டுமென்று அவ்விடத்தைவிட்டுமெள்ள
தெற்கேவெகுதூரம் திருநெல்வேலிப்போய்சேர்ந்து
அந்தநல்லசீமையிலே அநேகம்நாள் தானிருந்து
விலையதிகம்பொன்னுளி விருப்பமுடன்செய்துதந்தே
சிற்றலைப்பதிநோக்கி சென்றுவழிவருகையிலே
மாலைப்பொழுதாச்சி வழிபோகக்கூடாமல்
போகப்பயந்து பொன்னறண்மனையில்
அஞ்சிப்பயந்து அடக்கலம்நானும்வைத்தேன்
விலையதிகம்பொன்னுளி வேலைமிகப்பண்ணினதே
தங்கமழுத்தித் தயவாகப்பண்ணினதை
தாழ்வில்லாபொன்னுளி தாபரித்துவைத்தேனான்
வைத்தஅடக்கலத்தை வகையாகயெந்தனையும்
மாளுளிதான்கொடுத்து வகையாகயெந்தனையும்
பங்கப்படவென்னை பாங்காகயோட்டிவிட்டார்
இந்தவழக்கை யிதமாய்ச்சொல்லுமென்றான்
அப்போதவர்கள் ஆலோசனைசெய்யாமல்
புறவிமேலிருக்கும் புண்ணியரைப்பார்த்து
ஏன்காணும்பொன்னுண்டார் யிந்தவகைசெய்வதுண்

டோ, கரிகாலச்சோழன்பாதிக் காவலாய்வைத்ததினால்
வாரவரைக்குருக்காட்டி வழிமரிக்கச்சொன்னாரோ
தட்டானடைக்கலத்தை தந்துவிட்டுபொன்னாண்டார்
இந்தவழக்கதுதான் எவர்களுக்குமேருது
என்றுசொல்லக்கேட்டு யேதுசொல்வார் பொன்னாண்
டார், ஆராய்ந்துபாராமல் அழிவழக்குச்சொன்னவரே
நீங்களெழுபதுபேர்களிலே எவரும்பிழையீர்கள்
ஒருவன்பிழைத்தாலும் ஊமையாய்த்தான்போவான்
என்றுமேபொன்னாண்டார் எல்லவற்கும்சாபமிட்டு
சாபமிட்டுபொன்னாண்டார் தாமீண்டாரப்போது
வீறுடனேதெற்கே வெள்ளாங்குளம்நோக்கி
தட்டானும்முன்னோட தன்புரவிதன்னைவிட்டார்
வெள்ளாங்குளக்கரைக்கி விதமுடனேதானடந்தார்
நீதிகெட்டதட்டானும் நினைவுடன்பின்போக
தட்டானும்பின்போகத் தன்புரவிமுன்போக
இப்படியாக யிவர்போகும்வேளையிலே

### தங்கை சத்தியத்திற்குப்போன அண்ணரைக்காணோமென்று பாற்கும்போது வேடுபடைவரைக்கண்டு பாற்குமளவில் வீரசாம்பன் உபாயத்தால் சகலரையும் வெட்டிவருதல்.

அருமைப்பிறவி ஆனதொருதங்கையும்
பொன்னர்வரவில்லையென்று பொற்கொடியுமப்போது
பத்தாந்தளமேறி பார்த்தாளேதங்காளும்
வேடுபடையப்போது விதமாககூட்டமிட்டு
வெங்கலக்கடிக்காலும் வேட்டுவர்கள்தான்கூடி
சித்தாலைப்பதிநோக்கி வருகுதேவேடுதளம்
அப்போதுதங்கையும் அன்புடனேயேதுசொல்வாள்
சத்தியத்திற்குள்ளாகி தட்டான்பின்போனதொரு
என்பிறவி அண்ணன் இன்னம்வரக்காணேனே
பார்த்துப்பரதவித்து பத்தினியாள் நிற்கையிலே
இனம்பிரியாவேட்டுகளம் ஏழக்குரோணிசேனையுடன்



கனத்தபாறைவழிதனிலே கண்கொள்ளாவேடுதளம்
வையமலைகடந்து வருகுதேபாளையமும்
கண்டந்தபத்தினியாள் கடுகியேகீழிறங்க
வீரமுள்ளசூரன் வீரநல்லசாம்புவனும்
வேங்கைமரமேறி விதமாகப்பார்க்கையிலே
பொய்யறக்கம்சற்றே போனானேசாம்புவனும்
வேடுபடை திரண்டு விதமாய்வருகிறதை
சத்தமதுகேட்டுச் சாம்பனெழுந்திருந்து
கடுகிவரும்பாளையத்தை கண்டானேசாம்பானும்
வேட்டுவரைக்கண்டு மெய்யுறக்கம்தான்தெளிந்து
மேற்குமுகம்பார்த்தானே வீரநல்லசாம்புவனும்
பாளையம்வருகிறதைப் பார்த்தந்தச்சாம்புவனும்
என்னவினைகேட்டேனே ஈஸ்பரனேதஞ்சமென்று
சத்தியுள்ளபொன்னருக்குச் சதிகாரனானேனே
எழுந்துமிகவீரபாகன் எதிருகத்தானடந்து
திக்குதிசைபார்த்து சீருவைதானெடுத்து
பார்த்துபரதவித்து பரமனேதஞ்சமென்று
வேர்த்துவிருவிருத்து வீரநல்லசாம்புவனும்
கடுகிவரும்படையைக் கண்டானேவீரபாகன்
வந்தபடைஅத்தனையு மடியவெட்டவேணுமென்று
வேங்கைமரத்தைவிட்டு விதமாகத்தானிறங்கி
சீருவைத்தானுருவித் திறமாகத்தானிறங்கி
வைகைநல்லக்கொம்பையிலே வந்துமேசாம்புவனும்
வரட்டும்வரட்டுமென்று வகையாகப்பார்த்திருந்தான்
கிட்டவரும்வேளையிலே கீழ்பறந்துச்சீருவை
வேகமுடன்கடிங்காலை மேலேதான்விட்டெறிந்தான்
காகம்பறந்ததுபோல் கடிங்காலைத்தான்பிடித்தான்
இந்தப்புதுமைதனை இதமானவேடுதளம்
வந்தவந்தவேடுபடை வகையுடனேகண்டார்கள்
இவனைப்போலாண்பிள்ளைக ளெங்குனான்கண்டதில்லை
அலைமாதிவேடுவர்க ளன்புடனேபார்த்துநின்று
சந்தோஷப்பட்டார்கள் சாம்புவனைக்கண்டல்லவோ

பாவியந்தவேடுவர்கள் பார்த்துமேயேது சொல்வார்
அம்புவியிலுனைப்போலு மாண்பிள்ளைகளில்லையடா
நம்பிவந்தாலுந்தனையும் நன்றாய்நடத்திக்கொள்வோம்
தென்புடனேசாம்புவனுந் திரண்டபடைக்குள்ளானன்
அப்போதுவேட்டுவர்கள் அன்புடனேதான்பார்த்து
ஆருடையசேவுகம் நீ யஞ்சாமலிங்குவந்தாய்
என்றுமவர்கேட்க ஏதுசொல்வான்சாம்புவனும்
மண்சூழ்ந்தவள நாட்டில் வந்தவகைசொல்லுகிறேன்
பொன்னர்சங்கரென்னும் புகழுடையார்சேவகனன்
நளினமாய்ச்சொல்லுகிறேன் நாட்டாரேகேளுமினி
இன்பமுள்ளதம்பிசங்கன் ஏழானைப்பலமுடையான்
எட்டானைப்பலமுடையான் எழிலானபொன்னனண்டார்
கொழுமிக்குதிதன்னாலே கொற்றவர்கள்ராசாக்கள்
மாட்டுப்பலத்தை மதிக்கவேகூடாது
எருதுப்பிலத்தை எண்ணவேகூடாது
கறந்துவைத்தபாலைக் காகங்குடியாது
நற்குணமுள்ளவர்கள் நளினமுள்ளவீரியர்கள்
அவராண்மைகளைச்சொல்வேன் அறிந்துகேள்நாட்
பொன்னம்பலந்தனிலே புகழ்பெற்றகாருளன் [டாரே
சன்னசிவரம்பெற்ற தாஸ்ட்டிகரிருவருந்தான்
கச்சைகட்டிவாளெடுத்தால் கதிரோன்மறைந்துவிடும்
வில்லெடுத்து அம்பெடுத்தால் வெற்புந்தலைசாயும்
வெள்ளிவேல்தானெடுத்தால் வேங்கைமிரண்டோடும்
உங்கள்படையைக்கண்டா லொருநொடியில்கருவறுப்
பார், யென்றுசாம்புவன்சொல்லயேதுசொல்வார்வேடு
வர்கள், அப்படியானால் நீ அங்குகுற்றஞ்செய்ததுண்
டோ, சம்பளங்களில்லாமல் சலித்துமிகவந்தாயோ
எந்தவகையாலே இங்கேவந்தாய்சாம்புவனே
வந்தவகைசொல்லுகிறேன் வகையாய்க்கேள்நாட்டா
ரே, கரிகாலச்சோழன் கனிவுடனேதான்கொடுத்த
மேகவர்ன்னபுரவியது விண்ணுலகந்தான்பறக்கும்
பொன்னருஞ்சங்கரும் புரவியின்மீதேறி



வேட்டைக்குப்போகாதென்று வெளியேபிடிக்கச்சொன்
னார், கவளமதுபோடாமல் கடுகியேநானுமங்கே
மறந்திருந்தேன்கேட்க மனமுந்திடுக்கெடுத்து
கடலையும்வெல்லமும் காரும்பசுநெய்யுங்
கோதுமைச்சீரகமும் குளுமையாய்நான்போட்டு
புரவிதனைமேய்த்து புதுமையாய்அப்போது
கடிவாளம்பூட்டி கல்லனையுந்தானிறுக்கி
முன்சல்லிபின்சல்லி முகமெட்டுந்தான்பூட்டி
சகலாத்துமேல்விரித்துத் தங்கச்சலங்கையிட்டு
பளிங்குமாமண்டபத்தே பாவினையாய்கொண்டுவந்தே
இன்னேரமட்டு மென்னடாஜாம்புவனே [ன்
மெள்ளவந்தாரென்று வீரவாள்தானெடுத்து
வீசிவிட்டார்வாளாலே மீன்கெண்டைபோல்பாய்ந்தே
எழுபதடிநான்குதித்து இந்தவனத்தில்வந்தேன் [ன்
உங்கள்படையைக்கண்டு ஓடிவந்தேனாட்டாரே
உங்களுக்குமவர்களிட வுண்மைகளைச்சொல்லுகிறேன்
எந்தனுக்கு நீங்கள் என்னதாரீர்நாட்டாரே
என்றுசாம்புவன்சொல்ல யேதுசொல்வார்நாட்டார்க
எங்கள்வசம் நீயானால் எங்ககாளிதானறிய [ள்
ஊழியுள்ளகாலமட்டும் யொருகாணிநான்தாரேன்
கல்லுவெட்டிப்போட்டு காணியுமேநான்தாரேன்
என்றுசொல்லிச்சொன்னார்க ளியல்புள்ளநாட்டார்கள்
இவ்வார்த்தைகேட்டு ஏதுசொல்வான்ஜாம்புவனும்
மேனாட்டுவேடுவரை மிகவுநம்பப்போகாது
கீழ்நாட்டுமுதலிகளை கேசவரைநம்புவாரோ
இவ்வார்த்தைசாம்பன்சொல்ல எடுத்துரைப்பார்நாட்
டார்கள், உனக்கென்னசத்தியங்கள்வுகந்துசொல்லவே
ணுமடா, கேட்டதொருசத்தியங்கள் கிரமமாய்ச்சொல்
லுகிறோம், கனகம்பெருகுந்தலம் காணிக்கையுள்ளதல
ம், ஐவற்கருள்புரியும் அம்பலத்துஈஸ்பரனார்
சாட்சியென்றுயெந்தனுக்கு சகலருமேதான்கூடி
வுண்மையாய்ச்சொன்னாக்கா லுளவுகளைச்சொல்லுகி

றேன், என்றுஜாம்பன் நாட்டாரை இதமுடனேசம்மதி
த்து, சத்தியங்கள்சொல்லத் தான்வருகும்வேளையிலே
சாம்புவனுமப்போது சகலரைப்பார்த்தேதுறைப்பான்
ஆரிதத்தைக்கீழ்போட்டு அனைவோருந்தாண்டுமென்
ருன், ஆயுதத்தைக்கீழ்போட்டு அனைவோருந்தாண்
டையிலே, சீக்கிரம்சாம்புவனும் சீருவைத்தானுருவி
தத்தளிக்கவேட்டுவரைத் தவிடுபொடியாக்கி
குத்திமிகச்சாய்த்தானே குரும்புள்ளவேடுவரை
பட்டுவிழுவாரும் பரதவித்துயோடுவாரும்
தலைகளறுவாரும் தப்பியங்கேயோடுவாரும்
கைகளறுவாரும் கதரியங்கேபோவாரும்
மார்கள்பிளப்பாரும் மண்டைகிழிவாரும்
குடல்கள்சரிவாரும் குண்டியறுவாரும்
கால்கள்முறிவாரும் கண்கலங்கியோடுவாரும்
இப்படியாக எல்லவரைச்சங்கரித்து
கனவேடரத்தினையும் காலனுக்குஇறையாக்கி
புனவேடரத்தினையும் பூந்துகருவறுத்து
பறந்துவந்தவேட்டுவரை பறிவுடனேசங்கரித்து
முடிக்கிவெட்டிகருவறுத்தான் மூர்க்கமுள்ளவீரபாகன்
தத்தளிக்கவெட்டி தவிடுபொடியாக்கி
வெட்டிமுறுக்கி வீரபாகன்கொம்பூதி
மீண்டானேவீரபாகன் வீரமலைத்திசைநோக்கி
வெத்திக்கொம்பூதி வீரநல்லச்சாம்புவனும்
காற்றுப்போலவீரபாகன் கடுகியேயோடிவந்தான்
சிற்றுலைப்பட்டணத்தில் சிறந்தமதில்புகுந்து
கோட்டைமதில்கடந்து கோபுரவாசல்புகுந்து
ஆடரங்கமாளிகையில் அடவுடனேயோடிவந்து
தாழப்பரிசலங்கள் தயவுடனேமந்திரிகள்
தளகர்த்தர்சேனை தயவுடனேசூழ்ந்திருக்க
நாடகசாலைவிட்டுசாம்பன நடைச்சாவடியில்வந்து
ஆனைமதகரியும் அரசாளுமண்டபத்தில்
எதிர்வாரசேவுகரும் என்களத்துமன்னவரும்



மல்லகசெட்டிகளும் மலுக்கர்துலுக்கர்களும்
எதிரில்லாவீரிய ரின்பமிகுபெருமாளும்
வானவர்கள்கொண்டாடும் வையம்பெருமாளும்
சேனைவீரர்காவலரும் செய்யபெருமாளும்
மருட்டியர்கன்னடியர் வங்கர்கலிங்கர்களும்
தொட்டியப்பெரும்படையும் சூழ்ந்தபரிக்காலாளும்
எல்லவரும்சூழ்ந்திருக்கு மேகாந்தமண்டபத்தில்
சித்திரக்கூடத்தில்சங்கர் சிறந்தகொலுமண்டபத்தில்
வெள்ளிக்குடைபிடிக்க வெண்சாமரைவீச
சந்திரகாவிப்பாவாடை சம்பாமுடன்போட்டுநிற்க
கொங்கர்தெலுங்கர் கும்பிட்டுக்கொலுவில்நிற்க
மன்னவர்கள்வந்து வணங்கிநின்றுகப்பங்கட்ட
உரையூர்ப்பதியான யுத்தமர்கள்வந்துநிற்க
பாதிக்காவல்வாங்கி பாங்கானதம்பிசங்கன்
கல்லைப்பிளந்தவனே காருளவங்கிசமே
செயசெயபோற்றியென்று சிறந்தகொலுவேளையிலே

சாம்புவன் சங்கரிடத்தில் வேடுவர்படையை
வென்றதாகச் சொல்வது.

அஞ்சிப்பயந்துசாம்ப னடிபணிந்துதெண்டணிட்டு
வேர்த்துவிருவிருத்துசாம்பன் வேறுநிறமாநிற்க
தம்பிசங்கன்பார்த்து சாம்பனையேதுசொல்வான்
மேல்காவல்போனிடத்தில்சாம்பன் வினைகள்வந்துநே
ர்ந்ததுண்டோ, என்னவினைவந்ததென்றுசங்க ரிதமா
கத்தான்கேட்டு, அப்பொழுதுசாம்புவ னடிபணிந்து
தெண்டனிட்டு, ஆண்டவனேபருக்கென்று அடிபணி
ந்துயேதுசொல்வான், மேனாட்டுவேடுபடை வெகுதள
ங்கள்வருகுதையா, பூலோகம்பிடியாது பூமியிடங்கொ
ள்ளாது, கருமேகம்சூழ்ந்ததுபோல் கனத்தபடைவரு
குதையா, இனங்கள்பிரியாம லக்குரோணிசேனைதளம்
கனத்தபாறைவழிதனிலே கண்கொள்ளாசேனையுடன்
வருகுதையா ஆண்டவனே வகையாகக்கண்டுவந்தேன்
என்றுசாம்பன்சொல்ல ஏதுரைப்பார்சங்கருந்தான்

நித்திரைவெளியோடே நினைவுகெட்டபறைப்பயலே
மலைப்புகைச்சல்கண்டு மயங்கியோடிவந்தாயோ
கனிபரிக்குமந்திரிகளைக் கண்டோடிவந்தாயோ
வீரமலைமுனியைக்கண்டு விறைந்தோடிவந்தாயோ
கள்ளுவெரியோடேபறைப்பயலேகண்டதெல்லாம்பின
த்துகிறாய், என்றுசங்கர்கேட்கவேதுரைப்பான்சாம்பு
வனும், வேடரைக்கண்டோடிவந்தேன் வெற்றியுள்ள
காவலரை, மூண்டபடைவாறதையும்முன்னாகக்கண்டுவ
ந்தேன், ஆண்டவனேசாமி அடியேன்கண்டோடிவந்
தேன், அப்படிச்சாம்பன்சொல்ல ஆக்கரித்துதம்பிசங்
கன்,கோபித்துக்கண்சிவந்துகொடியநல்லசாம்புவனே
கொங்கர்வந்தவரலாறை கூறுமடாபயலே
வேடுபடைவாறதையும் விபரமாய்சொல்லுமடா
வந்தவகையைவீரபாகன் வரிசையாய்ச்சொல்லுகிறான்
மூங்கில்காடுபோலே மூணுலட்சமீட்டிகாரர்
நாணலெழுந்தாற்போல் நாலுலட்சம்ஈட்டிக்காரர்
வேடருமைக்கொம்புபோல் வில்காரரொருகோடி
கொக்குறுதபடிபோலே கோணத்தடி ஆயிரமாம்
நாய்பிடிக்கும்பயல்களைப்போல் நாலாயிரங்கோடி
முடிக்கால்ப்பயல்கள் மூவாயிரங்கோடி
கூத்துப்பார்க்கவந்தாற்போல் கூட்டம்வெகுகோடி
அந்தப்படையைக்கண்டு அடியேனுமோடிவந்தேன்
என்றுசாம்பன்சொல்ல ஏதுசொல்வார்சங்கருந்தான்
இரைகாணுபெரும்புலிமுன் னேமைமானெதிர்ப்பது
ண்டோ, கனவேங்கைமுன்னே காறுவெதிர்ப்பதுண்
டோ, வெள்ளாட்டைக்கண்டு வேங்கைதான்விட்டிடு
மோ, புலியிருக்குங்காட்டிலே புல்நாய்தான்மேய்வது
டோ, வெட்டிகெலித்து விருதுகொம்பூதாமல்
நாகன்வாய்த்தேறைபோல் நடுக்கமுடனோடிவந்தாய்
வாயைவீணாயிரைத்தாயே வாழ்வீரர்தங்கள்முன்னே
எண்ணாமலோடிவந்துஎந்தன்முன்னேசொல்லலாமோ
கொடியநல்லவேட்டுவரைக்கொன்றுசினந்தீராமல்



எல்லைதனில்விடுவானே யிருபிலவாய்க்கொய்யாமல்
கொங்கர்வந்தாரென்றுசொல்லிகூறாமல்வந்தேனென
வெட்டிவந்தேனென்று விருதுகளைச்சொல்லாமல்
பயந்துவந்தேனென்று பறைப்பயலேசொல்லுவை
யோ, என்று-வாள்எடுத்துதம்பிசங்கன் வகையுடனேவீ
சிடவே, எட்டியேசாம்புவனும் எழுபதடிகுதித்து
அவ்விதமாய்த்தம்பி ஆண்டவனேபருக்கென்று
கையரிவீர்மெய்யரிவீர் காலடிமைதானறிவீர்
வெட்டிவந்தேன்கைசலிக்க வீரவாள்தன்னாலே
கைசலிக்கவெட்டிவந்தேன் மேனாட்டுவேடுவரை
கூற்றுவனூருக்கே குடியேற்றிவிட்டுவந்தேன்
பொன்னருடப்பறைப்பயலான் போர்களத்துக்கஞ்சு
வேனோ, முடிகிவந்தவேடுவரை முனைந்துகருவறுத்து
மூக்குமுனையுள்ளவரையுங்கள் முன்னாகவந்துநின்றே
என்றுசாம்பன்சொல்ல விதுகேட்டுதம்பிசங்கன் [ன்
சந்தோஷமாகி சாம்புவனைத்தான்பார்த்து
வெட்டிவந்தசாம்புவற்குவெகுமதிகள்தான்கொடுத்தார்
முன்கைமுதாரி முழுக்கடையம்தான்பூட்டி
சந்தனகஸ்தூரி தானுமிகக்கொடுத்து
என்னுடையசிறுவுக் கிறையுமுண்டோசாம்புவனே
வெகுதூரம்முடிக்கிவந்தேன் வெற்றியுள்ளவீரியரே
என்றுசொல்லிச்சாம்புவனு மியல்பெரியதம்பிசங்கன்
படைமுரசைத்தான்முழக்கி படைமன்னர்தான்முழக்கி
வெற்றிக்கொம்புதானூதி வெங்கலப்பேரிமுழங்க
கச்சைகட்டிவாளெடுத்துக் காராளன்தம்பிசங்கன்
முன்கைவளைதானணிந்து மூர்க்கமுள்ளதம்பிசங்கன்
சுழலவருங்கேடையமும் சுத்தியிட்டபட்டயமும்
முப்புடியப்புகளும் மூர்க்கமுள்ளவேலெடுத்து
தும்பிப்பதக்கமிட்டான் தூயமணிகச்சணிந்தான்
நாணிச்சவுளிகளும் நல்லதொருவீரதண்டை
அஸ்தக்கடையமிட்டு ஆபரணந்தான்பூட்டி

பொற்பணிதிதான்பூட்டி பொன்னழுத்துங்குல்லாவும்
தகடுநிசாரணிந்து தங்கவளையமிட்டு
எழுபதுகட்டியடித்த இருப்புநல்லக்கேடையமும்
தோள்மேலேதாள்போட்டு துரிசாயெழுந்திருந்து
கொக்கிற்கண்டமந்திரவாள் குறிப்புடனேதானெடுத்து
படைமுரசுதான்முழங்க படைமன்னர்கூட்டமிட்டு
குடைகள்மிகப்பிடித்துக் குதிரைபடைசூழ்த்துவர
எண்ணவொண்ணாக்காலாளும் எதிருகமுன்னடக்க
தொட்டியப்படைகளும் சூழ்ந்துமிகவே நடக்க
மாறிவருகுஞ்சரமும் வகையாகமுன்னடக்க
வெள்ளிக்கட்டுவேலெடுத்து வீரியருமுன்னடக்க
செம்பரிசைக்காரர் சேனைகளுமுன்னடக்க
கரும்பரிசைக்காரர் காலாளுமுன்னடக்க
சல்லிகட்டுங்குதிரைகளும் தாண்டியேமுன்னடக்க
எதிரில்லாப்பெருமாளும் எல்லவருமுன்னடக்க
வையம்பெருமாளும் வண்மையாய்முன்னடக்க
செய்யபெருமாளும் சிலைபிடித்தருணாவமும்
அத்தைபிள்ளைமூவர்களு மாண்மையுடனிருக்க
இத்தனைபேர்கூடி இருக்குமந்தவேளையிலே
வையம்பெருமாளும் வரிசையுடன்பார்த்து
இளையபெருமாளு மின்பமுடன்பார்த்து
செய்யபெருமாளும் செப்புவாரொருவார்த்தை
தட்டார்முன்பொன்னாண்டார் சத்தியமாய்ப்போகையி
லே, கோட்டைவிட்டுபோகாதேகொற்றவாயென்றுரை
த்தார், வேடுபடைவந்தாலும் வெளியேபோகவேண்
டாமென்று, ஆணையிட்டுதான்போனார் அப்பாலேபோ
காமல்,தடுத்துபரித்துவிட்டு சத்திரம்போய்வருமளவும்
வருமளவும்நம்மை மனையைவிட்டுப்போகாமல்
போனவர்வருமளவும் போகவினிக்கூடாது
செய்யபெருமாளுமிந்தச் சேதிகளைச்சொல்லிடவே
வையம்பெருமாளும் வரம்பெற்றமன்னவரும்
வினைவந்திருக்கையிலே வெளியிலேபோனாக்கால்



பொன்னருக்குகோபம்வரும் போகவேஆகாது
மலைபோர்பொருதமடி மன்னவரும்போதாதோ
கொங்கரைச்சங்கரிக்கநம்ம கொடுவாளும்போறாதா
முள்ளெடுக்குக்கவைதனிலே முன்மாரெதிர்ப்பதுண்
டோ, கதித்துவரும்வேட்டுவரை கடுகவெட்டிபோட்டி
டுவேன், கொடுவாள்கள்தன்னாலே குருக்கைவெட்டி
போட்டிடுவேன், தம்பிசங்காவுன்னை தனியேவிடுவதில்
லை, வேட்டுவரைச்சங்கரிக்க வெளியிலேபோவார்களோ
கொங்கரைச்சங்கரிக்க கோட்டைவிட்டுபோவார்களோ
குரும்பாட்டுபால்குடிக்க குள்ளநரிபோதாதோ
பெரும்புலிதான்வேணுமோ பேய்கொண்டராசமன்னா
கொங்கர்யொருபொருட்டா கோட்டைவிட்டுபோவார்க
சிறுபிள்ளைபுத்தியிதோ சீக்கிரமாய்வாருமையா (ளோ

### அத்தைமகளும் சங்கரும் சொக்கட்டான் விளையாடுவது.

சொக்கட்டான்சதிரங்கள் சோதிவிளையாடவேணும்
அப்படிக்குச்சொல்ல ஆனதம்பியேதுசொல்வான்
கல்லைப்பிளந்தவனே கவலையுனக்குண்டாச்சோ
ஈசனிருப்பார் ஏதுக்குமஞ்சாதே
வீரியமுள்ளவரே விளையாடவாருமையா
என்னவிளையாட்டுயினி ஆடுவோமைத்துனரே
சோகிசதுரங்கள் சொக்கட்டான்போடுமென்றார்
நல்லதென்றுதம்பிசங்கன் நகைத்துமேஆடையிலே
பந்தயங்கள்போட்டு பரிவுடனேஆடுமென்றார்
நாங்களுந்தோற்றாக்கால் நலமுடனேசொல்லுகிறோம்
ஆனைக்கட்டுஞ்சங்கிலியால் அனைவரைக்கட்டிடுவோம்
என்றுமேபேசி இதமாகஆடையிலே
அப்பொழுதுதம்பிசங்கன் அண்ணரைக்காணவென்று
எண்ணாதுமெண்ணி ஏதுசொல்வானப்போது
தட்டான்பிறகாலே தானனுப்பிவிட்டோமே
என்னமோசம்செய்தானோ இதங்கெட்டதட்டானும்
அப்பவேதட்டானை அரைட்சணத்திற்கொல்லாமல்

விட்டுபோருச்சுதென்று விதமுடனேபற்கடித்து
கோபம்பொருக்காமல் குணமதுவேறாகி
தாயாதிபழிபோலே தானிருந்தான்தட்டானும்
தங்காளுஞ்சொன்னது தானே நிசமாச்சு
வெளியேதான்போயி விதமாகப்பார்ப்பமென்றால்
நல்லதொருஅத்தைபிள்ளை நம்மைகுறுக்கட்டுகிறார்
என்னசெய்வோமென்று ஏங்கிமிகப்புலம்பி
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே

வேட்டுவர்படைமேல் அத்தைபிள்ளை மூவர்
களும் சண்டைசெய்யப் போகுதல்.

வேடுபடைவருகுதென்று வேலாளுமோடிவந்து
தம்பிசங்கள்முன்னாலே தான்சொன்னாரப்போது
அப்போதுதம்பிசங்கள் ஆக்கரித்துயெழுந்திருந்தான்
அத்தைபிள்ளைமூவர்களு மவர்கையைத்தான்பிடித்தார்
என்னையாதம்பிசங்கா நம்மவசமான்வருமளவும்
கோட்டைவிட்டுப்போகாதே குணமானஎன்துரையே
வந்தபடையெல்லாம் வாளுக்கிறையிடவே
வேடுபடையெல்லாம் வேரறுத்துத்தான்வாறோம்
என்றுசொல்லிமைத்துனர்க ளிதமாகத்தானெழுந்து
அத்தைபிள்ளைமூவர்களும் ஆனைசேனைபடையுடனே
கோட்டைவிட்டுப் போனார்கள் குதிரைபடைதன்னுட
னே, தம்பிசங்கனப்போது சலித்துமேயேதுசொல்வா
ன், எழுத்தின்படியோ ஈசுரனார்கற்பனையோ
வரத்தாலேநாமும் வந்துமிகப்பிறந்தோம்
உன்னைப்பிரியஅண்ணாவே நமக்குஉள்ளவிதிப்படியோ
அத்தைபிள்ளைமைத்துனரே நம்மைஅகலவிட்டுபோ
னீரே,கண்குளிரப்பார்க்கவெங்கள்கர்த்தாவேகாணோமே
என்றுசொல்லிதம்பிசங்கன் இதமுடனேதானிருக்க
மேனாட்டுவேடுபடை வெகுதளமும்வந்திடவே
கண்டார்கள்அத்தைபிள்ளை கடுங்கோபந்தானாகி
வெடுவெடென்றுபற்கடித்து வேடுவரைச்சங்கரிக்க
கச்சைகட்டிச்சுங்குவிட்டு கடியதொருவேல்வாங்கி



படைமுரசைத்தானடித்து பாங்காகஆக்கரித்து
பேரிகைதான்முழங்கப் பிடித்தார்கள்கொம்புதனை
பூரிகைதானூதப் பொற்காளம்தான்முழங்க
நாகசின்னம்தானூத நற்காளமுந்தான்முழங்க
ஆலவட்டம்வீசிவர ஆனைபடைமுன்னடக்க
ஒற்றைக்குடைபிடிக்க ஒளிகுஞ்சம்பரிமாற
வெற்றிமுரசறைய விருதுகொம்புதான்முழங்க
வெங்கிடவரதரைநினைந்து வெற்றிசெய்யவேணுமெ
ன்று, வையாளிவரதனையு மனதிலேதானினைந்து
வந்துதவவேணும் மாயவனேயென்றுசொல்லி
ஆலிலைமேல்பள்ளிகொண்ட வச்சுதனேவந்துதவும்
வாலிதனைக்கொன்றாற்போல் வலுத்தரவேணுமையா
சீதையைசிறைமீட்ட தேவனேதஞ்சமென்று
இரணியனைக்கொன்றவனே இப்பவரவேணுமென்று
அத்திநகர்பட்டணத்தி லானதர்மராசனுக்கு
மானைத்துடர்ந்தலைந்த வகையானபஞ்சவர்க்கு
ஓடிப்பிடித்து ஊன்றார்கள்பஞ்சவர்கள்
தேடிப்பிடித்து திகைத்தார்கள்பஞ்சவர்கள்
தாகமதுவாகி தண்ணீர்தேடும்வேளையிலே
தண்ணீர்குடியாமல்தான் தர்மரைக்கார்த்தல்லவோ
வண்ணகமூமேலே வண்டுருவாயிருந்தாற்போல்
யெங்களையுமீடேற்றும் எம்பெருமாளென்றுசொல்லி
எடுத்தார்படையை எமலோகம்திடுக்கிடவே
வானவர்கள்கொண்டாட வகையாய்ப்படையெடுத்து
தானவர்கள்திடுக்கிடவே தங்கள்படைமூன்றாக
சுத்திவளைந்தார் சூதானவேட்டுவரை
செம்மானைக்கண்டு சிறுபுலியெதிர்த்தாப்போல்
காருவைக்கண்டு கருவேங்கைபாய்ந்தாப்போல்
முன்திரளைக்கண்டு முனைவீரர்பாய்ந்ததுபோல்
மூடித்திரளாக மூர்க்கமுள்ளவேட்டுவரை
கைசலிக்கவெட்டினார் கடுகிவந்தவேட்டுவரை
மெய்சலிக்கவெட்டினார் மேனாட்டுவேடுவரை

வெள்ளரிக்காய்போலே வெட்டினார்வேடுவரை
தென்னங்குரும்பைபோல் சிதைத்தார்கள்வேடுவரை
கையற்றுவிழுவாரும் காலற்றுவிழுவாரும்
மார்பிளந்துவிழுவாரு மண்டைக்கிழிவாரும்
தலையற்றுவிழுவாரும் தடுமாறிப்படுவாராம்
வெற்றிக்கொண்டுபோகவென்று விதமாகவந்ததொரு
வேட்டுவர்கள்கூட்டங்களை வெட்டிக்கருவறுத்தார்
ஓடுதேரெத்தவெள்ளம் உயர்ந்தகளம்தன்னிலே
பிணங்கள்தலையுருள பிரண்டோடும்ரெத்தவெள்ளம்
முண்டங்கள்கூத்தாட முடுகியங்கேதானேடும்
அணியணியாவரும்படையை அடங்கக்கருவறுத்து
மாறுபோலேவெட்டு மலைபோலேதான்குவித்து
மூர்க்கமுள்ளமூவர்களும் முடிகிவந்தாரன்னேரம்
பட்டாணிருவுத்தர் பரிவாரம்மேற்பறக்க
கடியபுரவிகளும் கலந்துவரும்காலாளும்
தாழும்பெரும்படையும் தளர்ந்துவருமன்னவரும்
மார்பிலம்புபொதியோடு மகாவீரசேவுகரும்
மலுக்கர்துலுக்கர்களும் மறுப்பாஷைகாரர்களும்
பஞ்சவர்ன்னபரியேறும் பட்டாணிராவுத்தரும்
நீலவர்னபரியேறி நிறைந்தோடிவருவாரும்
பரிவாரமொப்பாக படைதிரும்பித்தானடந்தார்
அப்போதுவேடுதளம் அசனிபுரம்தான்கடந்து
வீரப்பூர்வீதியிலே வேடுதளம்தான்கூடி
மான்பாறைசேவலிலே மனக்கடவுதான்கடந்து
வீரமலைவனந்தனிலே வெற்றியுடன்வந்திறங்கி
இளப்பாறிபடைகளெல்லா மிங்கேஇருக்கையிலே

### ஈஸ்வரர் வேடுவன்வேஷம்கொண்டு அத்தை பிள்ளைமூவர்களையும் கொல்வது.

ஆருசடைக்கணிந்த அரனாருந்தானெழுந்து
வெய்யசிவனாரும் வேடனைப்போல்வடிவுகொண்டு
வில்லுஞ்சிலையெடுத்து வேடனைப்போல்வடிவாகி
அம்புகளும்பொன்னாலே அலகுகளும்பொன்னாலே



இத்தனையும்பொன்னாலே இணைஜோடாய்க்கொண்டுவ
ந்து, வெய்யசிவனாரும் விரும்பியங்கேயோடிவந்து
அத்தைபிள்ளைமூவரையும் அம்பாலேஎய்துவிட்டார்
ஈசுரர்அம்புபட்டு எல்லாமடிந்தபின்பு
வீரபாகன்ஒருவனையும் விட்டாரேபார்த்துநிற்க
சாம்புவனுங்கண்டல்லவோ தான்போகமாய்ப்பார்த்து
சங்கருமப்போது சாம்புவனைப்பார்த்து
ஆரடாசேவுகா நீ அசையாமல்நிற்கிறவன்
என்றுஅரனாரும் இயல்புடனேதான்கேட்க
சாம்புவனுமப்போது சங்கரனாற்குயேதுசொல்வான்
ஆறென்றுகேட்டதொரு அழகுள்ளபுன்வேடர்
பொன்னம்பலத்திலே புகழ்பெரியகாரளன்
சன்னுசிவரம்பெற்ற தளம்பெரியகாருளன்
தம்பிசங்கன்பொன்னரென்று தாஷ்டீகரிருவருண்டு
கொளுமிகுதியாலே குபேரனைப்போலானர்
பூமிதனில்பிறந்த புகழ்பெரியகாருளன்
பேருக்கோவேளாளன் பெருமைக்கோதர்மரையா
பஞ்சாட்சரமும் பரகதியும்பெற்றவர்கள்
பாராளும்பொன்னுண்டா - ரமைப்பறைப்பயலுநான்
தானும், என்றவனும்சொல்ல, ஏதுசொல்வாருண்டவ
னும், உங்களானைபடைசேனை யடங்கலும்பட்டதென்
று,உன்னுடையஆண்டாற்குஉகந்துசொல்லுமென்று
ரைத்தார், என்றுசொல்லவீரபாகன்ஏறிட்டுத்தான்பார்
த்து, வேடனிவனாரென்று வீரபாகன்தான்பார்த்து
ஆரென்றுசொல்லி அளவறுக்கக்கூடாமல்
ஆனைபடைசேனையெல்லாம் அடங்கலும்கொன்றுயே
மாத்தானுமல்ல மன்னியருந்தானுமல்ல
செம்பொன்சிலையேந்துஞ் சிவனாகவந்தீரே
சிவனென்றறிந்துசாம்பன் சீர்பாதம்தெண்டனிட்டார்
ஆண்டவனாரென்றறிந்து சாம்பனடிவணங்கிநிற்க
தெண்டனிட்டபோதேதான் சிவனாரும்போய்மறைந்
தார், திக்கெனவேசாம்புவனுந் திடுக்கென்றெழுந்திரு

ந்து, ஈஸ்பரரைக்காணமல் இயல்புடையசாம்புவனும்
அய்யரைக்காணமல் அடைவுடனேசாம்புவனும்
சிற்றலைப்பதிநோக்கி சீக்கிரமாயோடிவந்து
தெற்குநல்லவாசலிலே திரமாகவுட்புகுந்து
வானவர்கள்வந்துநிற்கும் மாளிகையிலுட்புகுந்து
கொற்றவர்கள்வீற்றிருக்கும் கொலுக்கூடம்தான்புகுந்
தம்பிசங்கள்முன்னாலே தயவாகவந்துநின்று [து
அஞ்சிநடுங்கி ஆசாரம்போற்றிசெய்து
ஆண்டவனேபருக்கென்று அடிவணங்கிதான்போற்றி
வாய்பொத்திக்கைகட்டி வாள்வீமன்முன்னேவந்து
சத்தியத்துக்குள்ளாகித் தட்டான்பின்போனதொரு
ஆண்டவர்வரக்காணோம் ஐயனேயென்னசொல்வேன்

### சாம்புவன் அத்தைபிள்ளைகளுஞ் சேனைகளும் பட்டதென்று சங்கரிடத்தில்சொல்ல சங்கர் சண்டைக்குப் புரப்படுதல்.

நீர்-தனித்தனித்தொருவராக வாரீரோஆண்டவனே
அத்தைபிள்ளைமூவர்களு மானைபடைசேனையெல்லாம்
ஆரொருவரில்லாமல் அடங்கலும்பட்டார்கள்
அவ்வார்த்தைகேட்டு ஆர்ப்பரித்துதம்பிசங்கன்
கண்கள்பொரிபறக்க கடுங்கோபந்தானகி
பற்கடித்துஆக்கரித்து பரிசைமேற்கைபோட்டு
அந்தப்படுகளத்தை யான்பார்க்கவேணுமென்று
வெறுவெறென்றுபற்கடித்து மீசைகளுந்தான்துடிக்க
அறைந்துபரிசைகளை அறமனையைவிட்டகன்று
மேகவர்னன்புரவிதனை வீரபாகாகொண்டுவாடா
அப்போதுசாம்புவனும் ஆனபுரவியைத்தான் [ன
அல்லிதண்டைசலங்கைகளும் அரைமணியுங்கலகலெ
சல்லிதுவண்டாடச் சகலாத்துமேல்விரித்து
கல்லணையுந்தானிறுக்கி கடுகியேகொண்டுவந்தான்
முன்தட்டுவாறுகளும் முகமட்டுந்தானிறுக்கி
அங்குவடிகடிவாளம் அசையாமல்தான்போட்டு [ம்
விண்ணுலகத்தைபாய்ந்தாலும் மேகத்தைபாய்ந்தாலு



கல்லுநெகிழ்ந்தாலுங் கல்லணையுஞ்சாயாமல்
அங்குவடிதான்பிடித்து ஆண்டவனேசாமியென்று
மேலேதலைவாசலுக்கு விட்டானேபுறவிதனை
அங்கிருந்தசேவகர்கள் அன்புடனேயேதுசொல்வார்
கோட்டைவிட்டுப்போகாதே கோனாட்டுபரிநகுலா
உங்கள்அண்ணாவிவருமளவும் அரண்மனையிலேயிருங்
கள், பட்டாணிதளகர்த்தர் பரிகாரமுள்ளவர்கள்
அல்லவரும்போய் அங்கைவரும்வேட்டுவரை
கொன்றுசரிபண்ணிடுவோம் கொற்றவாஎன்துரையே
சத்தியத்துக்குப்போன தர்மர்வருமளமும்
அங்கேநீபோகாதே அரைட்சணமேவந்திடுவார்
அசையாமணியை அசைப்போமோஆண்டவனே
என்றுசொல்லசங்க எடுத்துமிகவுரைப்பார் •
என்னசொன்னாய்சேவகனே என்னங்கமிருக்குமட்டும்
ஆராச்சிமணிதீண்டாமல் அடியடாமுரசுதனை
கோட்டைதிரவுமென்றார் கொற்றவனார்சேவகரை
கோட்டைதிரப்பதில்லை கோனாட்டுப்பரிநகுலா
பொன்னாண்டார்வருமளவும் பொன்கோல்கொடுப்பதி
ல்லை, என்றுசொல்லிகன்னியர்கள்எதிருகவந்துநின்று
நிறுத்தினார்கள்மல்லர்களும்நில்லுமென்றுதான்பிடித்
து, கோபித்துகண்சிவந்துஅப்பக்கொடியதொருசவுக்
காலே, மேகவர்ன்னபுரவிதனை வீசினான்தம்பிசங்கன்
மல்லர்களுஞ்சேவகரும்மன்னியர்கள்பார்த்துநிற்க
கோட்டையைத்தாண்டி குதித்துதேநற்புரவி
தாண்டிகுதித்துதே தம்பிசங்கன்தன்புரவி
கண்டுமேசேவகர்கள் கதவுதனைத்திறந்து
தடுமாரியோடித் தான்வரும்வேளையிலே
எழுபதடிகுதித்து எதிருகவந்துநின்று
சொல்லுவான்சாம்புவனும் சுந்தரச்சங்கருக்கு
படைமிகுந்தசேனையிலே பதறுதேஆண்டவனே
அரைட்சணத்தி லழைக்கின்றேன் ஆண்டவனார்பொ

ன்னரைத்தான், என்று-வெங்கலத்தவலைதான் விதமா
ய்முழக்குவானும், அசையாமணியதனை அசைக்கமுடி
சொல்வானும், அந்தமொழிகேட்டு அருள்மிகுந்தசங்க
ர்சொல்வார்,வாடா நீசாம்புவனே நமக்குவருகும்படை
எதிரோ,என்னவகையென்று நீயே துரைத்தாய்சாம்பா
நீ, எதிர்த்தசமர்தனிலேநா மிருவருமேபோய்புகுந்தா
ல், அரைட்சணத்தில்கருவறுத்து அன்புடனேவந்திடு [வோம்

சங்கர் வேட்டுவரை சங்கரித்தல்.

என்றுசொல்லித்தம்பிசங்கன் ஈஸ்பரரைத்தானினைந்
து, கந்தைதரித்தவனே கயிலாயநாயகனே
ஐவர்களில்பிறந்த ஆனதொருபார்த்திபன்
நீதியுடன்தவசு நின்றதொருவர்ச்சுனற்கு
பன்மையுட்ன்போய் பாசுபதம்தான்கொடுத்து
வெஞ்சமரிலர்ச்சுனனை வெல்லவரங்கொடுத்து
அஞ்சாவரங்கொடுத்து அர்ச்சுனனைகார்த்ததுபோல்
யெந்தனையுங்கார்த்து யீடேற்றவேணுமையா
சிந்தைகலங்காமல் சிவனைஅடிபணிந்து
ஏதுமயில்வாகனனை இன்பமுடன்கைகொடுத்து
எதிர்வேடர்சமர்க்களத்தில் எதிர்த்துமெள்ளத்தானட
ந்தார், திருவாழிவாங்கியல்லோ அனுமான்தென்னில
ங்கைகுதித்தாப்போல்,வாளபிமன்பழிவாங்கவிசையன்
மனவெகுண்டுபாய்ந்தாப்போல், தேத்தரசனைவதைக்க
ச் சீருகப்பாய்ந்ததுபோல், விட்டான்புரவிதனை வீரம
லைத்திசைநோக்கி, பார்த்தார்படைப்பெருக்கம் பலதி
சையும்தோன்றாமல், யிளமலைக்குந்தென்மலைக்கு மிருக்
குதேசேனைகள்தான்,ஆர்ப்பரித்துச்சங்கருந்தான் அந்
தப்படையிற்புகுந்து,வீசினார்வேட்டுவதை வீரவாள்த
ன்னாலே, முன்வீச்சுக்காயிரமாம் பின்வீச்சுக்காயிரமாம்
எதிர்பட்டவேடுவரை யிருதுண்டமாக்கிடுவார்
வெள்ளரிக்காய்போலே விழுகுதேவேடுபடை
கையற்றுவிழுவாரும் காலற்றுவிழுவாரும்
வேல்பட்டுருமி விழுந்துகிடப்பாரும்



கையெடுத்துகும்பிட்டு காலில்விழுவாரும்
பச்சைகுடைபிடித்து பாதம்கெதியென்பாரும்
ஆளடிமையென்பாரும் அடிபணிந்துவிழுவாரும்
தாருமாருக்கி தரிக்களமாக்கிடவே
கொன்றுகருவறுத்தான் கோனாட்டுப்பரிநகுலன்
வெட்டிக்குவித்தான் வீரமலைபோலே
கூடிப்போரிட்டாரே கொங்கர்படைகளெல்லாம்
குத்திவெட்டிகருவறுத்தார் குருதிகளுமாறோட
வேட்டுவரைக்குத்தி விண்ணுலகந்தானேற்றி
கொங்கரைசங்கரித்து கொடியபடையத்தனையும்
உதிரங்களோட ஒருகொடிகருவறுத்து
கண்டவேடரத்தனையும் காலனுக்குவிருந்தாக்கி
குண்ணுடையான்மகனுக் குலவையிட்டுஅந்நேரம்
வீரநல்லசாம்பவனை விதமுடனேதானழைத்தார்
சாம்புவனுமப்போது தான்பணிந்துயேதுசொல்வா
ன்,வேட்டுவர்படைகளெல்லாம் வேராறுத்துவிட்டோ
மே, ஊருக்குபோகலாம் உத்தமனேவாருமென்றான்
கோட்டைக்குபோகலாம்கொற்றவனேவாருமென்றான்
அப்போதுதம்பிசங்கன் ஆக்கரித்துஏதுசொல்வான்
இன்னம்படைகள்வரும் யிருமடாசாம்புவனே
என்றுமேபேசி இருக்குமந்தவேளையிலே
தண்ணீரின்தாகம் தானாகிஅப்போது
வீரப்பூர்தன்னருகில் விதமுடனேதானிறங்கி
மான்பாருசேவலிலே மான்கடவுவந்திறங்கி
தண்ணீர்ச்சுனையை தான்தேடும்வேளையிலே
அப்பாஅரனாரும் அன்புடனேதானெழுந்து
பாரவனந்தனிலே பரமனார்வந்துநின்று
வேங்கைமரமொன்று விதமாகவுண்டாக்கி
குளுந்தநிழலாக்கி குடிநீருமுண்டுசெய்து
சங்கரனாரப்போது தானிருக்கும்வேளையிலே
தலையூருக்காளி தப்பித்தடுமாறி
சங்கருக்குச்சிக்கா தான்வந்துஒண்டிருந்தான்

அந்தவனத்தில் அறியசங்கர்வந்திறங்கி
குளத்தையுங்கண்டு குதிரைவிட்டுக்கீழிறங்கி
சாம்புவன்கைகொடுத்து தான்போய்பொய்கையிலே
பொய்கையிலேபோயிரங்கி பொன்முகங்கள்சுத்திபண்
தண்ணீர்குடித்து தாகங்களுந்தீர்ந்து [ணி
வேங்கைமரத்தடியில் வீற்றிருந்தார்சங்கருமே

ஈஸ்பரர் சங்கர்மேல் அம்புவிடுதல்.

அப்போதரனும் அன்புடனேதானெழுந்து
அல்லியுடதாமரை அகலமுள்ளபொய்கையிலே
தாமரைப்பூவை தானெடுத்துஅம்பாக்கி
வாழத்தண்டைவில்லாக்கிவகையானஅம்புதொட்டார்
சங்கருமேயம்பு தான்விட்டார்அன்னேரம்
விட்டதொருஅம்பு வேங்கைமரத்தடியிருக்கும்
சங்கருடநெத்தியிலே தான்பட்டுருவியதே
கண்டந்ததம்பிசங்கன் கடுங்கோபந்தானாகி
அம்புவந்ததிசைநோக்கி ஆர்பரித்துதானெழுந்து
உக்கிரவாளெடுத்து கொடியநல்லதம்பிசங்கன்
இரைகாணுச்சிறுபுலியோ லெழுந்துமேதம்பிசங்கன்
மூங்கில்முரிந்துவிழ முதுகாடிஅலரிவிழ
சோலையிலேபோய் சுற்றியங்கேபார்த்திடவே
வேடன்மணியனை விளங்கிடவேகண்டாரே
கண்டுமே ஆக்கரித்து கடுகெனவேவீசிவிட்டார்
வேங்கைமரமும் வேட்டுவன்தன்தலையும்
ஒன்றாகவிழுந்து உருண்டுதேகானகத்தில்
விழுந்தவுடன்தம்பிசங்கன் வெகுகோபந்தானாகி
எதிர்த்துப்போர்செய்யாமல்காளி இலைமரவில்தானிரு
ந்து,மறைந்திருந்துயெய்தானே மாபாவியென்றுசொ
ல்லி, கோபம்பொருக்காமல் குத்தினார்கல்லுகளை
கல்லுமிருதுண்டாய் கடுகுபொடியாகிடுமாம்
அப்போதுதம்பிசங்கன் ஆக்கரித்துப்பற்கடித்து
சாம்பனுடனே தானுமங்கேவதுசொல்வார்
வாருமடாசாம்புவனேவண்மையுடன்சொல்லுகிறேன்



மாறுபடாமேனியிலே மாருபட்டுபோனதினால்
அசையாகஎன்னுடலில் அம்புவந்துபட்டதினால்
இந்தஉயிரை இனிவைத்திருப்பதில்லை
அண்ணரைக்காணாம லாவிவிடப்போறேன்
பஞ்சவர்களன்னாளில் பாரமான்பின்தொடர்ந்து
அண்ணவரைவிட்டு ஆனதம்பிநால்வர்களும்
நச்சுப்பொய்கைநீர்குடித்து நலமாயிறந்ததுபோல்
தர்மரைவிட்டு தானிறந்தபாவனைப்போல்
பொன்னரைவிட்டு போகுதடாஎன்னுயிரு [டு
அடியடாமுரசையிங்கேஎங்க ளண்ணர்பேரிலாணையிட்

சங்கர் பிராணனைவிடுதல்.

என்றுசொல்லிதம்பிசங்க னிதமுடனேமண்டியிட்டு
வேங்கைமரநிழலில் வில்லுகளைகீழேவைத்து
அம்புகளைகீழேவைத்து ஆண்டவனேதஞ்சமென்று
மந்திரவாள்கீழேவைத்து மகாதேவாதஞ்சமென்று
வச்சிராயுதத்தை வைத்தாரேதோள்மேலே
தோள்மேலேவைத்தவுடன் துடித்துயிர்போனதுவே
கண்டுமேசாம்புவனும் கைகால்மிகநடுங்கி
ஐயோசிவனேயென்று அலரிப்பிரண்டழுது
இப்படிக்குவந்ததே எங்கன்துரைகளுக்கு
என்றுபுலம்பி ஏங்கியனேதுசொல்வான்
அண்ணரும்வந்து அறியதம்பியெங்கேயென்றால்
என்னவென்றுசொல்லே னிந்தப்படுகளத்தை
தங்காளுங்கேட்டால் தயங்கிபுலம்புவாளே
நாமுமடிந்திடுவோம் ஆனதொருதம்பியுடன்
மடியவேவேணுமென்று மனதுமிகத்துணிந்து
ஒற்றைத்தவில்முரசை ஓங்கிமுழுக்கிட்டு
பொன்னருடசெவியில் புலப்படவேஅடித்துவிட்டு

சாம்புவன்மடிதல்.

மந்திரவாளை வகையாகத்தானிருத்தி
ஆண்டவனேபருக்கென்று ஆயுதத்தைசுற்றிவந்து
முக்கால்வலம்வந்து முக்கணரைத்தான்பணிந்து

ஆண்டவனேதஞ்சமென்று ஆயுதத்தின்மேல்விழுந்
தான், மகாதேவாதஞ்சமென்று மந்திரவாள்மேல்விழு
ந்தான், விழுந்துமடிந்தானே வீரநல்லசாம்புவனும்
இருவர்மடிந்திடவே ஈசனார்போய்விட்டார்

### தவிலோசைகேட்டு பொன்னர் தட்டானைவெட்டி யெரிந்துவிட்டு பட்டணம்வருகுதல்.

அந்தநல்லவேளையிலே ஆனதொருதட்டானும்
பொன்னர்தனையழைத்து போய்குளத்தருகே
வெள்ளாங்குளத்தருகே விதமுடனேதானிரங்கி
தட்டானைப்பார்த்து தான்சொல்வார்பொன்னுண்டார்
சத்தியம்செய்யும் தான்சொல்லும்தட்டானே
என்றுபொன்னர்கேட்க ஏதுசொல்வான்தட்டானும்
ஏரிநடுவே யிரங்கியேபோய்குளித்து
மேட்டுமேல்தானிருக்கும் விநாயகர்முன்னாலே
சத்தியங்கள்செய்து தரவேணுமாண்டவனே
என்றுசொல்லப்பொன்னுண்டா ரிரங்கிக்குளந்தனிலே
மரராளவுதண்ணியிலே மன்னன்முழுகையிலே
குளத்திலேவாழுகின்ற கொடியதொருசெம்முதலை
கண்டுமேசெம்முதலை காலனைப்போலோடிவந்து
ஆள்கடியான்செம்முதலை அதம்பியேயோடிவந்து
நல்லஇரைதான் நமக்குகிடைத்ததென்று
அதம்பிவந்தசெம்முதலை ஆனதொருபொன்னர்தனை
கண்டுமந்தசெம்முதலை கடுகிநடுங்கிடுமாம்
கிட்டவரப்பயந்து கிளம்பியங்கேஓடியுதே [று
அப்போதுபொன்னுண்டார்ஆண்டவனேதஞ்சமென்
கங்கைசுமந்ததொரு காரணைபோற்றியென்று
வையாளிமேனியனை வகையாகப்போற்றிசெய்து
ஏறுமயில்வாகனனை இன்பமுடன்தொழுது
முக்கால்முழுகி மூர்க்கமுடன்திரும்பியிலே
சதிசெய்யத்தானினைந்து தட்டானுமேதுசொல்வான்
ஐயாவேசாமி யடியேன்சொல்விண்ணப்பங்கேள்
மதகின்கீழ்த்தான்புகுந்து வந்துகரையேறிட



பிள்ளையார்முன்னாலே பிரபலமாய்ச்சொல்லவேண்டும்
ஆகையால்நீங்கள் அந்தவழிவாருமென்றான்
அப்போதுபொன்னுண்டார் ஆக்கரித்துகண்சிவந்து
உக்கிரதண்டவாளெடுத்து கொடியதொருதட்டானை
வீசிவிடவேணுமென்று விதமாகப்பார்க்கையிலே
கண்டுமேதட்டானும் கால்நடுங்கிஏதுசொல்வான்
வெட்டியென்னைபோட்டாலும் உங்களுக்குவீரியங்களு
ண்டாமோ, சதையரிந்துபோட்டாலும் உங்களுக்குச்ச
வுரியங்களுண்டாமோ, பொல்லாதான்செய்தகுற்றம்
பொருத்துதுரைகள்சொன்ன, சத்தியங்கள்செய்து தர
வேணும்ஆண்டவனே, யென்றுதட்டான்சொல்லஇங்
கிதமாய்ப்பொன்னருமே, கோபத்தையுள்ளடக்கி குள
த்தின்மதகின்வழி, உள்ளேபுகுந்து உகந்துவருகையி
லே, எந்தகதவிலோசை யுண்மையாய்க்கேட்டதுவே
அப்போதுபொன்னருமே யலரியேஏதுசொல்வார்
தம்பிக்குசதிமோசம் தான்வந்ததென்றுசொல்லி
பரதவித்துபொன்னுண்டார் பரமனேதஞ்சமென்று
சதிகாரத்தட்டானும் சகுனியாயிருந்தானே
என்றுமனதிலேங்கிமுகம்வாடி
மதகின்வழிதுருசாய் வருகிறவேளையிலே
தலைமேலேபிள்ளையாரை தான்போடவேணுமென்று
தூக்கிகொண்டுநின்றானே சூதுகாரத்தட்டானும்
நிழலிற்றெரிந்துதே நிற்கிறகோலமது
கண்டுமேபொன்னுண்டார் கண்கள்பொரிபரந்து
உடைவாளைத்தானுருவி ஒருவீச்சாவீசிவிட்டார்
தட்டான்தலையும் தானுமந்தப்பிள்ளையாரும்
உருண்டுகிடந்துதே உத்தமன்கைவரவாலே
தட்டானைவெட்டி தானுங்கரையேறி
கரைமேலேவாழுகின்ற காளியம்மன்சன்னதியில்
பூதகணங்களுக்கு போட்டாரேகூரதுவும்
ஏழுகூரிட்டு இரண்பலிதான்கொடுத்து
பரியைமிகப்படித்து பதரியேயப்பொழுது

கல்லணையுந்தானிருக்கி கர்த்தனே தஞ்சமென்று
அங்குவடிமிதியாமல் அப்புரவிமேல்தாண்டி
சிற்றூலைப்பதிநோக்கி திருப்பினார்புரவிதனை
மீட்டினார்புரவிதனை விண்ணுலகம்தான்பறக்க
பரந்துபுரவியது பாங்காகவந்ததுவே
சிற்றூலைப்பதிநோக்கி சீக்கிரமாய்வருகையிலே

தங்கை பொன்னரைக்காணோமென்று பார்க்கும்
போது பொன்னர்வந்து தம்பிமாரைக்கேட்க
சண்டைக்கு போனவரைக் காணோமெ
ன்று தங்கைசொல்லுகிறது.

அப்போதுதங்கை அண்ணரைக்காணோமென்று
சத்தியத்துக்குப்போன தர்மரைக்காணோமென்று
தட்டான்பின்போன தனஞ்சியரைக்காணோமென்று
பத்தாள்தளமேறி பார்த்தாளேதங்கையரும்
உப்பரிகைமீதேறி உத்தமியும்பார்க்கையிலே
ஊருக்குஅப்புரத்தே யுயர்ந்தபுரவின்மேல்
அண்ணர்வருகிற அடையாளங்கண்டுமேதான்
உப்பரிகைவிட்டிரங்கி உத்தமியுமோடிவந்து
தங்கையரண்மனையில் தான்வந்து நிற்கையிலே
அப்போதுபொன்னர் அரண்மனையில்வந்திறங்கி
புரவிதனைவிடுத்து பொன்னருமப்போது
தங்கையரண்மனையில் தான்வந்து நிற்கையிலே
கண்டுமேதங்கை கதரியேயோடிவந்து
அண்ணருடபாதம் அன்பாகத்தெண்டனிட்டு
போற்றிநிற்கும்வேளையிலே பொன்னருமேதுசொல்
வார், சதுரங்கபலமுடைய தம்பியருமெங்கேயம்மா
அத்தைபிள்ளைசரம்பன் அனேவோருமெங்கேயம்மா
என்றுபொன்னர்கேட்க யேதுசொல்வாள்தங்கையும்
எட்டானைப்பலமுடைய என்பிறவிஅண்ணாவே
படைபொருதப்போன பாரதமுங்கேட்கிலேயோ
போனதொருசேதி புதுமைகளுங்கேட்கிலையோ
நீங்கள்-தட்டான்பிறகு தான்போனபிற்பாடு



வேட்டுவப்படைகள் வெகுபடையுங்கூட்டமிட்டு
இனங்கள்பிரியாமல் அக்குரோணிசேனைதளம்
கனத்தபாறைவழிதனிலே கண்கொள்ளாச்சேனைதளம்
வந்துதேவேடுபடை வையகமுங்கொள்ளாமல்
மேட்டுமேல்காவல்நிற்கும் வீரபாகன்கண்டல்லவோ
வீரபாகன்கண்டு வெகுபடையைத்தான்மடித்து
கடிகியேயோடிவந்து கண்டசேதிசொல்லிடவே
அத்தைபிள்ளைமூவர்களும் ஆனைபடைவத்தனையும்
போனதுவுங்கண்டேன் பொருந்திவரகாணேனண்ணா
அதின்பிறகுசங்கன் ஆக்கரித்துபற்கடித்து
சின்னண்ணர்தானும் திரண்டபடைகாலாளும்
திறமூடனேபோனார்கள் திரும்பிவரக்காணேனே
படையெடுத்துப்போனவர்கள் பரிந்துவரக்காணேனே
ஒக்கமடிந்தாரோ ஊழ்வினைப்பயனாலே
என்றுசொல்லித்தங்காளு மேங்கிமுகம்வாடி
புலம்புகிறவேளையிலே பொன்னருமேதுசொல்வார்
அஞ்சாதேதங்கையரே அவ்விடத்தில்தான்போய்
தம்பிபடுகளத்தை தப்பாமல்தான்பார்த்து [ர
அத்தைபிள்ளைபடுகளத்தை அரைட்சணமேபார்த்துவ
போய்வாரேன் தங்கையரே பொற்கொடியேயென்று
அந்தமொழிகேட்டு அரியபிறவியரும் [சொல்வி
பொன்னரைப்பார்த்துபொற்கொடியாளேதுசொல்வா
ஆனைபடைசேனைதளம் எல்லாமடிந்திடத்தே [ள்
போனதேயாமாகில் பிழைமோசம்வந்துவிடும்
என்று சொல்லத்தங்காள் ஏதுசொல்வார்பொன்னரு
மே, தம்பிசங்கன்படுகளத்தைத் தான்பார்க்கவேணுமம்
மா, அரியபிறவியேநான் அரைட்சணமேபார்த்துவா
றேன், யென்றுபொன்னர்சொல்ல ஏதுசொல்வாள்தங்
காளும், மேனாட்டுவேடுவரை மிகவுநய்பப்போகாது
போகாதேஅண்ணாவே பிழைமோசம்வந்துவிடும்
அரண்மனைவிட்டுமண்ணா அப்புறத்தேபோகாதே

என்னைவொண்டியாக்கி தனிவழியேபோகாதே
என்னைஎழுதினவன் பிசகாயெழுதிவிட்டான்
உங்களையென்னசொல்வே னுத்தமரேபாதகரே
பெண்ணாய்பிறந்தல்லவோ நான்பிழைமோசமானேனே.
உற்றதுணையில்லையெனக் கொருவர்துணைகாணேனே
என்றுசொல்லிதங்காள் ஏங்கியேதான்புலம்பி
அழுதுபுலம்பிதங்கையரும் அண்ணன்முன் தான்விழு
ந்தாள், விழுதுபுலம்பிதங்கை மேனியெல்லாம்புண்ணா
க, புலம்பிஅழுகையிலே பொன்னருமேதுசொல்வார்
உத்தமியேபத்தினியே ஒருசொல்லுவாசகியே
உன்னைவிட்டுஇருப்பேனோ உத்தமிபத்தினியே
படுகளத்தைப்பார்த்துப் பத்தினியேஓடிவாறேன்
போர்க்களத்தைப்பார்த்து புகழுடனே நான்வாறேன்
அழுகாதேஎன்பிறவி நானரைட்சணமேவந்திடுவேன்
என்னதான்சொல்லியண்ணா யிதமாயுரைத்தாலும்
விடுவதில்லைஉன்னை வேந்தனேயென்றழுதாள்
அழுகிறதங்கையரை அண்ணருமேதான்பார்த்து
கண்ணீர்துடைத்து கடுகிமனந்தேற்றி
நான்போய்வருமளவும் நல்லதங்கையுத்தமியே
தங்களுமூப்பிகளும் தன்மாமன்தேவியரும்
அரண்மனையிலுள்ளவர்கள் ஆயிரந்தாதியர்கள்
உனக்குத்துணைவைத்தல்லவோ ஒருநொடியில்நான்வா
றேன், இப்படிக்குபொன்னர்சொல்ல ஏந்திழையாளே
துசொல்வாள், வாரவென்றசொல்லை மறந்துவிடுஅ
ண்ணாவே, எத்தனைபேர்கள்துணை யிருந்தாலுமண்ணா
வே, அத்தைபிள்ளைதாயா ரன்பாயிருந்தாலும்
நங்கைமாரிருந்தாலும் நல்லதுணையாமோ
பாருலகிலுள்ளவர்கள் பக்கத்துணையாமோ
எவர்களிருந்தாலு மெனக்குத்துணையாமோ
என்னவகைசொன்னாலுமண்ணா இனிப்போகவொண்
ணாது, போனதேயாமாகில் பிழைமோசம்வந்துவிடும்
பொய்யாதொருநாளும் நான்பொற்கொடியாள்கண்ட



கனா, நான்ஆவேசம்கண்டதுவும் அன்பாய்பலிக்குமண்ணா, போகாதேயென்பிறவி பொய்யல்லஎன்வார்த்
தை, அப்படிக்குத்தங்கைசொல்ல அண்ணரங்கேயேது
ரைப்பார், படுகளத்தைப்பார்த்து பத்தினியேயோடிவா
ரேன், அரைட்சணமேவந்திடுவேன் அஞ்சாதேதங்கை
யரே, என்றுமிகவும் யெடுத்துரைத்துதங்கையற்கு
தங்கைமனம்தேற்றி தனியேயிருக்கவைத்து

## புலம்பினதங்கைக்கு தைரியஞ்சொல்லி படுகளத்தைபார்க்க பொன்னர்போகும்போது வேடுபடைவரக்கண்டு சண்டைசெய்தல்.

பின்னைக்குதிரைதனை பிடியடாவென்றுசொல்லி
புரவிமேற்கால்போட்டு பொன்னாண்டாரப்போது
எழுபதுகட்டியடித்த இருப்புநல்லகேடயத்தை
தோள்மீதிற்போட்டு துருசாகஅப்போது
மேற்குநல்லவாசலிலே விட்டார்புரவிதன்னை
தாண்டிப்புரவி தான்பாயும்வேளையிலே
மேனாட்டுவேடுபடை வெகுகூட்டம்வருகுதென்று
கொள்ளைக்கடிகாலாளை கூப்பிடுங்கள்தானச்சு
பிள்ளான்தனைக்குதிரை பிறகோடிவாவென்று
எழுபதுகட்டியடித்த இருப்புநல்லகேடயத்தை
முதுகுதனிற்போட்டு மூர்க்கமுள்ளவாளெடுத்து
உக்கிரகண்டவாளெடுத்து குதிரைதனைமீட்டிடவே
மேகமொன்றாய்தான்கூடி மின்னிமறைந்தாப்போல்
இடிஇடித்தாப்போலே இருகாதம்போனதுவே
குதிரையுந்தான்பறக்க கோபமுள்ளபொன்னாண்டார்
வேடுபடையைக்கண்டு வெகுகோபம்தானாகி
வெள்ளாட்டின்கூட்டம்கண்ட வேங்கைபுலிபோலே
காருவைக்கண்டு கருவேங்கைபாய்ந்தாப்போல் [ல்
புள்ளாட்டெலியைக்கண்டு பூனைவந்துபாய்ந்தாப்போ
ஆனைத்திரளிலே ஆளிசிங்கம்பாய்ந்தாப்போல்
கொக்குதிரளிலொரு கொடியராசாளியைப்போல்
செந்நாய்த்திரளிலே செவ்வேங்கைபூந்தாப்போல்

மதவீமனைப்போலே மந்திரவாள் தானெடுத்து
இடசாரிவிட்டல்லோ இருதுண்டாய்வீசிடவே
வலசாரிவிட்டல்லோ மகாதேவர்தஞ்சமென்று
வீசினாரப்போது வேட்டுவர்தன்படையை
மூன்வீச்சுக்காயிரமாம் பின்வீச்சுக்காயிரமாம்
வெள்ளரிக்காய்போலே வீசினாரப்போது
வாழைத்தண்டைப்போலே வாட்டினாரப்போது
பட்டுவிழுவாரும் பறந்துதவிப்பாரும்
வேல்பட்டுருவி விழுந்துகிடப்பாரும்
காலற்றுவிழுவாரும் கண்டதுண்டமாவாரும்
கைகளற்றுகால்களற்று கனக்கமடிவாரும்
மார்பிளந்துயேங்கி மடிந்துகிடப்பாரும்
வெட்டிக்குவித்தாரே மேனாட்டுவேடுவரை
வீரமலைபோலே வெட்டிக்குவித்தாரே
கருமலையைப்போலே கடுககுவித்தாரே
கொல்லிமலையைப்போலே குவித்தாரே அன்னேரம்
வெட்டிக்குலவையிட்டு வெற்றிசெய்துவருகையிலே
மிஞ்சினவேடுபடை வெகுமோசம்வந்ததென்று
கும்பிட்டுதான்பணிந்து குலைகுலைந்துயோடுவாரும்
கையெடுத்துக்கும்பிட்டு ஒடுங்கியங்கேயோடுவாரும்
கும்பிட்டபேரை குலவையிட்டுபொன்னாண்டார் [ற
சேக்கையிட்டுமுடுக்கையிலேகொர்ச்சிதங்கள்செய்துநின்
றூர்க்குமுள்ளசேவகரை முடுக்கித்துறத்தையிலே
ஓடுதேவேடுபடை உள்ளமெல்லாம்தானடுங்கி
கால்கள்தடுமாறி காலசைந்துவிழுவாரும்
ஓடபலனில்லாம லுருண்டுவிழுவாரும்
நின்றுதிகைத்து நெடுகவிழுவாரும்
போகாதேயென்றுசொன்ன பேர்களும்தானோட
திக்குதிக்காய்முரிந்து திசைகெட்டுயோடையிலே
மூக்கனும்குரிச்சிமட்டு முடுக்கிவெட்டித்தான்குவித்தார்
புலியூறுவழிதனிலே பொங்கியங்கேயோடுதப்போ
முன்னால்குருக்காட்டி முடுக்கிவெட்டித்தான்குவித்தார்



வெளவால்துறையளவு மடக்கியேதான்குவித்தார்
கூடலூர்பூதமட்டும் குருக்காட்டிகருவறுத்து
தலையூறுபூதமட்டும் தத்தளிக்கவெட்டிடவே
மிஞ்சினவேடுபடை மேற்கேவிழுந்ததப்போ
கொங்குகன்னிவாடிமட்டும் குலவையிட்டுதான்முடுக்கி
முகிலனூர்பூதமட்டு முடுக்கிகருவறுத்து
நிலம்பூர்க்கரைவறைக்கும் நிணக்குருதிராறோடே
தென்கிழக்குமூலையிலே திசைதப்பியோடுதப்போ
மஞ்சனகர்பூதமட்டும் வாளாற்றுணித்திடவே
குருக்களைபூதமட்டும் குலவையிட்டுக்கருவறுத்து
கீழ்வடக்குமூலையிலே சேக்கையிட்டுமுடுக்கையிலே
இலவனூர்பூதமட்டும் யேகமாய்ச்சங்கரித்து
பேருசொல்லபிள்ளைகளு மில்லாமல்கருவறுத்தார்
யெதிர்ப்பாருமில்லாமல் இலவனூர்மந்தையிலே
குதிரைவிட்டுகீழிறங்கி கொம்பெடுத்துபல்விளக்கி
காலுமுகம்சுத்திபண்ணி கட்டுச்சாதமெடுத்து
சாதமுஞ்சாப்பிட்டு தன்புரவிமீதேறி
வீரமலைதிசைநோக்கி விட்டார்புரவிதனை
துலுக்கபாறைவழிதனிலே துரிதாகத்தானடந்து
சிந்தாமணிப்பேட்டை சீக்கிரமாய்தான்கடந்து
வீரமலைதிசைநோக்கி விதமாய்வருகையிலே
வீரப்பூர்வீதியிலே மெள்ளவேதானிறங்கி
சற்றேயிளப்பாறி தானிருக்கும்வேளையிலே
படுகளத்தைதானினைந்து பதறியெழுந்திருந்து
தம்பிபடுகளத்தை தான்பார்க்கவேணுமென்று
அத்தைபிள்ளைபடுகளத்தை அன்பாகபார்க்கவென்று
படுகளத்தைதேடி பதறியெழுந்திருந்து
புரவிதனிலேறி புறப்பட்டார்பொன்னாண்டார்
வீரமலைச்சார்பில் விரைந்தோடிபார்க்கையிலே
ஆராய்ந்துதேடி அவ்வனத்தில்பார்க்கையிலே
வேங்கைமரத்தடியில் விரைந்தோடிபார்க்கையிலே

### பொன்னர்தம்பி யிறந்ததைக்கண்டு புலம்பித் தானுமடிதல்.

மண்டியிட்டபாவனையாய் மடிந்ததைக்கண்டுவிட்டார்
தம்பிபடுகளத்தை தான்பார்த்துகண்கலங்கி
ஆர்ப்பரித்துபற்கடித்து அப்புறத்தேபார்க்கையிலே
அத்தைபிள்ளைபடுகளத்தை அடைவுடனேகண்டாரே
செப்பூலாம்புதையோரம் சேரமடிந்துவிட்டார்
படுகளத்தைகண்டவுடன் பதறியேகண்சிவந்து
கண்ணீர்விடுத்து கதறியேபொன்னாண்டார்
என்னவென்றுசொல்லி ஏங்கிப்புலம்புகிறார்
தம்பியடாசங்கா தாடாளாயென்பிறவி
என்னைவிட்டுநீதா னேகவும்நீதியுண்டோ
ஏழானைதன்பலத்தை எங்கொளித்துவிட்டாயோ
நீ-கொக்கரித்துவாளெடுத்தால்கோடிபடையோடிடுமே
நீ-ஆக்கெரித்துவாளெடுத்தா லண்டம்நடுங்கிடுமே
நீ-வச்சிராயுதமெடுத்தால் மடியுமேகோடிபடை
நீ-சீறாவெடுத்தால் சிதையுமேகோடிபடை
நீ-வேலெடுத்துநின்றால் வேட்டுவர்கள் தானெதிரே
அத்தைபிள்ளைமூவர்களும் அவனியைவெல்வாரே
இப்படிதானிருக்க யெழுதும்விதிப்படியோ
ஒக்கமடிந்தீரோ யொருத்தரறியாமல்
நான்வந்துகூடுமுன்னே நாடியிங்கேவருவாரோ
உள்ளவிதிப்படியே ஒருவர்தள்ளப்போகாது
தங்கைபிறவிதனை தனித்துவிட்டுவந்தோமே.
ஈசனார்தன்செயலை எவரறியப்போறார்கள்
என்றுபலவிதமாய் ஏங்கிமிகப்புலம்பி
இனிமேலுநாமிருந்தா லிவ்வுலகிலேற்காது
ஊருக்குப்போய் ஒருவனிருப்பதுண்டோ
தம்பிதனைவிட்டு தரணியைஆள்வதுண்டோ
என்றுமனதிலெண்ணி இறந்துமடிவோமென்று
கண்ணாடிசுனையருகே கைவாளைதானாட்டி
ஈசனார்தஞ்சமென்று இன்பமுடன்தெண்டனிட்டு



ஐங்கரனார்தஞ்சமென்று அடிபணிந்துதெண்டனிட்டு
மாயன்பெருமாளை மலர்தூவிதெண்டனிட்டு
ஏறுமயில்வாகனனை இன்பமுடன்கைதொழுது
பரிசையுந்தோளில்போட்டு பாங்கானபொன்னருமே
வில்லம்புகீழேவைத்து விதமுடனேஅப்போது
எழுபதுகட்டியடித்த இதமுடையஆயுதத்தை
பாரமலைபோலே பக்கத்தில்முன்னேவைத்து
மண்டியிட்டபாவனையாய் வாள்மேலேதான்விழுந்தார்
இறந்துமடிந்தாரே எல்லோருந்தானுமங்கே
வீரமலையடிவாரம் விதமானசோலையிலே
வேங்கைமரநிழலில் வேந்தர்கள்தான்மடிந்தார்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே

### தங்கைசொற்பனம்கண்டு சண்டைக்குப்போன அண்ணமாரிறந்தாரென்று புலம்பிபார்க்க நங்கைமார்களை யழைத்தல்.

அண்ணரைக்காணோமென்று அறியபிறவியரும்
இன்னம்பரவில்லையென்று ஏங்கிமுகம்வாடி
அண்ணரிருவர்களும் அத்தைபிள்ளைமூவர்களும்
வரக்காணோமென்றுதங்கை வாடிமனம்தளர்ந்து [று
அரியதங்கைபுலம்புகிறாள் அண்ணரைக்காணோமென்
அன்னவுஞ்சல்விட்டிறங்கி அவன்பதறிதானேங்கி
வேடுபடைதான்பொருந்தி வீரமலையடிவாரம்
நாடுபடைபொருதி நாகமலையடிவனத்தில்
மடிந்ததள்ம்தானறிய வர்றாளேபத்தினியே
படைபொருதப்போனவரைப் பத்தினியாள்தான்தேடி
ஏழாந்தளமும் ஏறும்பெருமண்டபமும்
எட்டாந்தளமும் எழிலானமண்டபமும்
பத்தாந்தளமும் பந்தடிக்கும்கூடங்களும்
பந்தடிக்குங்கூடங்களும் பளிங்குமாமண்டபமும்
சாந்தால்தரைமெழுகி தானிருக்கும்மாளிகையும்
குத்துவிளக்கெரிய குங்குமத்தால்கோலமிட்டு
தூண்டாவிளக்கெரிய தோழியர்கள்பந்தடிக்க

தூணுக்குத் தூணு சுடர்விளக்கு நின்றெரிய
காடைவிளக்கெரிய கவுரிகுஞ்சம்பரிமாற
வெள்ளைவிளக்கெரிய வெடிமீன் துலக்கமிட
பஞ்சவர்ன்னக்கிளிகள் பறந்துவிளையாடும்
மாணிக்கதுலக்கமிட்டு மயிலிருந்து கூத்தாடும்
அன்னக்கிளியாட ஆகாசம்பந்தெரிந்தான்
பந்துதவறியங்கே பஞ்சணையில்தான்விழுந்து
எடுத்துபந்துதவரித்தென்று எமாரித்தங்கையரும்
மாளிகையில்தானிருக்கும் மங்கையர்கள் தாதியரை
தோழியரைத்தானழைத்து துயரமெல்லாஞ்சொல்லு
கிறாள், துயரம்சொல்லும்வேளையிலே சேர்ந்து வரும்
நித்திரைகள், அப்போ-மெய்யுறக்கம்தானாகி மேனியெ
ல்லாம்வேறுபட்டு, சோபமெத்தவுண்டாகி சோர்ந்தா
ளே மெத்தையிலே, சொற்பனங்கள்கண்டு துரிசாயெழு
ந்திருந்து, மாதுதிரோபதையாள் வந்தபதிசொன்னாப்
போல், கன்னியிளமான்போலே தங்கைகண்டுயெழுந்தி
ருந்து, அன்னவுஞ்சல்விட்டிறங்கி யொருயாவேசம்க
ண்டனென்று, வன்னக்கிளிபோலத்தங்கை வாய்திறந்
துயேதுசொல்வாள், பாரதங்கள்போரும் பதினெட்டு
நாளையிலே, நடந்தகதைபோலும்நமக்குமேயிப்போது
ஏவுதுபல்லியது நமக்கு இருப்பிடங்களில்லாமல்
தாவியேசொல்லுகுதுதங்கைக்கு தரிப்பிடங்களில்லையெ
தீமூலைப்பல்லியது திகுதிகென்றுசொல்லுகுது [ன்று
பாழ்மூலைப்பல்லியது பதறியங்கேசொல்லுகுது
உச்சியிலேபல்லியது உயர்ந்த அச்சம்சொல்லுகுது
ஆண்டுசொன்ன நிமித்தம்அரிந்துகொள்ள தங்கையரு
அண்ணரிருந்து அரசாளுமண்டபத்தே [ம்
சென்றதுகாலமென்று தீப்பல்லிசொல்லுகுது
எண்ணரியசவ்பரானர் எழுதும்படிதப்பாமல்
மண்ணிழந்துமனையிழந்து மாளிகையும்வேறுபட்டு
வீடுவிட்டுப்போக விதியும்விதித்தானோ
நாடுவிட்டுக்காடுறைய நம்மவிதிப்படியே



மண்ணும்பகையாச்சு மாளிகையும்வேறாச்சு
கலையிழந்தமான்போலே தங்கை கலங்கிமனதுநொந்து
துள்ளியெழுந்திருந்து தோழியரைவாருமென்று
வெள்ளிபடிகடந்து விதமாகத்தானெழுந்து [று
பள்ளியரைமாளிகைமுன் பைங்கொடியாள்வந்துநின்
அண்ணமார்தேவியரே அருக்காணியிளவரசே
பெரியண்ணன்தேவியரே பேடைமயில்வாகனமே
சின்னண்ணன்தேவியரே செல்வத்திருமுகமே
பேருலகையாண்டிருந்த பெரியண்ணன்தேவியரே
சீருலகையாண்டிருந்த சின்னண்ணன்தேவியரே
கோலப்பசுங்கிளியே குமாரசங்கன்தேவியரே
காலப்பசுங்கிளியே வாழ்வீரன்தேவியரே
என்றுசொல்லித்தங்கை யின்பமுடன் தானழைக்க
பறந்துவந்துதேவியர்கள் தங்கைபாதம்தனைப்பணித்
து, மூந்தாணிகொண்டல்லவோ தங்கை முகந்துநீர்தா
ன் துடைத்து, என்தாயேமாதாவே எனழைத்தாயுத்த
மியே, அப்போ-அண்ணருடன்பிறந்த அருக்காணி
யிளவரசு, பொன்னருடன்பிறந்த பேடைமயில்வாய்தி
றந்து, சங்கருடன்பிறந்த தங்காளுமேதுசொல்வாள்
எங்களண்ணமார்தேவியரே எடுத்துரைக்ககேளுமடி
தங்கைமதனியரே நாத்தியரேகேளுங்கடி
எங்கள்-அண்ணமார்தேவியரே அருந்துதியேகேளுங்
கடி, அப்போது-அண்ணமார்தேவியரும் அன்பாகயே
துசொல்வாள், எங்களை அழைத்தவகை இளங்குயிலே
சொல்லுமம்மா, அப்போதுதங்கை அவர்களுக்கெடுத்
துரைப்பாள், நடைமிகுந்தபரியேறி நாட்டிலேபோன
வர்கள், படையெடுத்துப்போனவர்கள் பரிவாய்வரக்கா
ணோம், சத்தியமேமெய்யாகச் சதிகாரன்சொல்கேட்டு
வெற்றிவுள்ள அண்ணருக்கு வினைகள்வந்துநேர்ந்தது
விதமானபறியோடு வேட்டுவரைச்சங்கரிக்க
படையெடுத்துபோனவற்கு பாழுங்கேடானதுண்டோ

வெற்றியுள்ளவீரியர்கள் வேடுபடையோனிடத்தில்
உங்களத்தைபிள்ளை மூவருக்கு மானபிழைவந்ததுண்
டோ, பாண்டவர்கள் நூற்றுவர்கள்பாரதங்கள்செய்தா
ப்போல், ஆனைபடைசேனைதளம் அடங்கலும்பட்டது
ண்டோ, பொன்னிவளநாடு புகழ்பெரியஆலந்தூர்
மண்ணிழந்துபோனதுண்டோ மாமயிலேசொல்லும
உன்மனதுகுறிகளெல்லா முத்தமியேசொல்லுமடி [டி
என்மனதுக்கிசைந்த இளவரசேசொல்லுமடி
அந்தமொழிகேட்டு அருந்ததியுமப்போது
சிந்தைகலங்கியே சேதிகளுஞ்சொல்லுகிறாள்
என்னமொழியுரைப்பேன் யேதென்று நானறிவேன்
வன்னமயில்தோழியரே வாய்திறந்தேதுசொல்வேன்
வேடுபடைதான்கூட வெட்டியேசங்கரிக்க
போனதிசையறியேன் அண்ணன்போய்மாண்டகாடறி
யேன், விற்போற்கள்தான்பொருதி விடாய்பட்டகளம
றியேன், மற்பொருதியல்லோ அண்ணமார்மாண்டகள
ம்நானறியேன், அஞ்சுகொத்துசல்லிகட்டி அறியநட
னமிடும், கொஞ்சுபரிமீதேறி கொங்கர்மேல்போனவர்க
ள், வெள்ளிகட்டுவேல்வாங்கி வேட்டுவரைசங்கரித்து
வள்ளிவனம் தான்கடந்து அண்ணமார்கடுகிவரக்கா
ணேன், நாடுபடைபொருந்தி நம்மிடநகரில்வந்துசேரா
மல், வேட்டுவரைசங்கரித்து அண்ணர்விடுதிவந்துசே
ராமல், தழைத்தமரத்தடியில் தண்ணீர்சிவாலயத்தே
குளிர்ந்தமாத்தடியிலண்ணர் கூடாரம்போட்டிடத்தே
கூடாரசாவடியும் கொலைகளமும்நானறியேன்
நாடாளுந்தங்கையவள் நல்லதங்காள்பத்தினியும்
வாசற்படிக்கு வழியறியேன்பத்தினியாள்
தேசங்கடந்துஅண்ணரை தேடிவழிபோகவேணும்
வழித்துணைவாய்வாருங்கடி வண்ணமயில்தோகையரே
நாமெல்லோரும்போவமடி நங்கையரேவாருமடி
எனக்குத்துணைவாருங்கடி என்பிறவிதேவியரே
நமக்குத்துணையாக நங்கையரேவாருமடி



செம்மானம்போலே சிவந்துமனம்தான்கலங்கி
அம்மான்பெருமாளு மறியதவமீண்டுபெற்ற
பெரியம்மான்தானீன்ற பேடைமயில்வாகனமே
அறியவளநாடாளும் அம்மாமனீன்றெடுத்த
சின்னம்மாளீன்றெடுத்த செம்பொன்மணித்திருவே
என்மாமனீன்றெடுத்த இளஞ்சியமேவாருங்கடி
அப்போதுதோழியரும் அருந்ததியைத்தான்பார்த்து
அன்னக்கிளிபோல அம்மான்மகளாரும் [து
கிளிக்கொஞ்சம்பாவனைபோல்கிளிமொழியும்வாய்திறந்

தங்கையிடத்தில் நங்கைமார்கள் தங்களை கல்
யாணம்செய்து சிறையில்வைத்தபடி
யால் வருவதில்லையென்று
சொல்வது.

சொல்லுகிறார் நங்கையர்கள் சுகமிலாவார்த்தைகளை
சின்னவயதில்நங்கையர்கள் திறமில்லாநாளையிலே
கொஞ்சம்வயதில் குடிமிப்பிராயத்தில்
அண்ணமார்க்கென்று அருங்கிளியேஎங்களைத்தான்
சோபனஞ்செய்யவென்று துருசாய்முகூர்த்தமிட்டு
ஆள்பதினாறில் ஆனதிங்கட்கிழமையிலே
தேடியேரோகணியில் செய்கன்னிலக்கினத்தில்
வாலைப்பிராமணர்கள் மறையோர்கள்தான்கூடி
நல்முகூர்த்தமிட்டு நலமாகயெல்லோரும்
வேழமுகக்குஞ்சரனை விநாயகனையுண்டுபண்ணி
நாள்முகூர்த்ததேங்காயும் நன்றாகவேயுடைத்து
வல்லதொருசாஸ்திரங்கள் மறையோரும்தான்கூடி
ஜோசியர்களெல்லோரும் சோபனங்களென்றுரைக்க
பட்டணத்திலுள்ள பரிவாரந்தான்கூடி
தட்டியரைந்து தளம்பெரியவளநாட்டில் [க்கு
செல்லியெனும்பெண்பெருமாள்தேன்மொழியாள்தன
சல்லிசவரமுடன் தண்டிகையுஞ்சேனையுடன்
ஆனைபடைசேனையுடன் அன்பாகவந்திறங்கி [லே
எண்ணவொண்ணாச்சேனையுடன் யெங்களையவாசலி

வெற்றியுள்ளமாயன்மகள் விதமானசுந்தரிக்கு
அர்த்தமுடைய ஆனதிரியோதிரனும்
மெத்தபரியமென்று விதமாய்க்குவித்தாப்போல்
உத்தவளநாட்டார்கள் உத்தமர்கள்வந்திறங்கி
பொன்னாலேபந்தலிட்டு புகழ்பெறவேயலங்கரித்து
கண்ணாடிகட்டி கடுகியலங்கரித்து
முத்தாலேதூணிருத்தி முன்னாலேயலங்கரித்து
முத்துநவரத்தினத்தால் மூர்க்கமாய்சோடித்து
முல்லையிருவாட்சி முகமலர்ந்தசெண்பகமும்
மணவரைசோடித்து மல்லிகைப்பூச்சரங்கள்
நல்லவர்கள்கொண்டாட நடுவேசிங்காதனங்கள்
பூவாலேயலங்கரித்து பொன்னிவளநாட்டாரும்.
ஆலத்தூர்தன்சனமும் அழகுபொன்னிநாட்டாரும்
நீலத்துடர்மார்பன் நெல்லிவளநாட்டாரும்
வைங்கைநெல்லிதேசத்தார் வடசேரிநாட்டாரும்
வைகைவளநாட்டாரும் வைகைபெருமாளும்
செய்கைமறவாக செய்யபெருமாளும்
இந்திரனுக்கொப்பான யெதிரில்லாப்பெருமாளும்
மந்திரிகள்சூழ்ந்துவர மைத்துனர்வந்துநிற்க
பாஷையரியாத படைமன்னர்முன்னடக்க
ஆனைகுதிரைதளம் அணியணியாய்முன்னடக்க
சேனைபடைகாவலர்கள் சேரவேமுன்னடக்க
வகைவகையாய்முரசறைந்து வலம்புரிச்சங்கூத
சிங்காரமாகவேதான் சிறந்தாடல்வீசிவர •
சின்னங்களூதிவர திருவாசகம்படிக்க
வாணமதிர்ந்திடவே மணிமுரசுதான்முழங்க
தப்பட்டைபேரிகை தரணியதிர்த்திடவே
விற்காரரொருகோடி வேகமுடன்முன்னடக்க
மெய்பொருதுசெட்டியார்கள் விநமாகவேநடக்க
கட்டியர்கள்கூறிவர கன்னியர்களாடிவர
நட்டுமுட்டுகோஷ்டிக்க நாடகங்களாடிவர
சேனைமன்னர்காவலர்கள் சேர்ந்துதிரண்டுவர



அனையேறிமாலைசூட அலங்காரகோவிலனுக்கு
அருமையுடன்பெரியோர்கள் அன்பாகவந்துநின்று
பெருமையுடன்தேங்காயும் பிரியமுடனுடைத்து
தேங்காயுடைத்து திருவிரலில்மிஞ்சியிட்டு
பரந்துஜனங்களெல்லாம் பரிவுடனேபார்த்துநிற்க
தேசத்துராசாக்கள் திட்டமுடன்பார்த்துநிற்க
நல்லபெரியோர்கள் நலமுடனேவந்துநிற்க
மங்களவாழ்த்து வகையுடனேபாடிநிற்க
ஓமப்புகைதானும் உலகமெங்குமூடிநிற்க
துந்துமிநாகசுரம் துரிதமுடனூதிநிற்க
எக்காளையூதிவர இடிபோல்முரசதிர
தோரணமாலைகளுந் துலங்கவலங்கரித்து
ஊரிலுள்ளசனங்களெல்லாம் உண்மையுடன்பார்த்து
நிற்க, யெச்சானபறைமேளம் இடிபோலேதானதிர
பிள்ளாங்குழலூதப் பேரிகைதான்முழங்க
சிறந்தமணவரையிற் றிருச்சங்குவோசையிட
பட்டுப்பாய்போட்டு பாங்காயிருந்தபின்பு
அந்தட்சணமே அடைவாகக்கூட்டிவந்து
பாங்காய்மணவரையில் பலபேருஞ்சூழ்ந்திருக்க
ஆயிரம்தேங்காய் அடைவாகமுன்னுடைக்க
தாய்மாமன்யெனையெடுத்து தன்பக்கம்முன்னேவைத்
து,செம்மீனுதிக்குமுன்னே சிறுகோழிகூவுமுன்னே
அம்மிவலமாகவே அரசாணிமுன்பாக
பிறம்புவலமாகவே பேரரசுமுன்பாக
கரும்புவலமாக கரகஞ்சால்முன்பாக
அஞ்சுவயதிலே நாங்களறியாப்பிருயத்திலே
சோமனித்திருணிபோல் சோடித்தலங்கரித்து
மாமனெடுத்து வலதுபக்கம்வைத்ததுண்டு
பரமசிவனும் பார்வதியுந்தானறிய
தேங்காயுடைத்துத் திருமங்கிலியம்முன்னேவைத்து
வேதப்பிருமணர்கள் வேதியர்கள்தானோத
சாதிப்பிராமணர்கள் சாஸ்திரங்கள்தானோத

ஓமங்கள்தான்வளர்த்தி உத்தரித்தமங்கிலியம்
மங்கிலியம்வாங்கி மணவாளன்முன்னாக
நாத்தியிளங்கிளியாள் நலமாகத்தான்வாங்கி
செங்கையிலேதான்வாங்கித் திருக்கழுத்திலேபூட்டி
மாத்தில்லாமங்கிலியம் மணிக்கழுத்திலேபூட்டி
மங்கிலியம்தரித்தபின்பு மணவரையிலுள்ளவர்கள்
அறுகுமணம்செய்தா ரன்புள்ளபெரியோர்கள்
ஐவர்களுங்காண அருந்துதியைக்கைதொழுது
தெய்வசபைநடுவே திருத்தமுள்ளமணவரையில்
பெண்ணாவிபட்டாலுங்களண்ணன் பிலமுங்குறையுமெ
ன்று,பொன்னாலேசுண்டுவிரல் பொருந்தவேயுண்ணிப
ண்ணி, எங்களண்ணன்சுண்டுவிரலிலிட்டுசுகமுடனேஎ
ங்களையும்,அந்தப்-பொன்னின்விரலால் பிடித்ததொரு
தோஷமுண்டு, நாங்கள்-சுண்டுவிரற்பிடித்துச்சுத்திவந்
ததோஷமுண்டு, அன்றுமுதலின்றளவுமுங்களண்ணர்
சிறையில்வைத்தார், கொண்டுவிட்டுஉங்களண்ணர் கொ
டுஞ்சிறையில்வைத்தார்கள், அன்றுமுதலின்றளவுநாங்
களருஞ்சிறையில்தானிருந்தோம்,கரகம்பிடித்தரியோம்
நாங்கள்கைக்குநீர்வார்த்தரியோம், பிரியமுடனிருந்து
உங்களண்ணருக்குபிறமுதுகுதேய்த்தறியோம்
எதிர்த்துமுழித்தறியோம் நாங்கள்ஏகாந்தம்பேசறி
யோம், மதியுள்ளபத்தினியே நாங்கள்வாழ்ந்ததுவுங்
காணீரோ, நாங்களாக்கியிடுஞ்சோறுகறி அனல்வாசம்
வீடுதென்பார், பொங்கியிடுஞ்சோறுகூறி உங்களண்ணர்
புகைவாசம்வீசுதென்பார், எங்களைக்கண்டவுடன் இனி
யபலங்குறையுமென்று, கண்ணெடுத்துப்பார்த்தறியார்
காரிழையேதங்கையரே, நாங்கள்-பாவிவயற்றிலே படுத்
திருந்தநேரமோதான், மண்பிடித்துப்போடையிலே
மகாதேவன்சொற்படியோ, முன்னாள்விதிப்படியோ மு
க்கணார்சொற்படியோ, பெண்ணாய்ப்பிறந்துபிழைமோ
சம்போனோமே,மண்ணோரஞ்சொன்னோமோவழக்கோ
ரஞ்செய்தோமோ, இன்னாள்வறைக்குநாங்களிருந்தவு



கைகேளீரோ,காருளன்வங்கிஷமேகண்மணியேதங்கை
யரே, தாமென்றுசொல்லித்தரணியிற்கேட்டிருப்போம்
ஒருமனமுமில்லாமல் நாங்களுதாரியானோமே
என்றுசொல்லிநங்கைசொல்லதங்காளேங்கிமுகம்வாடி
சிந்தைகலங்கிதங்காள் சிவசிவாவென்றுசொல்லி
அண்ணருடன்பிறந்த அருக்காணியிளங்கிளியும்
பொன்னருடன்பிறந்த பேடைமயிற்றங்காளும்
சங்கருடன்பிறந்த சாதிமரிக்கொழுந்தும்
தயங்கிமனந்தளர்ந்து தானும்முகம்வாடி
அண்ணருடதேவியற்கு அன்பாயெடுத்துரைப்பாள்
அண்ணமார்தேவியரே அருக்காணியிளவரசே
சின்னண்ணர்தேவியரே சேதிசொல்வேன்கேளுமடி
நானொருத்திபிறந்தவட்குஉற்றதுணையென்றிருந்தேன்
நான்-ஆனபிறப்பிறந்து அம்பலத்தில்நின்றேனே
பெண்பிறந்ததங்கையற்குப் பெரியதுணைவாருங்கடி
இருவருடன்பிறந்து நானிளப்பமாய்போனேனே
நானொருத்திதனித்தேண்டி யுத்தமியேவாருங்கடி
வாருமென்றுதங்காளும் வரிசையுடனழைக்க
ஊருவழிபோவதற்கு நீங்களுத்தமியேவாருங்கடி
நாங்கள்துணைவாறதற்கு நல்லதங்காளுத்தமியே
உன்-தாதிமாரெங்கையடி தையவிளங்கிளியே
அப்படிநங்கைமார்சொல்ல நாயகியாளேதுசொல்வா
அன்னம்போல்வாய்திறந்து அறியபிறவியரும் [ள்
சொர்ணம்சொரிந்தாப்போல் தோகையரும்சொல்லுகி
பத்தினியாள்போறவழி பலதாரிதுணையாமோ [ருள்
நானுத்தமியாள்போறவழி ஊதாறிதுணையாமோ
பலதாறிபின்போக பாருலகில்யேற்காது
உற்றதுணைவாருங்கடி உத்தமியேநங்கையரே
நான்பத்தினியாள்போறவழிப் பாங்காகவாருங்கடி
என்றுமேதங்காளிதமாயுரைக்கையிலே
நங்கைமாரெல்லவரும் நலமாகவேதுசொல்வார்
பட்டபடுகளத்தை பாரதமுந்தான்பார்க்க

இட்டசிவனுரும் எங்களுக்குளழுதவில்லை
நாங்கள்வருவதில்லை நலமாகபோடியம்மா
ஒருவர்வருவதில்லை உத்தமியேபோடியம்மா
போமென்றுசொற்கேட்டு பொற்கொடியும்நல்லதங்கா
ஐயோசிவனேயென்று அலறிமிகவழுதாள் [ள்
புலம்பியேநல்லதங்காள் பொற்கொடியுமேதுசொல்வா
அண்ணன்செய்தகுற்றம் அனேகமிருந்தாலும் [ள்
பெண்ணைப்பிறந்தவர்கள் பொருக்கவிதியல்லவோ
யென்னைமுகம்பார்த்து எனக்குத்துணைவாருங்கடி
சின்னண்ணன்தேவியரே தெய்வப்பசுங்கிளியே
பெரியண்ணன்தேவியரே பேடைமயில்வாகனமே
அண்ணமார்தேவியரே அருக்காணியிளவரசே
நானொருவழிபோர்வேனே வுத்தமியேவாருங்கடி •[கள்
நான்-தனித்துவழிப்போவேனே நயவுசெய்துவாருங்
என்னதான்சொல்லித்தங்கை யிதமாயுரைத்தாலும்
நாங்கள்வருவதில்லை நாயகியேபோடியம்மா
இன்றுவருவதில்லை இளங்கொடியேபோடியம்மா
என்றுசொன்னபோதுதங்காளேங்கிமுகம்வாடி
மூன்கைநெரித்தல்லோ முகத்தோடேதானறைந்து
செங்கைநெரித்தல்லோதங்காள்சிவனேயெனப்புலம்பி
கண்கள்நெருப்பெரிய கடைக்கண்கள் நீரோட
சிங்கமுகம்போலத்தங்காள் சினந்துமிகவழுதாள்
தன்மார்பிற்கண்ணீரை தாரைவிட்டுத்தானழுதாள்
தங்கையுடகோபம் தான்பொருக்கக்கூடாது
என்றுதான்தங்கையர்க ளிதமாகவோடிவந்து
கோதிமயிர்முடித்து குளிர்ந்தமுகம்தானோக்கி [து
முந்தாணிகொண்டுதங்காள் முகந்து நீர்தான்துடைத்
அஞ்சாதேதங்கையரே ஆனதுணைநான்வாறேன் [ன்
வஞ்சனையும்சொல்லவில்லை வாய்த்துணைநான்வாறே
யென்றுசொல்லிநங்கைமார் எடுத்துரைப்பாரப்போது

தங்கைபுலம்ப நங்கைமார்கள் நகைகளில்
லாமல் வருவதில்லையென்றுசொல்ல
தங்காள் பணமுங்கொடுத்தல்.

இன்னமொருபுதுமை யெடுத்துரைக்கக்கேளுமம்மா[லை
பண்ணும்பணிதியில்லை எங்களுக்குபட்டுகளுந்தானுமி



ஆனபட்டுஉடுத்தயில்லை நாங்களாபரணம்பூணயில்லை
பூண்டுவரப்பணிதியில்லை எங்களுக்குபொற்கம்பிசேலை
யில்லை, உடுத்திவரச்சீலையில்லை எங்களுக்குஉள்ளாடை
தானுமில்லை,தோழியர்களப்போதுயரமுடன்சொன்னு
ர்கள்,அப்போதண்ணருடற்பிறந்த அருங்கிளியாளுத்
தமியும், பொன்னருடன்பிறந்த பேடைமயில்நல்லதங்
காள்,உக்கிருணமாளிகையை உள்பூட்டுத்தான்திறந்து
பொக்கிஷமாளிகையை பொட்டெனவேதான்திறந்து
அண்ணமார்தேவியற்கு ஆபரணம்தான்கொடுத்து
மேதினியில்தான்மதிக்க வேணுமென்ற ஆபரணம்
சொர்னமயில்போலே சோடிக்கவேணுமென்று
பின்னுல்சவுக்களியும் பீதாம்பரப்பட்டுகளும்
கருங்குருவிவாலதுபோல் கண்ணுக்குமையுமிட்டு
குப்பியசைந்தாட கொண்டையிலேதான்முடித்து
செங்கரத்திற்றங்கவளை சிறப்புடனேதானணிந்து
பொங்கமுடன்கட்டுவயம் பொற்சரடுதானணிந்து
கடையம்வளையமிட்டு காலாழிதானணிந்து
குடைபோலேகொப்புமிட்டுக் கோலாச்சிந்தாக்குமிட்டு
காலுக்குச்சிலம்பணிந்து கலதலெனத்தண்டையிட்டு
மேலுக்கணிந்துநகை மேகவர்னப்பட்டுடுத்தி
நெத்திக்குப்பொட்டுமிட்டு நிலாப்பிறையும்தான்முடித்
து, முத்துவர்னநற்துயிலை முடிசிறக்கக்கொய்துடுத்தி
அல்லித்துரைக்கம்பம் ஆனசிகப்பணிந்து
கிள்ளுக்கொசுவம்வைத்துக் கிளிக்காலில்பாடகமும்
சாந்துபுனுகணிந்து சவ்வாதுதான்பூசி
ஏந்துகனதங்காட்கு யிருதோளும்பூரிக்க
ஒப்பித்தாள்தோழியர்கள் உலகமெல்லாந்தான்மதிக்க

மாளிகைபார்த்து வருகிறோமென்று நங்கை
மார்கள் மாளியிற்புகுந்துகொண்டு வரு
வதில்லை என்று சொல்லுவது.

அப்படியே அலங்கரிக்க யேதுசொல்வார்நங்கையர்கள்
நாத்திஇளங்கிளியே நல்மாமன்தன்மகளே

உத்தமியேதங்கையரே ஒருசொல்லுவாசகியே
பத்தினியேதங்கையரே பரிவாகக்கேளுமம்மா
பளிங்குமாமண்டபமும் பாங்கானகூட்டங்களும்
ஏழாந்தளமுந்தங்கா ளிடம்பெரியமாளிகையும்
சித்திரமாளிகையும் சிறப்பானமேடைகளும்
அன்றுமுதலின்றளவும் அறிந்ததில்லைதங்கையரே
ஒருநாளுங்கண்டறியோம் உத்தமியேதங்கையரே
சுத்திமெள்ளப்பார்த்துச் சுறுக்காகவாருமம்மா
பார்த்துவருகிறோம் பளிங்குமாமண்டபத்தை
என்றுசொல்லிநங்கைமா ரின்பமுடன்கேட்க
நல்லதுதங்கையரே நன்றாகப்போய்வாரும்
என்றுசொல்லித்தோழியரு மின்பமுடன்கேட்டு
சென்றவிடம்விட்டுத் திடுக்கென்றெழுந்திருந்து
அரண்மனைகளெல்லாம் அன்புடனேசுத்திவந்து
பார்த்துமேநங்கையர்கள் பாங்குடனேஓடிவந்து
தங்காளிருக்கும் தங்கமணிமாளிகையில்
சித்திரமாளிகையில் சிறப்புடனேதான்புகுந்து
உள்தாளுமிட்டு பிறதாளுந்தான்பூட்டி
கதவைஅடைத்து கனமாயிருந்துகொண்டார்
அப்ப-அண்ணருடன்பிறந்த அருக்காணியிளவரசு
பொன்னருடன்பிறந்த பொற்கொடியாநல்லதங்காள்
முத்துவர்ணத்துயிலை முடிசிறக்கொய்துடித்தி
அந்தமுள்ளஆபரணம் அழகுடனேதான்பூட்டி
இந்திரனுலகுதனில் எல்லோருந்தான்மதிக்க
சூரியகாந்திப்பட்டை சுற்றிமுக்காடுமிட்டு
அண்ணருடதாகத்துக்கு அன்பானதங்கையரும்
வாள்மிளகுசுக்குகளும் வல்லகிரும்புடனே
ஏலம்லவுங்கம் இனிதானசர்க்கரையும்
வெல்லமுடன்கற்கண்டு விரும்பியேதானெடுத்து
கானகத்திலண்ணருக்கு களைதேற்றவேணுமென்று
பாணக்கம்சேர்க்கவென்று பைங்கொடியுமடியிற்கட்டி
வெற்றியுள்ளபோர்க்களத்தில் வேணுமென்றஆபரண



ம்,பணமுந்திரவியமும் பாங்குடனேதானெடுத்து
போர்க்களத்திற்றானமிட பொன்னெடுத்துமடியிற்கட்டி
ஆக்கரித்துநின்று அரண்மனையைத்தான்பார்த்து
சுற்றிமிகப்பார்த்தாள் சூழ்ந்தமனைகளைத்தான்
ஏற்றதொருஅரண்மனையை யேறிட்டுத்தான்பார்த்து
தங்காளுமப்போது தான்பார்த்துபுலம்புகிறாள்
வாழ்ந்தநாள்போதுமென்று வகுத்தீரோஈஸ்பரரே
இருந்தநாள்போதுமென்று எழுதினையோபிர்மாவே
எந்தன்விதிவசங்க ளிப்படித்தானோதான்
வருந்திமெள்ளத்தங்கையரும் மகாதேவாதஞ்சமென்
அரண்மனையைவிட்டு அப்புறமேநின்றுகொண்டு [று
பரமனேதஞ்சமென்று மார்த்துமனமுருகி
நின்றாள்நெடுநேரம் நிலமரம்போற்றங்காளும்
அன்றுகடலை அடைந்ததொருஅச்சுதனார்
நூற்றுவர்க்கும்பாண்டவர்க்கும் நோக்குடையவாலியற்
கும், ஏற்றிலங்கையில்வாழ்இராவணற்குப்பாடிலையோ,
என்று- ஆத்தியேகோபமெல்லாம் தங்காளன்புடனே
தானுமப்போ, தேத்தியேதன்தனத்தை தெய்வமேயெ
ன்றுசொல்லி, பதியிழந்துபஞ்சவர்கள் பாங்காட்டிற்
போகிலையா, விதியினெழுத்தே அண்ணமாரே விலக்க
முடிபோகாது, தலையினெழுத்தைதள்ளவினிபோகாது
கலைமதியசூரியனை கடியரவுதீண்டலையோ
என்றுமனம்தேறி ஈஸ்பரனார்தஞ்சமென்று
அப்போதுதங்கா ளழைக்கிறாள்நங்கையரை
பெரியண்ணன்தேவியரே பிரபலமாய்வாருங்கடி
சின்னண்ணன்தேவியரே சீக்கிரமாய்வாருங்கடி [ன்
நில்லுமென்றுசொன்னவரை தெருப்பாயெரித்திடுவே
பொல்லாதவேட்டுவரை பொரிகலங்கபார்த்திடுவேன்
தீயாயெரித்திடுவேன் செங்கதிரைவிட்டல்லவோ
உத்ததுணைவாருங்கடி உத்தமியேதோழியரே
மெத்தமயங்காதே விரைந்தோடிவாருங்கடி
என்றுசொல்லத்தங்காள் ஏதுரைப்பார்நங்கையர்கள்

ஆண்துணையில்லாமல் நாங்களவ்வனத்தேவாறதில்லை
போறவழிதனிலே ஒருபிழைமோசம்வந்தாக்கால்
வாசமுள்ளமங்கையரேஎங்களைமாளிகையிற்றனிருத்தி
தேசமேபோனவர்கள் திரும்பிவழிவந்தாக்கால்
மோசமேவந்துவிடும் மொய்குழலேதங்கையரே
இராசபிலங்குறையுமடி நல்லதங்காளுத்தயியே
அப்போ-யேரிட்டுபபார்த்து ஏதுசொல்வாள்தங்கைய
ரும், வாதிட்டெதிருடி வழக்குறைத்துநில்லாதே
சென்மச்சனியன்போல் சினங்கிமெள்ளப்பேசாதே
தம்பிசங்கன்பொன்னருட தாஷ்டீகன்றேவியென்றுப்
அருமைத்திருமேனியரை ஆர்வந்தெதிர்ப்பார்கள்
அக்கினிதூண்தன்னை அணுகிடுமோஈபெரும்பு.
உக்கிரமுள்ளதூண்தன்னை உலுக்கத்துளைத்திடுமோ
வழிமறிப்பாருண்டோடி வாள்வீரன்தேவியரே
தனித்துமறிப்பார்கள் தானுமுண்டோவையகத்தில்
பண்டுபழிகாரி பாதகியேதாருங்கடி
கூப்பிட்டாள்நங்கையரை கொற்றவனார்தங்கையரும்
கூப்பிட்டகுரல்கேட்டு கொம்பனையாள்தோழியரும்
துளபபணிமார்பழகும் துய்யகனிவாயழகும்
அழகுதிருமேனியரும் அன்பாகஏதுசொல்வார்
உத்தமாபத்தினியே ஒருசொல்லுவாசகியே
நற்றுணையிளவரசே நல்லதங்காளுத்தமியே
திங்கள்முகம்காணும் தெய்வப்பசுங்கிளியே
தங்கத்திருமேனியரே நாம்தனித்துவழிவாறதில்லை.
போறவழிதனிலே ஒருபொல்லாங்குவந்ததென்றால்
வேட்டுவர்கள்கண்டாக்கால் வெகுமோசம்வந்துவிடும்
பண்டுசிறைபிடித்த பழிபாவம்வந்துவிடும்
துணையொருவரில்லாமற்றெருவைதூரம்போவாருண்டோ
ஆருந்துணையில்லாமல் அம்பலத்தேபோவார்களோ
சதிகாரவேட்டுவர்கள் தன்னைநம்பப்போகாது
அறியாதவேட்டுவர்கள் நம்மையறிந்தால்விடுவாரோ
என்னசெய்வோமென்று எடுத்துரைத்தார்நங்கையர்க



ள், அன்னம்போல்றோழியரும் அவ்வார்த்தைதானு
ரைக்க, ஏழைமதிகள்பட்டு எடுத்துரைத்ததங்கையற்கு
தங்கைபிறவி தானுமங்கேயேதுரைப்பாள்
ஏழைமதிபேசாதே எங்களண்ணன்தேவியரே
கோழைமதிபேசாதே குமாரசங்கன்தேவியரே
கோபமுடன்நான்பார்த்தால் கோடிபடைமாண்டுவிடும்
தீயாயெரித்திடுவேன் தேன்மொழியேவாருங்கடி
வேகமுடன்போகவேணும் துருசாகவாருங்கடி
அந்தமொழிகேட்டு அரிவையர்களோடிவந்து
தங்காள்தனைப்பணிந்து தயவுடனேயேதுசெய்வாள்
சிந்தைகுளிரதங்கள் சீர்பாதம்போற்றிசெய்து
அஞ்சிப்பயந்து அரிவையர்களேதுசொல்வாள்
வஞ்சனைகள்மனதிலெண்ணி வார்த்தைகளுமென்ன
சொல்வார், தங்கைமதனியடி தாதியிளங்கிளியே
திங்கள் நுதலாளே தெய்வக்குலக்கொடியோ
நாங்கள்-வாழ்மனைதாள்பூட்டி வருகிறோம்தப்பாமல்
பறக்குமயில்போல பாதகமாய்த்தோழியர்கள்
அறக்குநல்லமாளிகையை அடவாகத்தாள்பூட்டி
கள்ளிதிருடிகள்போல் கல்நஞ்சுத்தோழியர்கள்
தள்ளிக்கதவடைத்து தாள்பூட்டிமண்ணரைந்து
சாத்திக்கதவடைத்து சதிருகமண்ணரைந்து
மறுபேச்சுபேசாமல் மாளிகையிற்றனிருந்தார்
இன்னம்வரக்காணமென்று ஏந்திழையாள்தங்கையரு
ம், அன்னம்போல்வாய்திறந்து அருந்துதியுநல்லதங்
காள், ஏழாந்தளந்தனிலே எதிருகநின்றுகொண்டு
நாளோபகலாச்சு நற்றுணைகள்வாருங்கடி
வர்னக்கிளியினமே வாய்த்துணைவாருங்கடி
பெண்ணேமடமயிலே பூங்கிளியேவாருங்கடி
சின்னண்ணன்தேவியரே சீக்கிரமாய்வாருங்கடி
பெரியண்ணன்தேவியரே பிரபலமாய்வாருமம்மா
இறக்கமில்லாநங்கையரே இன்னேரஞ்சாலமென்ன
குலக்கொடியந்நேரம் கூப்பிட்டாள்தோழியரை

கூப்பிட்டகுரல்கேட்டு கொடியதொருநங்கையர்கள்
அப்பவேநங்கையர்கள் அடவாகயேதுசொல்வார்
காப்பிட்டகால்நோகநாங்கள் கானகத்தேவாரதில்லை
நாங்கள்வருவதில்லை நாயகமேநீபோடி
எப்பாடுபட்டுநீ யேதுவுரைத்தாலும்
வருவதில்லைதங்கையரே வனமும்தனத்தேடி
சாமிதுணையெனவே தானிருப்போம்மாளிகையில்
நாங்கள்-வாழ்ந்தநாள்போதுமடி வருவதில்லைதையல
ரே,நாங்களிங்கேயிருந்து இறந்துமடியவென்று
ஓலைவரவிட்டார் உத்தமியேஎங்களுக்கு
வாலைப்பிராயத்திலே வாழுகிறகாலத்திலே
ஓலைச்சுருள்பிடித்து உட்படுத்திக்கொண்டோமே
தப்பாதசொல்லுடைய தாட்டிகன்தங்கையரே
மெய்யானதங்கையரேயுங்கள் வீரியத்தைக்கண்டறியோ
அத்தமொழிகேட்டு அரியபிறவியரும் [ம்
சிந்தைகலங்கியல்லோ திரமாகயேதுசொல்வாள்
நான்ஒருத்திபிறந்ததற்கு உற்றதுணைவாருமடி
அருந்தடத்திற்போவேனோ ஐயோசிவனேயென்று
சின்னண்ணன்தேவியரே நான்திகைத்துவழிபோவே
னோ, என்னைமுகம்பார்த்து எனக்குத்துணைவாருங்கடி
அரியவளநாடு அம்மான்பெருமாளும்
பிரியமுடன்பெற்றெடுத்த பெரியமாமன்மகளே
நீலிமரத்தியடி நிஷ்டூரிகாந்தாரி
சாதிமரத்தியடிஉங்களுக்கு சற்றிரக்கமில்லையடி
நான்-வஞ்சினைகள்செய்தேனோ உங்களுக்குவர்மமுமு
ண்டோடி, தஞ்சமொருவரில்லை தார்குழலேவாருங்கடி
என்-னெஞ்சுகத்துயரமெல்லாம் எவரறியப்போறார்கள்
வஞ்சினைந்தோழியரே வழித்துணைக்கிவாருங்கடி
அண்ணமார்தேவியரே அருங்கிளியேவாருங்கடி
பெண்ணாய்ப்பிறந்தவட்கு பெரியதுணைவாருங்கடி
பண்டுபழிகாரிகளே என்பரிதாபம்பாருங்கடி
அன்னநடையாளே அருங்கிளியேவாருங்கடி



நமக்கானபதவியுண்டு அங்கேபோவோம்வாருங்கடி
உலோகமியற்கையுண்டு உத்தமியேவாருங்கடி
என்றுசொல்லதங்காளேதுசொல்வார்தோழியர்கள்
நீ-என்னவகைசொல்லி எடுத்துவுரைத்தாலும்
நாங்களும்வருவதில்லை நல்லதங்காளுத்தமியே
அண்ணுசெய்தபாவமது அம்புபட்டார்போலிருக்க
இன்றைக்கென்னவந்ததடி யிளவரசேதங்கையரே
செப்பரியநங்கையர்கள் சினந்துமுகம்கடுத்து
ஒப்பனையதிருவாக்கு உபசாரம்போதுமடி

நங்கைமார்கள் வருவதில்லையென்று அரண்
மனையை தீய்க்கொளுத்தசொல்வது.

வருவதில்லைதங்கையரே மகாதேவர்தானறிய
பரமனார்தானறிய பத்தினியேவருவதில்லை
நீ-நின்றுமயங்காதே நெருப்புகளைவையுமம்மா
கண்டுமயங்காதே கடுகநெருப்பைமூட்டுமம்மா
எங்களைவிட்டுபோனால் உங்களுக்குயீடேற்றமில்லையடி
விட்டுநீபோனக்கால் உனக்குவீரியமுமில்லையடி
தீமூட்டிவேள்விசெய்து திக்கெனவேபோகாமல்
வெட்டியடிவையாதே ஈசனார்தானறிய [லே
என்றுசொல்லி நங்கையரும் எடுத்துரைக்கும்வேளையி
அன்றுயிலங்கைதனை அனுமார்தீயிட்டாப்போல்
சங்கருடன்பிறந்த தாழ்வில்லாப்பத்தினியும்
பொன்னருடன்பிறந்த பொற்கிளியுமப்போது
சிங்கம்போல்சீறி சினந்துமெள்ளத்தான்பார்த்து
ஆதிசிவன்கர்த்தாவே ஐயாஉனக்கடிமை
பாதியெழுத்தெழுதிப் பாருலகிற்போட்டீரோ
நிறையெழுத்துஎழுதாமல் நீடூழிவாழாமல்
குறையெழுத்தை நீயெழுதி கொண்டீரோபிர்மாவே
என்றுசிவனாரை இயல்பாகக்கைதொழுது [லே
கன்றிழந்தமான்போலதங்காள் கலங்கிநிற்கும்வேளையி

### மாமனும் தேவியும்வரக்கண்டு தங்காள் நங்கைமார்களுக்கு பொருளும் பணிதியும் கொடுத்தனுப்பச் சொல்வது.

அரியவள நாடாளும் அம்மான்பெருமாளும்
பிரியமுடனீன்றெடுத்த பேடைமயில்மாமியாரும்
சிந்தைதளர்ந்து சீக்கிரமாய்வந்தார்கள் [து
வந்தநல்லமாமியரைதங்காள் வாவென்றுதானழைத்
அண்ணமார்கள்தேவியரே யுங்களையமார்வந்தார்கள்
தகப்பனும்மாதாவும் தயங்கிங்கேவந்தார்கள்
வந்தவரைவாருமென்று கேளுங்கடி நங்கையரே
என்றுதங்காள்சொல்ல யிங்கிதமாய்நங்கையர்கள்
தண்ணீருந்தாமரைப்போல் தான்மனங்களொவ்வாம [ல்
கண்ணீர்சொரிந்து காரிழைமாரப்போது
மாதாவைப்பார்த்து மங்கையர்களேது சொல்வார்
வாழக்குடியிட்டு வாழ்ந்தநாட்போதுமடி
நீங்கள்-செழிக்ககுடியிட்டு சேர்ந்தநாட்போதுமடி
ஏன்தாயேமாதாவே இந்தப்படிசெய்தீரே
வந்தாயேஎன்தகப்பா வையகத்திலன்னாளில்
பேச்சிமுலையுண்டவரும் பெருமாள்தவத்தாலே
எங்களையீன்றெடுத்து என்தகப்பாவந்தாயே
எங்களுடகாட்சிக ளினிக்கேளுஞ்சொல்லுகிறோம்
அன்னையெனுந்தாயார் அவள்வயற்றில்தான்பிறந்து
பொன்னர்சங்கர்தாமென்று புகழுடனேவாழ்ந்ததுவும்
இன்றலவில் நின்றதையா என்தகப்பாபாதகனே
பரலோகம்செல்லுகிறோம் பாதகனேயென்தகப்பா
சிவலோகம்செல்லுகிறோம் சிறப்புள்ளதாயாரே
என்றுசொல்லிநங்கைமார் ஏங்கியழுகையிலே
தங்காளுமோடிவந்து தயவுடனேயேதுசொல்வாள்
மாமனுக்கும்அத்தைக்கும் வரிசைகொடுங்களடி
பெத்தாற்குஆபரணம் பிரபல்மாய்த்தாருங்கடி
என்றுசொல்லநங்கைமா ரிதமாய்ப்பணியெடுத்து
ஆனபணிதியெல்லாம் அன்பாகத்தானெடுத்து



வேண்டியஆபரணம் விதமானநற்பொருளும்
பீதாம்பரப்பட்டுகளும் பிரபலமாய்த்தானெடுத்து
முன்னாலேதான்வைத்து முகம்வாடிநின்றழுதார்
அப்போதுதாயாரும் அய்யனுமேதான்பார்த்து
மக்கள்குலைகிற வாட்டமெல்லாந்தான்பார்த்து
கலங்கிமனந்தளர்ந்து காரிழையார்முன்னாலே
என்னவென்றுசொல்லி யிதமாய்ப்புலம்புகிறார்
ஐயோமகளே அருமைத்திருமேனியரே
உங்களுக்குஇந்தவிதி ஊழ்நாளிற்செய்தீரோ
எந்தன்வயற்றில் யிங்கிதமாய்த்தான்பிறந்து
அந்தமுள்ளபொன்னர்சங்கர்ஆண்மையுள்ளமன்னவ [ற்கு
விந்தையுடன்மாலையிட்டுவெற்றிபெற்றுவாழாமல்
சிந்தனைகளில்லாமற் றிரமாகவாழாமல்
வையகத்தில்வாழ்ந்து மகிழ்ச்சியடையாமல்
இப்படியாச்சுதோ யென்மகளேஎன்றுசொல்லி
கண்ணீர்சொரிந்து கலங்கிமிகப்புலம்பி
தாயுந்தகப்பனும் தானழுதும்வேளையிலே
தங்கையருமோடிவந்து தயவுடனேயேதுசொல்வாள்
விதியைத்துலைத்துவெல்லவகையுமுண்டோ
என்னயிருந்தாலும் யிறப்பதுதப்பாது
அழுகவந்தகாரியமென் அணைகடந்துபோறவெள்ளம்
நில்லென்றால்நிற்குதோ நீதியுள்ளஎன்மாமா
அப்படிசொல்லி அருந்துதியாள் நிற்கையிலே
தேவியுமாமனுந் திறமாகப்போனார்கள்
அப்போதுநங்கையர்க ளடவாகச்சொல்லுகிறார்
கன்னியிளங்குயிலே காரிழையேதங்கையரே
இன்னேரமுண்டோ இனிநெருப்பைமூட்டுமம்மா
என்றுமேநங்கைமார் எடுத்துவுரைக்கையிலே
அப்போ-அண்ணருடன்பிறந்த அருக்காணியிளவரசு
பொன்னருடன்பிறந்த பேடைமயில்வாகனமும்
சங்கருடன்பிறந்த சாதிமரிக்கொழுந்தே



C-187 IL
X124
17985

தங்கத்திருமேனி தார்குழலாள் நல்லதங்காள்
காருளவங்கிஷத்தில் கண்மணியாள்வந்துதித்த
பொன்னருடன்பிறந்த பேடைமயிற்றங்காளும்
சிங்கம்போல்சீறி சினந்துமுகம்கடுத்து
பொங்கியேகோபமுடன் பொற்கொடியாளன்னேரம்
சீறிமெள்ள நாகம்போல் சினத்துடனேதான்பார்த்து
சீறிச்சினந்தல்லவோ சிவனேயெனப்புலம்பி
ஐந்துதலைநாகம் அலறியெழுந்தாப்போல்
செந்தலைநாகமது சீறியெழுந்தாப்போல்
இன்னாளிற்செய்ததெல்லாம் ஈஸ்வரனே தஞ்சமென்று
சன்னாசிபாதம்தங்கள் தலைவணங்கித்தான்பணிந்து
ஆதிசிவன்கர்த்தாவே அன்புடனேதான்பணிந்து
ஆதிவடமீாயவனே ஐயனையுந்தான்பணிந்து
அன்னாளிற்றவிசில் அதிகவரம்கொடுத்தாப்போல்
இன்னாளில்எந்தனுக்கு யினியவரந்தரவேணும்
என்றுபொன்னம்பலவரையும்போற்றியேதெண்டனிட்டு, அசையாததென்மதுரை அங்கையற்கண்மீனாட்சி
திருமலைக்கொழுந்தியம்மா தெய்வச்சுடர்மணியே
ஒருபூவுக்காக வுறையூரழித்தவளே
சுருபக்குழலாளே தொழுதுமெள்ள தங்காளும்
மரகதவள்ளியம்மா வந்துதவிசெய்யுமென்று
முல்லைஇருவாட்சி முகமலர்ந்தசெண்பகமும்
அல்லிமலர்குவித்து அக்கினியைகைதொழுது
மாதாபிதாவை மனதில்நினைந்துகொண்டு
பாதம்சரணமம்மா பைங்கொடியேதாயேயென்று
கோவென்றபயமிட்டாள் கொடுகனலுமூண்டிடவே
ஆவென்றபயமிட்டாள் அக்கினிகள்சூழ்ந்திடவே
செட்டியெனும்பட்டணத்தார் செய்தகதைபோல
பட்டணத்துப்பிள்ளையார்தாய் தனக்குபண்ணுங்கதைபோல, ஆக்கரித்துத்தங்காளும் அக்கினியைத்தானினைக்க, திட்டமுடனக்கினியைசிறப்பாய்நினைந்திடவே
அக்கினியைத்தானினைக்க அனல்வந்துசூழ்ந்திடுமாம்



உத்தமியாள்தா நினைக்க உக்கிரமாகச்சூழ்ந்திடுமாம்
பத்தினியாள்தானினைக்க பலமாகச்சூழ்ந்திடுமாம்
குன்றுபோல்வலுவுடைய குமாரசங்கன்றன்பிறவி
காடைபறந்தாப்போல் கடக்கேகுதித்துநின்று
சுத்திமிகப்பார்த்தாள் சூழ்ந்தபுகைகள்தன்னை

தங்காள் அரண்மனையில் அக்கினியைக்கொளுத்தி
அரண்மனைகளைப்பார்த்துப் புலம்பல்.

வெற்றியுள்ளஎங்களண்ணர் விடையாத்துமண்டபத்தே, வேத்துவிருவிருத்துதங்காள் மேனியெல்லாம்புண்ணாகி, பத்திஉயரெறிய பைங்கொடியாள்புலம்புகிறாள், முட்டிக்கொண்டாள்தங்கையரு முகத்தோடகையறைந்து, கண்டுபிரண்டழுதாள் கண்கள்ரண்டுநீர்சொரிய, கூந்தல்குலைந்தாட குத்திக்கொண்டார்மார்மேலே
மெத்தமயங்கி மேனியெங்கும்புண்ணாகி
அடித்துவிழுந்தழுது ஐயோசிவனேயென்று
முடித்தமயிர்குலைந்து முட்டிக்கொண்டாள் தானேடே
தஞ்சமொருவரில்லை தாபரிப்பாருருமில்லை
வஞ்சனைகள்செய்தாப்போல் வகைமூன்றாய்த்தான்பிரிந்தோம், சிரக்குமணிமேடைகளும் சித்திரகூடங்களும்
அரக்குநல்லமாளிகையு மக்கினிகள்சூழ்ந்திடவே
அப்போதுதங்கா ளரிவையர்க்கேதுசொல்வாள்
அண்ணமார்தேவியரே ஆனசொர்க்கம்சேருங்கடி
சின்னண்ணிதேவியரே சிவலோகம்சேருங்கடி
எனக்குத்துணையாயிருந்து இரணக்களமானீரே
என்றுபுலம்பிதங்காள் ஏங்கியேபார்க்கையிலே
கூடாரச்சாவடியும் கொலுவிருக்குமாளிகையும்
ஆடரங்கமாளிகையும் அக்கினிகள்சூழ்ந்திடவே
தூளியுமாளிகையும் துய்யதிருவாசல்களும்
பலகணிவாசல்களும் பந்தடிக்குமண்டபமும்
மாளிகையுள்ளதெல்லாம் அண்ணாவே வளைந்துபத்திவேகுதடா, அசையாநகரியெல்லாம் அக்கினிகள்சூழ்ந்துதடா, தெலுங்கர்வந்துகற்பமிடும் அண்ணாவேசித்தி

ரச்சாவடியும், குலுங்கர்நகரியெல்லாம் அண்ணுவே
கூடப்பாழாகுதடா
துரைபெரியருசமன்னன் அண்ணுவேசொக்கட்டான்
விளையாடும், அரண்மனைகள் அத்தினையும் அக்கினிகள்
சூழ்ந்துதடா, பல்லக்குஞ்சாவடியும் அண்ணுவேபந்த
டிக்குமேடைகளும், சொல்லத்துலையாதசூரியபான்மண்
டபமும், போயிருக்குஞ்சாவடியும்அண்ணுவேபுகழ்பெ
ரியசோலைகளும், அக்கினிகள்சூழ்ந்திடவே அண்ணு
வேபணியணியாய்வேகுதடா, வாள்சாத்துமண்டபமும்
வயிரமணிமாளிகையும், தம்பிசங்கன்வீற்றிருக்கும்தங்கம
ணிமாளிகையும், அண்ணுவேயிளப்பாரும்ஆசாரச்சாவ
டியும், தீப்பற்றிவேகுதடா சின்னண்ணுயென்பிறவி
எட்டாந்தளமும் யிடம்பெரியமாளிகையும்
ஏழாந்தளமும் இலங்குமணிச்சாவடியும்
பேருகுவம்பலமும் பெரியநல்லகோட்டைக்கும்
எழுபதுஇருப்புக்கட்டி இணையுடனேதானடித்து
கேடையஞ்சாத்தும் கிருபையுள்ளமண்டபமும்
ஆடரங்கமாளிகையும் அனல்வந்துவேகுதடா
தாருடனேவாழைகளும் அண்ணுவேதலைசாய்ந்துவே
குதடா, சித்தூறு அம்பலமும் சிலம்பிருக்குமாளிகையும்
வெற்றியுள்ளசங்கரண்ணர் வீசிநிற்குமந்திரவாள்
அத்தனையுந்தானுமிப்போ அனுகலந்துவேகுதடா
பச்சைவயிரேரியம் பதித்தசரப்பளியும்
வச்சிரந்தான்பதித்த வடிவானசரப்பளியும்
பட்டுநல்லபாய்களும் அண்ணுவேபாங்கானசல்லடமு
ம், தங்கநிஜாருகளும்அண்ணுவேதான்பத்திவேகுதடா
பாதிரையுஞ்சோலைகளும் பகல்காணுமுத்தங்களும்
மூர்க்கமுள்ளகன்னியர்கள் மூண்டுவிளையாடும்
வேதங்களோதிவரும் விதமானமாளிகையும்
சல்லிச்சவரங்களும் சின்னண்ணுசகலாத்துபட்டுகளும்
வில்லைச்சவரணையும்அண்ணுவே வெள்ளிகட்டுவேலுக
ளும், விதமானசட்டைகளும் வில்லுகளும்மம்புகளும்



சவுக்களிமோதிரமும் தங்கத்தாயித்துகளும்
முத்துச்சரப்பளியும் முன்கைமுதாரிகளும்
வெற்றியுள்ளமார்பதக்கம் விருதுடால்சோடினையும்
பொன்கடுக்கன்முருவுகளும்பொன்னழுத்துநல்லாவும்
பஞ்சவர்னவிருது பகல்வத்திசோடினையும்
அந்தமுள்ளபொற்கடகம் அரணுவும்மோதிரமும்
தங்கக்கொலுசுந் தாயித்துவீரகண்டை
சிங்கமுகடால்விருது சிறந்துபத்திவேகுதடா
வெங்கலத்தட்டுமுட்டுஅண்ணுவேவிதமானசெம்புகளு
ம், ஆஸ்தானப்பொட்டியெல்லாம் அணிகலந்துவேகு
தடா, உன்னுடைய ஆயுதங்கள் அண்ணுவேஉண்மை
யுள்ளநேரிசமும், என்னுடையஆபரணம்இனிகலந்து
வேகுதடா, கேடையம்கட்டாரி திருடிவேல்நேரிசங்கள்
கோடியிடிபாணம் வுக்கிரகண்டமந்திரவாள்
எல்லாந்தான்வேகுதென்று ஏங்கிநிற்கும்வேளையிலே
தாதியர்கள்தன்னுடனே தங்கையருஞ்சொல்லுகிருள்
பண்டுபழிகாரி பாதகத்திகேளுங்கடி
நான்கண்டதொருசொற்பனங்கள்கைமேற்பலித்துதடி
ஆதிசிவனுரும் ஐவரிட்டகட்டளைதான்
வேதியனூர்சொற்படிக்கு விதிகளுமூண்டுதென்று
முன்கைநெறித்தல்லோதங்கள்ள்முகத்தோடேதானறை
ந்து, பொங்கியெழுந்து பொற்கொடியும்புலம்புகிருள்
வர்னகச்சைகட்டி அண்ணுவே வலப்புறமேசுங்குவிட்டு
எண்ணைகச்சைவரிந்துகட்டி நீங்களிருபுறமுஞ்சுங்குவி
ட்டு, இடியம்புநேரிசமும் நீங்க ளிதமானவாளெடுத்து
செம்பரிசைகைபிடித்து சேனைபடைமுன்னடக்க
வெண்பரியின்மீதேறி அண்ணமார்வீதிவரக்காணே
னே, திங்குவரும்வகையும் நான்சீக்கிரத்தில்கண்டுரைத்
தேன், யேங்கியேநல்லதங்காள் ஈசுரனேதஞ்சமென்று
கற்கட்டுமோதிரங்கள் கழன்றுதெரித்துவிழ
அழுதுபுலம்பி அன்புடனேயேதுசொல்வாள்
சந்தனகுங்குமமுந் தானிருக்குமண்டபங்கள்

பன்னீருகஸ்தூரி பரிந்திருக்குமண்டபங்கள்
வஞ்சியர்கள்கூடி வாழ்ந்திருக்குமாளிகையும்
திரண்டஇராசாக்கள் சேர்ந்திருக்குமண்டபமும்
ஆனைபடைசேனை அடர்ந்திருக்குமண்டபமும்
பண்பானமாளிகைகள் பற்றியேவேகுதடா
கானகத்திற்போய் கடுகமடிந்தீரே
என்னைவிட்டுப்போனீரே இதமானஅண்ணாவே
ஒருத்திதனித்தே உற்றதுணைகாணேனே
எருதின்மேலேறிவரும் ஈசுரனேதஞ்சமென்று
இனம்பிரிந்தமான்போலே தங்காளேங்கிமுகம்வாடி
தனமிழந்தசெட்டியைப்போல் தயங்கிமிகவழுது
மாந்துளிர்மேனியெல்லாம் மண்மேல்புரண்டழுதாள்
கூந்தல்விரித்தல்லவோதங்கைக குப்பைமேற்புரண்டழு
தாள், முன்கைநெரித்துதங்காள்முகத்தோடேதானறை
ந்து, செங்கோல்தலைச்சினந்து சிவசிவாவென்றழுதா
ள், அரகராவென்று அலறியேகீழ்விழுந்தாள்
விழுந்தழுததங்கையரே மெல்லியர்கள்தானெடுத்து
குளிர்ந்தநீர்தந்து குணமுடனேயேதுசொல்வான்
அஞ்சாதேதங்கையரே அண்ணமார்தான்வருவார்
கொஞ்சுபரிமீதேறி கொங்கர்மேற்போனவர்கள்
வெள்ளிகட்டுவேலெடுத்து வேட்டுவரைச்சங்கரித்து
தெள்ளுபரிமீதேறி அண்ணமார் சேர்ந்துமிகவாருர்க
ள், வேடுபடைபொருதி அண்ணமார் வீடுவந்துசேர்
வார்கள், நாடுபடைபொருதி அண்ணமார் வீடுவந்து
சேர்வார்கள், ஏதுக்குமஞ்சாதே என்னுடையஆச்சிய
ரே, அரைநிமிஷம்தன்னி லண்ணமார்வந்திடுவார்
ஆண்டவர்துணையுமுண்டு அஞ்சாதேதங்கையரே
என்று-தேறுதலைசொல்லி தேற்றினார்தாதியர்கள்
தாதிகளைப்பார்த்து தங்கையருமேதுசொல்வாள்
என்னமொழியுரைத்தீர் ஏழைமதித்தாயரே
வீரிட்டசேனைதளம் வெகுகோடிமன்னவர்கள்
பாரில்பிறந்து பாரதங்களண்ணனில்



முடிந்தகதைபோல மூர்க்கமுள்ளஎங்களண்ணர்
இவ்வுலகம்போதாமலெங்களத்தைபிள்ளைசேனையுடன்
மங்கியமேகம்போல் மலைச்சார்பிலேயிறங்கி
வேடுபடைபொருதி விதமாகமாண்டுவிட்டார்
வருவாரோதாதியரே வளமில்லாப்பேச்சுரைத்தாய்
என்றுஅவர்களை இதமுடனேதான்விளக்கி
அக்கினிசூழ்ந்த அரண்மனையிற்றான்புகுந்து
திக்கெனவேதங்கையரும் சிறுகலசம்தானெடுத்து
புதுக்கலையந்தானெடுத்து புதுமையுள்ளதங்கையரும்
கும்பமெடுத்துக் குளக்கரையிற்போயிருந்து
செம்பொன்ரதமேறி செங்கதிரோனுதிக்குமுன்னே
ஆத்தங்கரைபோய் அறிவுள்ளதங்கையரும்

தங்கை நங்கைமாற்கு சாஸ்திரம் முடித்தல்.

புதுசாகதீர்த்தம் பிரியமுடன்வேணுமென்று
ஆகாசகங்கை அடைவுடனேவேணுமென்று
வருணராசனையுமப்போ வணங்கினாள்தங்கையரும்
பத்தினியாள்தான்வணங்க பார்த்துவருணராசன்
மேகம்பொழிய விதமுடனேசொன்னாரே
அப்போதுமேகமெல்லாம் ஆக்கரித்துதான்பெருகி
வந்துதேதீர்த்தம் வையகத்தோர்கொண்டாட
கண்டுமேதங்கையரும் கைதொழுதுவப்போது
நீரிலிறங்கி நித்தியகர்மமுடித்து
தானமதுசெய்து தங்கையருமப்போது
வேதியரைத்தானழைத்து விதமுடனேஅப்போது
நங்கைமாற்குக்கர்மம் நலமாய்முடியுமென்று
சொன்னாளேதங்கையரும் சுகிர்தமுள்ளவேதியற்கு
அந்தமொழிகேட்டு அறிவுள்ளவேதியர்கள்
வேதப்பிராமணர்கள் வேதங்கள்தானோதி
சாதிப்பிராமணர்கள் சாஸ்திரங்கள்தான்முடித்து
அங்கம்கரைத்தல்லோ அன்பாகநீரில்விட்டு
நீர்கடன்களுள்ளதெல்லாம் நிறைவேற்றிதங்கையரும்
செங்கையிலேபோட்டு கிலேசமெல்லாமுள்ளடக்கி

மூதாக்கள்சீர்பாதம் மொய்குழலேசேருமென்று
மாதாக்கள்தன்னுடனே வாழ்ந்துயிருங்களென்று
தண்ணீர்கடன்கழித்து சாஸ்திரமுந்தான்முடித்து
துக்கமுள்ளசாஸ்திரங்கள் துயரமெல்லாம்தான்முடித்
து, திக்கெனவேதானம்பண்ணிசிவனுரைத்தெண்டனி
ட்டு, ஆத்தம்கரையைவிட்டு அன்பாய்வருகையிலே
ஊசிபோல்மின்னல்மின்னி உச்சிதமாய்காலூணி
கார்மேகம்தான்சூழ்ந்து காரணமாய்பொழிந்திடுமாம்
மாளிகைபார்க்க வருமளவும்தங்கையரும்
பொங்கியேதானெழுந்து பூமாரிபொழிந்திடுமாம்
மலையில்வெள்ளம்பிறண்டு வந்தவகைபோல்
தலையானகாவேரி தான்பெருகிவந்தாப்போல்
விந்தையுடன்வந்து விதமானதங்காட்கு
துணைகளைப்போல சூழுமேவெள்ளங்கள்தான்
அப்போதுதங்காள் அண்ணரைத்தேடுதற்கு
போகவேணுமென்று பொற்கொடியாளப்போது
ஊருவந்துசேர்ந்து உண்மையெல்லாம்பார்த்துவிட்டு
நாடுவந்துசேர்ந்து நகரமெல்லாம்பார்த்துவிட்டு
இப்படியாச்சுயெங்கள் வாழ்வதுவுமென்றுசொல்லி
பார்த்துவெகுநேரம் பரதவித்துபுலம்பிவிட்டு
போர்க்களத்தைதேடிப் புலம்பியேபோகவென்று
படுகளத்தைதேடி பத்தினியாள்தானடக்க
வைகைக்கறையோரம் வந்துமெள்ளத்தங்கையரும்
தீர்த்தமதுதானுடி திசைதோறும்தெண்டனிட்டு
உடுத்ததுகிற்பிழிந்து ஒருபுறமுக்காடுமிட்டு
எடுத்தாள்திருகரகம் ஏந்திழைள்பொற்கரகம்
நலமாகவேயெடுத்து நல்லதங்காளுத்தமியே
இட்டபணிதுலங்க ஏந்திழைள்திருக்கரகம்
முத்துவடமசைய முகமதிலேமுத்துதிர
பண்பாய்சனங்களெல்லாம் பார்த்துபுலம்பிநிற்க
பக்கம்குடைபிடிக்க பவளச்சங்குதொசையிட
திக்குத்திசையதிர திருச்சங்குதொசையிட.



நாகன்குடைபிடிக்க நற்பாம்புதாலாட்ட
மேகம்குடைபிடிக்கும் வெள்ளாமரசியற்கு
காருளவங்கிஷத்தில் கண்மணியாய்வந்துதித்து
பொன்னருடன்பிறந்த பொற்கொடியாளன்னேரம்
சங்கருடன்பிறந்த தார்குழலாளன்னேரம்

தங்கையரும் அண்ணமாரைத் தேடிப்போகுதல்.

அண்ணமாரைத்தேடி அருக்காணிபுறப்பட்டாள்
விண்ணுலகந் தனையாளும் வெய்யோனுந் தானுமப்
போ, மங்கியேகோட்டையிட்டான் மாதுநல்லாள்போ
வதற்கு, சக்கிரவாள்கோட்டையென யென்றுசமைத்
தானும், வாயுராசன்வழிதூர்க்க வருணராசன்தீர்த்தமி
ட, மேகராசன்குடைபிடிப்பான் வெள்ளாமரசியற்கு
அன்னமுடன்தாராவும் அருகிருந்துபேசிவர
வர்ணக்கிளிகள் வாய்திறந்துபேசிவர
மயிலினங்கள்குயிலினங்கள் மாடப்புறாவினங்கள்
வெய்யில்மறைந்துவரும் மேகமதுசூழ்ந்தாப்போல்
பருந்துடன்பக்ஷிகளும் பக்கமேஓடிவரும்
சிறந்தவொருபக்ஷிகளும் செங்கனிகள்கொண்டுவரும்
அப்போதுதங்கை ஆண்டவனேதஞ்சமென்று
துடர்ந்துவந்தமானிடரை தூரத்தேநில்லுமென்று
அணுகிவந்தபாங்கியரே அப்புறத்தேநில்லுமென்று
ஊருக்கனுப்பிவிட்டு உற்றதொருதாதியெல்லாம்
நடந்தாள்பிறவியரும் நல்லவன்ம்தேடி
சீதையெனும்பெண்பிறந்து தென்னிலங்கைபோனது
போல், நுன்னிடையாள் துரோபதையாள் நூற்றொரு
வர்போனதுபோல், கர்ன்னகையாள்பெண்பிறந்துகன
மதுரைபோனதுபோல், நானொருத்திதான்பிறந்துநல்
லதொருதங்கையரை, விண்ணுலகமேற்றிவிட்டேன்
விதமாகஇன்னாளில், என்றுபுலம்பிதங்கை இங்கிதமா
ய்தானடந்தாள், நல்லதுணையில்லாமல் நான்வனத்தி
ல்வந்துவிட்டேன், ஆதிசிவனே அரியதொருபிர்மா

வே, பாதியெழுத்தெழுதிப் பாருலகில்விட்டீரோ [ன்
குறயெழுத்தைஎழுதினதால் கொடுவனத்தில்வந்தேனு
மதியூகியானுலும் மண்ணிற்பிறந்தவற்கு
விதியைவிலக்க வேருவழியில்லையென்று
ஆனதொருபஞ்சவர்கள் அருங்கானகம்போய்
கானகத்தில்போய் கனிகாய்கள்தானருந்தி
மெய்யெழுத்தாயிருந்தாள் மீண்டுவந்தார்பஞ்சவர்கள்
பொய்யெழுத்தாயிருந்ததினுல் போய்மாண்டீர்கானகத்
தே, என்று- அண்ணருடன்பிறந்த அருங்காணியிளவ
ரசு, பொன்னருடன்பிறந்தபொற்கொடியாளன்னேரம்
ஏங்கம்போற்சீறிச் சிவனே அபயமென்று
பொங்கியேதானெழுந்து புலம்பியேஅன்னேரம்,
திக்குத்திசையறியேன் திகைத்தொருத்திவாரனண்ணு
பக்கத்துணையில்லாமல் அண்ணுவேபடுகளத்தே நான்
வாரேன், உற்றதொரு துணையுமில்லை ஒருத்தியாய் நான்
வாறேன், பிறந்ததுணையில்லாமல் நான் பேதகமாய்வா
றனண்ணு, வாசற்படிகடந்தறியேன் வழிதேடிவாறனண்ணு, தேசம்கடந்தல்லவோ திகைத்துவழிவாறனண்
ணு, பஞ்சவர்களைவரென்று நான்பாருலகிற்கேட்டிரு
ப்பேன், ஆண்டவனுர்தன்னருளால் நீங்களைவருமே
தான்பிறந்து, தாமரேபொன்னுண்டார்-தனிவீமன்தம்
பிசங்கன், அம்பெடுக்கும்விசையதனைப்போல் அத்தை
பிள்ளைமூவர்களும், பரிநகுலனைப்போல் பண்பானமை
த்துனரும், சகாதேவனைப்போலும் தாஷ்டீகமுள்ளவ
ர்கள், பாருளும்புண்ணியர்கள் பஞ்சவரைப்போல்பிற
ந்து, இதமான துரோபதைக்கு இணையான நல்லதங்கா
ள், மானத்தருந்ததிபோல் அண்ணுவேமயங்கிவழிவா
றேனுன், ஐவரைப்போல்நீங்கள் அதிவீராதன்னுட
னே, சொற்படிதப்பாத துரோபதைபோல்நான்பிறந்
து, ஐவர்களுநீங்கள் அரசாண்டவளநாட்டில்
மெய்யாகவாழ்வமென்று வீற்றிருந்தேன்இன்னுளும்
சிற்றுலைபட்டணமும் சிறந்தநெல்லிவளநாடு



ஆலத்தூர்பட்டணமும் அழகுபொன்னிவளநாடு
நெல்லிவளநாடு நிகரில்லாக்கோனுடு
அந்தவளநாட்டை ஆண்டிருக்கும்நாளையிலே
கோனுட்டுக்காருளன் கோடையிடித்தம்பிசங்கன்
மேனுட்டுக்காருளன் வீரியனுரத்தைபிள்ளை [ள்
வெட்டிக்கெலிக்கவென்று வேட்டுவர்மேல்போனவர்க
தங்கப்பரியேறி தளங்கூடிப்போனவர்கள்
கொங்கரையுஞ்சங்கரித்து கோட்டைவந்துசேருமல்
வெட்டிக்கெலித்துஅண்ணுவே வீடுவந்துசேருமல்
பட்டாணிருவுத்தர்போல அண்ணுவேபடுகளத்தில்மா
ண்டீரே, தனித்துப்படைபொருதி சவுரியங்கள்தாளா
மல், யேர்க்கப்படைபொருதி இறந்துவிட்டகாரணமே
ன், வர்னகச்சைகட்டி நீங்கள் லலதுபுறஞ்சுங்குவிட்டு
எண்ணைகச்சைகட்டி அண்ணுவேஇருபுரமும்சுங்குவிட்
டு, இடிஅம்புவேலெடுத்து அண்ணுவேஎரியானகுழ
லெடுத்து, கடியபறிமீதேறிவேட்டுவரை காலனுக்குவி
ருந்தாக்கி, தம்பட்டம்மேளம் றவில்முரசுபேரிகையும்
கும்பிட்டசேவுகரும் கோடிபடைசேனையுடன்
கொங்கரைச்சங்கரித்து கோடிப்படைகருவறுத்து
வெற்றிகொம்புதான்பிடித்துஅண்ணுவேவீடுவந்துசே
முல்லைஇருவாக்ஷி முகமலர்ந்தசெண்பகமும் [ருமல்
வண்ணமலர்தான்முடித்து மனம்பொருந்துகூந்தலெ
ல்லாம், பீந்தரடிவீரமலை மாரமலைச்சோங்குதனில்
நான்சோர்ந்துவீற்றிருக்க அண்ணுவேதலைநான்விதிப்
படியோ,முடிகோதியெண்ணையிட்டுமுழுகும்கூந்தலெல்
லாம், செடியாலொருமயிறு அண்ணுவேசிக்கிநிற்ககா
ரியமேன், சம்பங்கியெண்ணையிட்டு தான்முழுகுங்கூந்த
லெல்லாம், வெம்பியிந்தக்கானகத்தில் வீதிநிற்ககாரிய
மேன், சிந்தைகலங்கித்தங்காள் சிவனே அபயமென்று
அந்தவனங்கடந்து தங்கையப்பாலேபோகையிலே

### தங்கை வனத்தில் புலம்பிக்கொண்டு அண்ணமாரைத் தேடுதல்.

முன்னாள்விதிப்படியோ அண்ணாவேமுக்கணனார்சொற்
இன்னாளில் நீங்க ளிராச்சியத்தையாளாமல் [படியோ
நான்கண்டகினாவும் கைமேல்பலித்துதையா
கைமேல்பலித்துதடா காரணவீரியரே
மெய்யாய்பலித்துதே மேந்தனே நம்பளுக்கு
நான்பத்தினியாள்கண்டகினா பலித்துதே நம்பளுக்கு
முத்துப்பொன்முருங்கை முறிந்துவிழக்கண்டேனே
சித்தாமணிவாசற் றிருமதிலுமிடியக்கண்டேன்
தலைக்கடையி லுறக்கிணறுத்துவிழ்ந்துவிழக்கண்டேனான்
பிழக்கடையிற்றலைவாழை பிளந்துவிழக்கண்டேன்
பொன்னளக்குங்குகைகான பொரிந்துயெரியக்கண்டே
ன், மண்ணிழந்துபதியிழந்து வனவாசம்போகக்கண்
டேன், முத்தளக்கும்பொன்னாளி முழங்கியெரியக்கண்
டேன், சித்திரக்கூடங்களும்செந்தணலாகக்கண்டேன்
ஆனைகட்டுஞ்சாவடிகள் அறுகுமுளைக்கக்கண்டேன்
கதிரோனுதிக்குமுன்னே கனைத்துகதும்பி நிற்கும்
குதிரைகட்டும்லாயமது கூடம்பாழாகக்கண்டேன்
பூருயமான பொன்னிவளநாட்டில்
பேருனகோட்டையெல்லாம்போர்ந்துவிழக்கண்டேன்
சித்தூருஅம்பலமும் சிருமதுரைபட்டணமும்
அக்கினிகள்சூழ்ந்து அடியோடேவேகக்கண்டேன்
வைகைவளநாடாளும் வாள்வீரனத்தைபிள்ளை
செய்யபெருமாளும் சிவனாணிதெரியக்கண்டேன்
ஐயரந்தகோபால னருளாலேவந்துதித்த
வையப்பெருமாளும் வனத்திலேஅம்புபட்டு
நிலையிழந்துபதியிழந்து நிலத்திலேசாயக்கண்டேன்
எதிரில்லாபெருமாளும் ஏறிவருங்குதிரை [ன்
பதியிழந்துராவணன்போல்படுகளத்திற்சாயக்கண்டே
வெத்தியுள்ளதம்பிசங்கன் அயபுபட்டுசாயக்கண்டேன்
ஆனைபடைசேனை அத்தனையுமடியக்கண்டேன்



தெண்டிரைசூழ்வனத்தில் திகைத்தொருத்திவரவுங்க
ண்டேன், கோனாட்டுபரிநகுலன் குமாரசங்கன்மாண்டி
டவும், தையநல்லாள்கண்ணெதிரேதானேபலித்துதை
யா,கண்டதொருசொற்பனங்கள் கைமேற்பலித்துதடா
என்றுசொல்லிதங்கையறு மீஸ்பரனேதஞ்சமென்று
சிந்தைகலங்கி சிவனேஅபயமென்று
கண்கள்சிவந்து கடைக்கண்கள் நீர்சொரிய [ல்
பெண்கள் துணையில்லாமல் பிரித்துவந்தேனிவ்வனத்தி
மாறுபடாமேனியெல்லா மாறுபிடித்திழுக்க
தூசுபடாமேனியெல்லா சூரிமுள்ளிபிடித்திழுக்க
வெள்ளிவனக்காட்டில் வெள்ளிமுள்ளுதானிழுக்க
வீசிவகைகளிலே விதமானசோரிவர
கூசிமெள்ளத்தங்கையரும் கொடுமையுளகானகத்தில்
ஐயோசிவனே ஆதிமகாதேவா
குயில்போல்புலம்பிதங்கை குரல்களும்வேருகி
மயில்போல்புலம்பித்தங்கை மண்மேல்விழுந்தாளே
சோம்பல்மெத்தத்தானாகி துவண்டுவிழுந்தாளே
சிவனேயெனப்புலம்பி திகைத்துவிழுந்தாளே

### கானகத்தில் தங்காள்களைத்து விழுந்ததைக்கண்டு ஈஸ்பரர் தெய்வகன்னியையனுப்பி களையாற்றிவரச் சொன்னது.

ஆதிசிவனாரும் ஐயருந்தானறிந்து
தெய்வகன்னியையழைத்து சொல்லுவாரீஸ்பரரும்
நீதியுள்ளகாருளன் நிஸ்டூரரிருவருண்டு
பொன்னம்பலந்தனிலே புகழ்பெரியகாருளன்
அன்னாளிற்பேருபெற்ற அத்தைபிள்ளைமூவர்களும்
ஐவர்களைப்போற்பிறந்து அரசாளும்நாளையிலே
மேனாட்டுவேடுவரை வெட்டிக்கறுவருத்து
பட்டார்களென்றுசொல்லி தங்காள்படுகளத்தைதான்
தேடி, கட்டழகிதானும்கானகத்தில்விழுந்துவிட்டான்
தலையானகன்னியரே தானங்கேநீபோய்
மலையாவிசூழ்ந்து மயங்கிவிழுந்தவளை

களையாற்றி நீயும் கடிகிவருகவென்று
ஈசனார்சொல்ல இங்கிதமாய்கன்னியரும்
நல்லதென்றுகன்னி நலமுடனே தானெழுந்து
மாலைகாற்றுதென்றலைப்போல் வந்துமேகன்னியர்கள்
மாதுநல்லராசனையும் வருணனையுந்தேவி
கன்னியர்கள்தானும் களையாற்றுமென்றுரைக்க
மேகமெல்லாம்கூடி விதமாகவேதிரண்டு
ஊசிபோல்மின்னி உரிபோலகாலிறங்கி
மாசிபோல்மின்னி பரவிப்பொழிந்ததுவே
சேவேருஈசருட திருவுளத்தினாலேதான்
காவேரியாறுபோல் கறைபிரண்டுவந்ததுவே
அப்ப-அண்ணாருடன்பிறந்த அருக்காணியிளவரசு
பொன்னாருடன்பிறந்த பொற்கொடியாள் தங்காளும்
தியக்கம்தெளிந்துதேன்மொழியாள்தங்காளும்
மயக்கம்தெளிந்து மயில்போலெழுந்திருந்து
தீர்த்தங்களாடி சிவனையடிபணிந்து
நீறையள்ளித்தான்புனைந்து நீலவர்னபட்டுடுத்தி
உடுத்ததுகிற்பிழிந்து ஒருசிறகுமேற்போத்தி
முக்காடுமிட்டு மொய்குழலாளப்போது
எடுத்தான்திருக்கரகம் ஏந்தினாள்வேபபங்குலை
வேப்பங்குலைபிடித்துதங்காள் வீசிநடக்கலுற்றாள்
காப்பிட்டகால்நோக தங்காள்கலங்கிமிகப்புலம்பி
நடந்தாள்பிறவியரும் நல்லவண்ணாரைத்தேடி
அண்ணமாறைத்தேடி அருக்காணியிளவரசு
நிலைகொண்டுநிற்காமல் நினைவுகளுமெய்மறந்து
தலைமேலேகையைவைத்து தானபுலம்பித்தங்காளும்
ஏங்கிப்புலம்பி இறையவனே தஞ்சமென்று
இட்டயெழுத்தின்படி இப்படிதானிருக்க
வெட்டியிலாசைப்பட்டால் மேல்வருமோ அண்ணாவே
கட்டியதோர்பாரமுடன் கருங்கச்சைசுங்குவிட்டு
பட்டாவுங்கேடையமும் பாங்காகவேபிடித்து [ந்தி
வட்டமிடும்பரியேறி அண்ணாமணிக்குடையைகையிலே



உக்கிரகண்டமந்திரவாள் அண்ணாவே கொடுங்கையிலே
தானெடுத்து, வங்காளச்சூரி அண்ணாவேவாங்குசமுதா
டுடனே, எழுபதுகட்டியடித்த இருப்புநல்லகேடயமும்
தழுவியேதானெடுத்து அண்ணாவே தன்முதுகில்போ
சிங்கப்பரியேறி அண்ணா சிலைவேடரத்தனையும் [ட்டு
கொங்கரைத்தான்வளைத்து கோடிபடைகருவறுத்து
வெட்டிக்கெலித்துநீங்கள் வீதிவருகையிலே
கட்டழகிபாதகத்தி நான்கண்குளிரப்பாரேனோ
பறக்கும்பரியேறி நீங்கள் பாவனையாய்வருகையிலே
சிரக்கும்பரியேறி நீங்கள் தெருவீதிவருகையிலே
குத்திவெட்டிகுடல்பிடுங்கி கூடலூர்போகுமட்டும்
வெட்டிகருவறுத்து வெங்கள்காடத்தினையும்
நாடுகாணிமேடளவும் நற்றலையூர்போகுமட்டும்
மேடுகாணிதான்வரைக்கு மேனாடுபோகுமட்டும்
தக்கான்தளம்பாடி தலைநாடுபோகுமட்டும்
தட்டைநாட்டையெல்லாந் தத்தளிக்கத்தானடுக்கி
முக்கணாங்குறிச்சிமட்டும் அண்ணாவேமுடிக்கிதுறத்திட
வே, இலவனூர்மந்தைமட்டும் எதிரத்தான்துரத்தி
மூலத்துறைகடந்து மூலனூர்போகுமட்டும் [வே
வெளவால்துறைகடந்து வளைந்துவெட்டித்தான்துற
நீலம்பூர்கறைவரைக்கும் நிணக்குருதியாறோட [த்தி
நாவலூர்மூலதுறை நடுக்கரைத்தைக்குட்டைமட்டும்
குருணைக்கறையிலே கூட்டிமிகக்குவித்து
காடைபூர்பூதமட்டும் கண்டாங்கித்துறைவரைக்கும்
கொங்குகன்னிவாடிமட்டும் கொண்டாங்கிமலைவரைக்கு
ம், வெங்கலக்கொம்பூதி அண்ணாவேவெற்றிமுரசறைந்
து, மறித்துகுடல்பிடுங்கி மஞ்சைநகர்மத்தியிலே
நறிக்கிவிருந்திட்டல்லோ அண்ணாவே நகரிவந்துசேரா
மல், கொங்கரைச்சங்கரித்துநீங்கள் கோட்டைவந்து
சேராமல், சேர்ந்துவெட்டிக்கருவறுத்து சேனைதளம்
கூட்டி, பூந்துவெட்டிகருவறுத்து பொற்கொடியாள்
பார்த்துநிற்க, வெட்டிக்கருவறுத்து வீடுவந்துசேராம

ல், கட்டியதோர்பார்முடன் அண்ணவேகானகத்தில்
மடிந்ததென்ன

### தங்கைகளையாறியெழுந்திருந்து அண்ணமாரைத் தேடிபுலம்பிக்கொண்டு போகுதல்.

அந்தவனங்கடந்துரங்காள் அப்பாலேபோகலுற்றாள்
மறத்திலேவாழுகின்ற மாடப்புறாவினமும்
அருந்துதியைப்போலதங்காள் அழுதுகொண்டுபோ
கையிலே, பேயும்பிசாசும் அண்ணவேபெரியவனந்தனி
லே, பேய்போலே நின்றுதங்காள்புலம்பிவழிபோகையி
லே, காப்பிட்டகால்கள்ரண்டும் கற்கரடுதானிடற
கூப்பிட்டுபுலம்புகிறாள் குண்ணுடையாள்தன்மகளும்
அண்ணரிருவரையும் அன்புடனேதான்தேடி
எண்ணறியகானகத்தில் யேந்திழையாள்புலம்புறது
மண்ணுமனமுறுகும் மரங்களிலைதானுதிரும்
அண்ணீன்றகன்றுகளும் மமிர்தங்குடியாது
பல்லியிறையெடுக்காது பாம்புவாய்திரவாது
மாடுபுல்லுமேயாது மலடிமனக்கலங்காது
காடுதனில்வாழுங் கரடிபுலிசிங்கமெல்லாம்
வர்னக்கிளிமொழியால் வரயோசைகேட்டவுடன்
கன்னிகுரல்தான்கேட்டு கலங்கியேஓடிவந்து
கரடிபுலிசிங்கமெல்லாந்தங்காட்குக் காவலாய்சூழ்ந்து
வர, அழுதுபுலம்பி அண்ணரைத்தான்தேடி
அந்தவனம்கடந்து தங்காளப்பாலேபோகையிலே
சந்தனம்கஸ்தூரி தான்மணங்கள்வீசிடுமாம்
பரிமளங்கள்தான்வீசும் பாங்காய்வனந்தனிலே
நாகமலைவீரமலை நல்லிடமுஞ்சூழ்ந்தமலை
தோகைமயிலாடிநிற்கும் சுந்தரனார்போற்றுமலை
விண்ணோரிருக்குமலை வேதியனார்போற்றுமலை
ஆதிசிவனாரை அடிபணிந்துபோற்றுமலை
கன்னியர்கள்வாழுமலை கையிலங்கிரிவீரமலை
எண்ணறியபூசைபண்ணி ஈஸ்பரரைபோற்றுமலை
கரகம்எடுத்தாடும் கன்னியர்கள்வீரமலை



நாகம்விளையாடுமலை நற்றவசுபண்ணுமலை
மேகம்படருமலை வேதியனாபோற்றுமலை
காகம்பறவாமல் கடமானுறங்குமலை
ஆதிமலைநாதிமலை ஆண்டவனார்வாழுமலை
சாமிமலைதோகைமலை சதுரங்கிவீரமலை [தம்
பாரமலைத்திசைநோக்கி பைங்கொடியாள்புலம்புஞ்சத்
வீரமலையடிவாரம்தங்காள் விரும்பிப்புலம்புஞ்சத்தம்
மலைகள்சிதையோடதங்காள் வருந்திப்புலம்புஞ்சத்தம்
ஆண்டம்சிலையோடதங்காள் அலறிப்புலம்புஞ்சத்தம்
மங்கைபுலம்புஞ்சத்தம் மலைகளெல்லாம்தானதிரும்
தங்காள்புலம்புஞ்சத்தம் தரணியெல்லாந்தானதிரும்
மானளவுந்தேன்மொழியாள் வருந்திப்புலம்புறது
கானகத்தில்வாழுகின்ற கரடிபுலியோடிவந்து
தங்காளருகில்வந்து தாயேயெனப்பணிந்து
கூந்தல்களெல்லாம் குலைந்துகிடக்கிறதை
ஏந்திழையாள்தன்மயிரைக் கரடியெடுத்துமுடிந்திடுமா
ம், விரித்தமயிர்தான்முடித்து விரும்பியங்கேசூழ்ந்துவ
ரும், சின்னண்ணயென்பிறவிஎன்னை சித்தாலைப்பட்ட
ணத்தில், என்னைதனித்துவிட்டுயண்ணவே இங்கேவந்
துமாண்டீரே, அழுதுபுலம்பித்தங்காள் ஐயோசிவ
னேயென்றாள், தங்காள்புலம்புஞ்சத்தம் தான்கேட்டு
அவ்வனத்தில், புருஷமிருகமெல்லாம் பொற்கொடி
யைத்தான்பார்த்து, வழிதாத்துமுட்பொருக்கி வகையா
கச்சூழ்ந்துவர, கண்டபேரண்டபட்சிக்காட்டிலுள்ளமி
ருகமெல்லாம், முகம்வாடித்தங்காள்முன்னேபணிந்து
நிற்கும், விரிவானசூரியனை மேகமெல்லாம்தான்கூடி
வெயிலினங்கள்தெரியாமல் விரிவாய்க்குடைபிடிக்கும்
கூட்டிற்கிடக்கும் குணமானகிளிகளெல்லாம்
அன்னமுடன்தாருவும் அவ்வனத்துபட்சிகளும்
வர்னகிளிகளெல்லாம் வாய்திறந்துபேசிவரும்
மயிலினங்கள்குயிலினங்கள் மாடப்புருவினமும்

வெயிலினங்கள்தெரியாமல் மேலேபறந்துவரும்
சோடானைரண்டும் தோகைநல்லாள்போறவழி
எதிரானமரங்களெல்லாம் இருபுரமும்பிடுங்கிவர
காட்டானைமுள்பொருக்க கரடிபுலிமுன்னடக்க
வாதுருஜன்வழிதூக்க வருணருசன்மழைதெளிக்க
மேகருசன்குடைபிடிக்க வெள்ளாமரசிபற்கு
நாகலோகப்பெருந்தீவு நடுத்திருவேகையிலங்கிரி
கைலங்கிரிபோலே கனமானவீரமலை
சித்தர்கள்கூடி தினம்பூசைசெய்யுமலை
நாகமலைவீர நாலிடமுஞ்சூழ்ந்தமலை
தோகையிளங்கன்னியர்கள் தோத்திரங்கள்செய்யுமலை
பச்சமலைபவளமலை அண்ணுவே பலமானவீரமலை
அச்சுதனார்தன்னருளா லருந்தவசுசெய்யுமலை

### பெரியகாண்டி தவசுபண்ணும்போது தங்காள் புலம்புஞ் சத்தம்கேட்டு கன்னிமார்களை விட்டுக்கொன்றுவரச் சொன்னது.

பரமசிவனருளில்வந்த பாங்கானபெரியகன்னி
அறியபெரியக்காண்டி ஐயன்குமாரத்தியும்
சிவனைமிகநினைந்து சிவபூசைதான்முடித்து
சிறப்புடையகன்னியரும் சிவனைமிகநினைந்து
அருந்தவசுசெய்ய அரியபெரியக்காண்டி
செப்புகுடங்கவிழ்த்து ஏழுசெப்பூசிதானிருத்தி
கறுத்தபுலித்தோலும் கடைமானினாசனமும்
உரித்தபுலித்தோலும் உயர்ந்தமானினாசனமும்
போர்த்தபுலித்தோலும் புள்ளிமானாசனமும்
சாத்தும்புலித்தோலும் சங்குமணிநாவடமும்
அறையிலிடுங்கிண்கிணியு யல்லிதண்டுபூநூலும்
ஏகவேட்டிதானணிந்து ஏகாந்தவீற்றிருப்பும்
காலிலிடும்பொற்சிலம்புங் கனகமணியணிந்து
மேலெல்லாம்வெண்ணீறு விதமுடனேதானணிந்து
திருநீறுபழமேந்தி செப்பமுடன்தானுமங்கே
ஆதிசிவன்மகளும் அருந்தவசுதானிருந்தாள்



நீதியுடன்பெரியக்காண்டி நின்றாள்பெருந்தவசு
ஊசிமுனைமேலே கோடிகாலம்உகந்ததவசிருந்தான்
பாசிமுனைமேலிருந்து பருந்தவசுபண்ணுகிறாள்
விழுந்தசடைவேறாண விரும்பித்தவமிருந்தான்
பறந்தசடைபந்தலிட பாரத்தவசிருந்தாள்
ஆலுடனேவேம்புகளும் அந்திடத்திலேமுளைத்து
பாங்காகவிழுந்தோட பாரத்தவசிருந்தாள்
தவசில்மனம்சலித்துத் தானிருக்கும்வேளையிலே
சிவனருளாற்பிறந்த செம்பொன்மணிப்பெருமாள்
அண்ணருடன்பிறந்த அருக்காணிமிளவரசு
பொன்னருடன்பிறந்த பேடைமயிற்றங்காளும்
பாதத்தைப்பார்த்தகண்கள் தங்காட்குபலதிசையும்பாரா
மல், வீரமலைத்திசைநோக்கித்தங்காள்விரும்பிவழிபோ
காமல், அண்ணரைத்தேடிதங்காள் ஐயோசிவனேயெ
ன்று, கூப்பிட்டுபுலம்புகிறாள் குண்ணுடையான்தன்ம
களும், படுகளத்தைத்தான்தேடி பைங்கிளியாள்புலம்பு
ஞ்சத்தம், மலைகள்திடுக்கிடுமாம்மாமலைகள்நெக்குவிடும்
தலைமையுள்ளமரங்களெல்லாம் தானும்திடுக்கிடுமாம்
நிலையுள்ளமரங்களெல்லாம் நின்றுதிடுக்கிடுமாம்
தங்கைபுலம்புறது தரணிதிடுக்கிடுமாம் [தம்
தேங்கியேகானகத்தில் தங்கைதிகைத்துப்புலம்புஞ்சத்
அருந்தவசுதானிருக்கும் ஐயன்குமாரத்திக்கு
பெரியதவமிருக்கும் பெரியகாண்டிமாதாவின்
தன்செவியிற்கேட்டிடவே தானுமிகச்சினந்து
சீருள்ளபெருந்தவசில் யிந்தசிறுகுரலும்தான்கேட்டு
மனிதரண்டாவனம்தனிலே மகாதவசுபண்ணையிலே
கனிதமுடன்தான்கேட்க காரணமோவென்றுசொல்லி
அருங்கானகம்தனிலே நானரியதபம்செய்கையிலே
திருச்செவியிற்றான்கேட்டு சினந்துமேயேதுசொல்வா
ஒரு-பெண்குரல்போலே பெரியசத்தம்கேட்குதடி [ள்
ஒரு-கன்னிகுரல்போலே கனத்தசத்தம்கேட்குதடி
ஆரடிகன்னிகளே நீங்களறிந்துமெள்ளவாருங்கடி.

பாருங்கடிகன்னிகளே படுங்காடுமீதேறி
யென்றுசொல்லக்கன்னிகள் யேழுபேர்தானெழுந்து
பார்த்தாரேயப்போது யிந்தப்பாவைவருகிறதை
கண்டுமேகன்னியர்கள் கருத்துடனேவோடிவந்து
பெரியக்காண்டிதன்னருகில் பிரபலமாயோடிவந்து
யேத்திழையேதாயே யீஸ்பரியேநீகேளும் [ள்
ஆரோவொருபெண்ணாள் அழுதுகொண்டுதான்வாரா
என்றுசொல்லக்கேட்டு எரிபறந்துகண்சிவந்து
சொல்லுவாள்பெரியகாண்டி துருசாகவப்போது
பேயோபிசாசோ பிரபலமாய்தானறியோம்
காயாமலடியவள் கன்னிகையென்றறிந்து
அவளைக்கொன்றுக்ஷணத்தில் குலைசெய்துவாருமென்
றாள், கண்டுசினம்தீர்த்துக் கடிகியிங்கேவாருங்கடி
இயல்பெரியமாதாவும் யேவிவிட்டாள்கன்னியரை
ஆறுபேர்கன்னியர்கள் அடிபணிந்துதானேடி
கரடிபுலிவாழும் கல்மலையில்றான்பார்த்து
மலைவிட்டுக்கீழிறங்கி மங்கையர்களோடிவந்து
ஓடிவந்துகன்னியர்கள் உத்தமியைக்கண்டதில்லை
பொற்கொடியைக்கண்டவுடன் போற்றியடிபணிந்து
இந்தமானத்தருந்ததியை வையகத்தில்கண்டதில்லை
அன்னநடைதங்காளை யன்புடனேபார்த்துநின்று
தங்காள்புலம்புவதை தான்கண்டுகன்னியர்கள்
கூந்தலவிழ்ந்து குலைந்துகிடக்கிறதை
கண்டுமேகன்னியர்கள் கையில்விரித்துதறி
கூந்தல்விரித்தல்லவோ கூடிமயிர்முடித்து
பாடிக்கொண்டுகன்னியர்கள் பக்கமேசூழ்ந்துவர
கன்னியரைக்காணோமென்று கனம்பெரியமாதாவும்
அரியநல்லபெரியக்காண்டி ஆக்கரித்துதான்சினந்து
கர்த்தன்குமாரத்திக்கி கடுங்கோபம்தானாகி
மெத்தமனம்வெகுண்டு வெகுகோபம்தானாகி
நாம்-ஏவிவிட்டகன்னியர்களினித்திரும்பவில்லையென்று
இன்னம்வரக்காணோமென்று எரிபறந்துகண்சிவந்து



பக்கத்திற்றானிருக்கும் பாங்கானகன்னிகளை [ள்
அழைத்துபெரியக்காண்டி அன்புடனேசொல்லுகிறா

பெரியகாண்டி மந்திகளையும் நாகத்தையும் விட்
டுத்தங்காளைக் கொல்லச்சொல்லுகிறது.

பாரமலைவாழும் பருமுரசுமந்தியெல்லாம்
திக்கெனவே நீயோடி சீக்கிரமாயழையுமென்றாள்
கடிகியேதானேடி கன்னியர்கள் தானுமப்போ
மந்திகளைக்கண்டு மங்கையர்கள்சொல்லுகிறார்
அம்மைபெரியக்காண்டி உங்களையழைத்துவரச்சொன்
னாளே, அந்தமொழிகேட்டு ஆனதொருமந்தியெல்லா
ம், திக்கெனவேயோடிவந்து தெண்டனிட்டுநிற்கையி
லே, மங்கையரசியரும் மந்திகளைப்பார்த்துரைப்பாள்
ஒரு-மானிடசென்மம் வருதடாமந்திகளே [ள்
அவளை-கொன்றுசரிபிடித்து குலைசெய்துவாருமென்றா
அப்போதுமந்திகள்தான் ஆக்கரித்துக்கொக்கரித்து
மந்திகளோடி மரமேறிபார்க்கையிலே
கன்னியவள்வாறதை கண்டுமேமந்தியெல்லாம்
கண்டுமேகீழிறங்கி கன்னிமுன்னேவந்திடுமாம்
கனிகள்மிகப்பொறிக்கி கன்னிமுன்னேவந்திடுமாம்
வேரோடேமரம்பிடுங்கி வீதிகளைத்தூர்த்திடுமாம்
அப்போபெரியகாண்டி அதிகோபம்தானாகி
நாமேவிட்டமந்திகள்தான் திரும்பிவரவில்லையென்று
கோபித்துமந்திகளை குலவையிட்டுயன்னேரம்
கோபம்மிகப்பெருகி கோபித்துகண்சிவந்து
ஆரடிகன்னியரே அழையுமென்றாள்நாகமெல்லாம்
ஐந்துதலைநாகமெல்லாம் அழைத்தோடிவாருமென்றா
ள், செந்தலைநாகமெல்லாம் சீக்கிரத்திலழையுமென்றா
ள், கருந்தலைநாகமெல்லாம் கடுகவழையுமென்றாள்
அப்போதுகன்னியர்கள் அழைத்துவிட்டார்நாகமெல்
லாம், வந்ததொருநாகமெல்லாம் மங்கையரைதெண்ட
னிட்டு, நிற்குமந்தவேளையிலே நித்தியகன்னியேதுரை
ப்பாள், ஒருபெண்ணாள்புலம்பி பிரபலமாய்தான்வாறா

ள், அவளை-கொன்றுசரிபிடித்துகொக்கரித்துவாருமெ
ன்றாள், அப்போதுநாகமெல்லாம் ஆக்கரித்துபற்கடி
த்து, சீறிச்சினந்தல்லவோ சென்றுகமுள்ளதெல்லாம்
ஐந்துதலைநாகமெல்லாம் அலறிமிகச்சினந்து
போனதொருநாகமெல்லாம் பொற்கொடியைக்கண்ட
வுடன், தங்காளைக்கண்டவுடன் தான்போனநாகமெல்
லாம், கூறியநாகமெல்லாம் குணம்திரும்பிபடம்விரித்
து, பரிவுடனேகுடைபிடித்து பக்கநிழலிட்டுவரும்
குடைபோல்படம்விரித்து குதித்துவிளையாடிவரும்
ஐந்துதலைநாகமெல்லாம் அழகுபடம்தான்விரித்து
தங்காள்தலைமேலே தான்பிடித்துஆடிவரும்
அப்போதுபெரியகாண்டி அதிகோபந்தானாகி . [ள்
அருகிருந்தகன்னியரை அழைத்துமேயேதுசொல்வா
வில்பிளந்துசரந்தொடுக்கும் வீரமகாமுனியை
மலைபிளந்தநாளையிலே வாழும்மகாமுனியை
சிலைபிளந்துவில்லேற்றும் சிவனுடையதன்மகனை
வீராதிவீரன் வீரமகாமுனியை
அழைத்தோடிவாருமென்றாள் ஆனதொருகன்னியரை
என்றுசொல்லிகன்னியரு மெழுந்திருந்துதான்போய்
மகாமுனியைத்தானும் வாருமெனவழைத்தார்
அப்போதுமகாமுனியும் ஆக்கரித்துதானெழுந்து
சீக்கிரத்தில்வந்து தெண்டனிட்டுநிற்கையிலே
அப்போதுபெரியகாண்டி அன்புடனேசொல்லுகிறாள்
ஆரோவொருபெண் அழுதுகொண்டுதான்வாறாள்
பெண்ணென்றசென்மம் பெருந்தவசில்வரலாமோ
ஒருபெண்குரல்சத்தம் பெரியசத்தம்நான்கேட்டு
கன்னிகளைமந்திகளை கடியதொருநாக
ஏகிவிட்டேன்போக இங்கேவரவுமில்லை
ஆதலினால்நீபோய் அங்குவிட்டபேர்களையும்
வருகிறகன்னியையும் வகையாககொன்றுவிட்டு
வந்துவிடுமாமுனியே மகாவீரா நீதானும்
என்றுசொல்லிஈஸ்பரியு ஏவிவிட்டாள்மாமுனியை



வென்றுவாவென்றுசொல்லிவிரைந்தோடிமாமுனியும்
பாரத்தடியெடுத்தான் பக்கமலைசரிந்துவிழ
வீரத்தடியெடுத்தான் விண்ணுலகம்திடுக்கிடவே
ஆக்கரித்துமகாமுனியும் அங்கேவந்துபார்க்கையிலே
கண்டாளேதங்காளை காரணமாயப்போது
பார்த்துமனமுருகி பாரமகாமுனியும்
ஈஸ்பரியோமாதாவோ எவரென்றுநானறியேன்
உத்தமியாள்தன்னிடத்தில் ஒருவருமணுகாமல்
வனத்திலுள்ளமிருகமெல்லாம் வருகுதேயென்றுசொ
ல்லி, பத்தினியாள்தன்னிடத்தில் பக்ஷியெல்லாம்பேசி
வர, நாகங்குடைபிடிக்க நற்பாம்புதானுட
தவசில்மிகுந்த தாயிவளென்றுசொல்லி •

### பெரியக்காண்டி தங்காளை கொல்லும்படி வீரமகா முனியை அனுப்ப முனிவந்துபார்த்து பெரியக் காண்டியை தங்காளிடத்திற்கு போகும்படி சொல்வது.

திரும்பிவந்துதாயார் திருவடியைத்தான்பணிந்து
கேளுமம்மாதாயாரே கிருபையுடனென்வார்த்தை
போய்பார்த்துவந்தேனந்த பொற்கொடியாள்தன்மகி
மை, கண்டுவந்தேன்மாதாவே காசினியிற்கிட்டாது
தெண்டிரைசூழ்வையகத்தில் தேடக்கிடையாது
ஆதிசிவனுடைய அருள்பெற்றபெண்ணணங்கு
சோதிசுடர்போலவொரு தோகையருந்தான்வாறாள்
பார்த்தால்பசிதீரும் பாவங்களோடிவிடும்
உன்னிலுமதிகவரம் உகந்துபெற்றதாயவள்தான்
அவள்-உன்னில்பெரியவடி உத்தமபத்தினியே
என்னாலுங்கூடாது என்னிலுமிகுத்தவடி
ஏறிட்டுப்பார்த்தவர்களிறந்துமடிந்திடுவார்
அக்கினித்தூணுமுன்னே அணுகுமோஈயெறும்பு
எரிந்திடுவார்தப்பாது ஈஸ்பரியேசொல்லுகிறேன்
உன்னிலும்பெரியவடி உத்தமியேசொல்லுகிறேன்
அவள்-வந்தவுடன்றவசு வகையாய்முடியுமம்மா

உன்தவசு அவளாலே உத்தமியேமுடியுமம்மா
நீ-மொழிந்தருளவே ணுமம்மா ஈஸ்பரனுர்தன்மகளே
தவசுமுடிந்ததம்மா தாயேஎழுந்திரம்மா
எழுந்துநான்வருவேனே எங்கள்மகாமுனியே
எழுந்திருந்தா நல்லதம்மா என்தாயேமாதாவே
அந்தமொழிகேட்டு ஆண்மையுள்ளமாதாவும்
ஐயன்குமாரத்தி அன்பாய்மனமகிழ்ந்து
குளிர்ந்தமுகம்தானுகி கொம்பனையாள்தானெழுந்தாள்
தண்டைசிலம்புமணி சதன்கைகளும்தான்புலம்ப
வெண்டையங்களோசையிட வீரமணிதானசைய
விழுந்தசடைவேற்பிடுங்கி விதமாய்த்தவரவிட்டு
அன்னம்போலேதடந்து அருந்தவசுமாதாவும்
வாருளேதங்காள் வண்மைகளைப்பார்க்கவென்று
வாறவழிதனிலே வகையானபூமியிலே
பாதகத்தில்பட்டெறும்பு பதைபதைத்துசாகாமல்
வேதப்பிராமணர்போல் வேதமணிகயிலெடுத்து
பூமியின்காற்பொருந்த புல்லுகளும்வாடாமல்
கல்லுநெகிழாமல் கர்த்தன்குமாரத்தியும்
அடிமேலடிவைத்து அன்னம்போலேநடந்து
நிற்கிறவேளையிலே நிகரற்றவீரமுனி
தன்னையும்பார்த்து தாயாருமேதுசொல்வாள்
தேரைஅலங்கரியும் தேசிகனேயென்றுரைத்தான்
அப்போதுமகாமுனியும் அடவாகத்தானெழுந்து
தேக்குமரமெடுத்து தேருகளுமுண்டாக்கி
ஆச்சாமரமெடுத்து அழகானபூந்தேரும்
வாச்சியுளிநாடாத வச்சிரமணிபூந்தேரும்
தச்சனுளிநாடாத தங்காதமுண்டுபணி
கொல்லனுளிநாடாத கோலவர்னப்பூந்தேரும்
தேரைஅலங்கரித்தாள் தேர்மணிகளோசையிட
மேலேயலங்கரித்தான் வீரமணியோசையிட
மதகரிகள்போலே வர்ன்னப்பரிதான்பூட்டி
தேருமேலேருமென்றுள் தெய்வமகாமுனியும்



அப்போ-தேருமேலேறினுள் தேவிபெரியக்கண்டி
தேரைநடத்தினன் தேர்மணிகளோசையிட
ரதத்தைநடத்தினன் ரதமணிகளோசையிட
தேரில்விட்டபூச்சக்கரங்கள் திருமுடியில்போய்விழுமா
தங்காள்முடிமேலே தான்விழும்பூச்சரங்கள் [ம்
கர்த்தன்குமாரத்தியும் கண்டாள்மனம்குளிர
தேரைநிறுத்தினுள் தேன்மொழியாள்பக்கலிலே

தங்காளை பெரியக்காண்டி ஆரென்றுகேட்க தன் வரலாற்றை சொல்வது.

அறியபெரியக்காண்டி அன்னம்போல்வாய்திறந்து
ஆரடிபெண்ணே நீ யலறியிங்கேயோடிவந்தாய்
பேயோபிசாசோ பிணம்தின்னும்பூச்சியோடி
காரணமாய்வந்த கன்னியரும்நீதானே
தெய்வலோகப்பெண்ணே திறமானகன்னியரே
அன்புடனேவந்தாயே அப்புறமேநில்லுமடி
உன்றாறும்பேரும் உத்தமியேசொல்லுமடி
முத்தானவாய்திறந்து யொருஉத்தாரம்சொல்லுமம்மா
என்றுபெரியகாண்டி யின்பமுடன்தான்கேட்க
அப்போதுதங்காள் அழுதுமிகயேதுசொல்வாள்
காயாமலடிபெற்ற கண்மணியுந்தானுமப்போ
காரும்பசுபோலே கண்மணியாளீன்றெடுத்த
பெண்மையும்நான்தாண்டி பேச்சிபோலானேண்டி
தாய்பெற்றமேனியது தவமுங்குலைந்தேண்டி
பேய்பெத்தபுத்திரிபோல் புறப்பட்டேன்கானகத்தில்
என்றுசொல்லதங்கா ளீஸ்வரியுமேபார்த்து
கண்டதில்லைவையகத்தில் இந்தக்காரிழையாள்தன்வடி
வை, நீ-ஆருடையவங்கிஷங்கள் அருங்கிளியேசொல்
லுமம்மா, பேரேதுசொல்லுமடி பெண்ணேயிளவரசே
உன்சாதிக்குலமும் யுனையீன்றமாதாவும்
தாய்பேரும்உந்தன் தகப்பனுர்தன்பேரும்
உள்ளபடிசொல்லுமம்மா யுத்தமியேதங்கையரே

என்றுசொல்லிகேட்க யெடுத்துரைப்பாள்தங்காளும்
என்பாடுகளைச்சொல்லவென்றால்எல்லையிடம்கொள்ளா
து, பாட்டிலடங்காது பார்த்தவர்கள்கண்சோரும்
ஏட்டிலடங்காது எழுதினவன்கைசோரும்
எங்களையன்தாயாரும் ஈஸ்பரனைதானோக்கி
பொன்னம்பலந்தனிலே புகழ்பெரியசன்னதியில்
ஒருவருமாக யுகந்துதவமிருந்து
ஈனுக்கிடாரி யிளங்கன்றுதன்னுடனே
கோதானமீய்ந்து கோடிதவமிருந்தார்
பூதானமீய்ந்து புத்திரனார்வேணுமென்று
அகுதிபிருமணற்கு அன்னதானங்கொடுத்து
மூன்னூறுபிருமணற்கு முத்துதானங்கொடுத்து
ஈசனார்கோவிலிலே ஏகாத்தமானிலத்தில்
தவசுநிற்கும்கோலமெல்லாம் சங்கரனார்தானறிந்து
பாரத்தவசுநிலை பரமனார்தானறிந்து
மனதுமிகவிறங்கி வந்துதவநிலைக்கு
ஈசனார்பார்த்து யிங்கிதமாயேதுசொல்வார்
என்னவரம்வேணும் யேந்திழையேசொல்லுமென்றார்
அறியகுழந்தைவரம் அய்யனேவேணுமென்று
வணங்கிநின்றதாயார்க்கு மனதிறங்கியாண்டவனார்
செவ்வலரிவெள்ளலரி திறமானபூக்கொடுத்தார்
பூவைமிகச்சாப்பிடவே புத்திரருண்டாகுமென்று
வரங்கொடுத்தாஸ்பரரும் வண்மையாய்தாயார்க்கு
பரமேஸ்பரியாளும் பலமாகநல்லவரம்
பெண்குழந்தை யொன்றினுக்கு பிலமாய்வரங்கொடுத்
தாள், எங்களுடதாயாரும் இந்தவரம்வாங்கிவந்து
பொன்னரென்றுசங்கரென்று புகழ்பெரியதங்காளும்
மூவர்களைப்பெற்று மூர்க்கமுடனிருக்க
அத்தைமலைக்கொழுந்தி அரியின்வரத்தாலே
பாரத்தவசிருந்து பாலர்கள்மூன்றுபேரை
பெற்றுவளர்த்து பிரியமுடனின்னாளும்
சித்தாலைபட்டணத்தை திறமுடனே ஆண்டிருந்தோம்



இப்படியாக யிருக்குமந்தநாளையிலே
சோழனழைத்து துரிசாய்வெகுமதிகள்
தந்தனுப்பியிங்கே சதிராகவாழயிலே
அறியவளநாட்டில் ஐவர்களைப்போலாக
பொன்னர்தான்தர்மரைப்போல் புகழ்பெரியருசமன்ன
வெற்றியுள்ளவீமனைப்போல் வீரியன்தம்பிசங்கன் [ர்
அருச்சுனன்போலத்தைபிள்ளை ஐயன்பெருமாளும்
நகுலனைப்போலே நலமுள்ளமன்னவரும்
சகாதேவனைப்போலாக சாஸ்திரத்தில்வல்லவனும்
துரோபதையைப்போலாக தோகைநல்லாள்தங்கைய
ரும், பொய்வசனமில்லாமல் பொருந்தியராசாளையிலே
வளநாட்டில்கோட்டையிட்டு வாழுகின்றநாளையிலே
வளநாடுபோதாமல் வாளகிரிசீமையிலே
பாதிகாவல்கொடுத்துசோழன் பட்டயமுந்தான்வாங்கி
இருப்பூசிபோனாலும் பொன்னூசிதாறேனென்று
மாறுபடாமேனியுடன் வர்னபறிமீதேறி
நாடுபெற்றுயெங்களண்ணன் நகரில்வந்துசேர்ந்தபின்
பு, உடுகறையும்வாங்கியண்ணர்ஊருவந்துசேர்ந்தபின்
பு, வற்றாக்கடல்போலே நாங்கள் வாழ்ந்திருக்கும்நா
ளையிலே, விஸ்தாரமானதொரு வேடுபடைகள்தான்கூ
டி, கோனாடுகொள்ளையிட கொங்கருமேவந்தார்கள்
மேனாட்டுவேடுவர்கள் வெகுபேர்கள்வந்தார்கள்
கொடுமையுள்ளவேடுவர்கள் கோடிபேர்காலாளும்
தீப்புகைபோலாக தேகமெங்குஞ்சூழ்ந்ததினால்
ஆள்வந்துரைக்கயெங்க ளண்ணமார்தான்கூடி
பாளையத்தைகூட்டமிட்டு படைமுரசுதான்முழக்கி
அண்ணரிருவர்களும் அத்தைபிள்ளைமூவர்களும்
எண்ணவொண்ணாச்சேனை யக்குரோணிதளத்துடனே
ஆனைபடைசேனை அதிவீரர்படையெடுத்து
சாடிவருஞ்சேவகரை தலைசிதறவே தூக்கி
கொங்கரையுஞ்சங்கரித்து கோடிபடைகருவறுத்து
வெங்கலக்கொம்பூசி வீரமுரசறைந்து

வெட்டிப்படைகெலித்து வீரசின்னம்தானூதி
பட்டார்களென்றுசொல்லி பாங்குடனேதானறிந்து
படுகளத்திசைநோக்கி பாங்குடனேதேடிவந்தேன்
தேடிவனந்தனிலேநான் திகைத்துப்புலம்பிவந்தேன்
என்றுசொல்லதங்கையரும்யேதுசொல்வாளீஸ்பரியும்
பண்டுமுன்னாள்நான்செய்த பாக்கியத்தாலிங்குவந்தாய்
அண்ணருடன்பிறந்த அருக்காணியிளவரசே
பொன்னருடன்பிறந்த பேடைமயில்வாகனமே
சங்கருடன்பிறந்த சாதிமரிக்கொழுந்தே
உங்களிடநாட்டுவளப்பங்களை நாகரிகமுள்ளதெல்லாம்
உங்களூர்வளப்பங்களை வுள்ளபடிசொல்லுமம்மா

## பெரியக்காண்டியிடத்தில் தங்கை சகலவளப் பங்களையும் சொல்லிவருதல்.

என்று-ஈஸ்பரியாள்கேட்க யெடுத்துரைப்பாள் தங்கையரும், எங்களிடநாட்டுவளப்பங்கள் நாகரிகமுள்ளதெல்லாம், கேட்டாயேமாதாவே கிருபையுடன்சொல்லுகிறேன், நெல்லிவளநாடு நிகரில்லாகோனாடு
ஆலத்தூர்பட்டணமும் அழகுபொன்னிவளநாடு
சித்தாலைப்பட்டணமும் சிறந்தபொன்னிவளநாடு
காலால்மடைதிறந்தால் காதவழி நீர்பாயும்
நெல்லுவிளைந்து நின்றசம்பாபோரேறும்
முத்துவிளைந்து மிளகும்சம்பாபோரேறும்
கரும்புசெழித்து கணுவுக்கொருமுத்தினும்
அரும்புமலரெல்லாம் ஆணிமுத்துதான்விளையும்
வாழைவடக்கினும் வான்கமுகுதெற்கினும்
தாழைமலர்பொழிந்து தனிவாசம்வீசிநிற்கும்
சோலைகிழக்கினும் துய்யகிலாமேற்கினும்
வாலக்கிளிபேசும் வைகைநெல்லிவளநாடு
தட்டுபுலுகணியும் தம்பிசங்கள்வளநாட்டில்
கட்டுகலங்கானும் கதிருழக்குநெற்கானும்
ஆனைகட்டதூர்விளையும் அண்டமுட்டபோரேறும்
வுண்டணியிழூர்பன் வைகைநெல்லிவ்ளநாட்டில்



கொண்டல்நின்றுசேல்பாயும் குதித்துவிளையாடும்
மகசனங்கள்நின்று வயல்பாய்ந்துவிளையாடும்
சிகரமுள்ளதெண்டையெல்லாம் சேர்த்துவிளையாடும்
அந்தவளநாட்டை அரசாண்டோமின்னாளும்
நந்தவனத்திலுள்ள நாகரீகம்சொல்லுகிறேன்
பூங்காவனத்திலுள்ள புதுமைகளைசொல்லுகிறேன்
பாங்கானபுட்பமும் பலவகைகள்தானுமுண்டு
எடுத்துரைக்க நீர்கேளும் என்னுடையமாதாவே
அடுக்கலரிசெவ்வலரி அழகுமுல்லையிருவாட்சி
வெட்டிவேர்மருக்கொழுந்து விதமானசெண்பகமும்
கட்டுமாங்கனியுடனே கதலிபலாநாரத்தையும்
வகையாலொருகனிகனிகள் வைகைநெல்லிவளநாடு
செகமதிற்கிட்டாது சிறந்தபொன்னிவளநாடு
மஞ்சட்கிணறு மருதாணிப்பொய்கையுண்டு
இஞ்சியெலுமிச்சை இதமுடையரஸ்தாளி
வாழைபலாக்கனியுதிரும் வைகைநெல்லிவளநாடு
சூரியகாந்தபுட்பம் சூரியனையொப்பிடலாம்
மாங்கனிக்குமந்திவந்து மகிழ்ந்துவிளையாடும்
தேன்கனிக்குள்பூங்கிளிகள் சேர்ந்துவிளையாடும்
செங்கனிகள்தானுடைந்து செந்நெல்வயல்பாயும்
மாங்கனிகள்தானுடைந்து வால்தோறுந்தான்பாயும்
கன்னல்விளைந்து கதித்தர்டும்கோனாடு
செந்நெல்விளைந்து திருச்சம்பாபோரேறும்
திருச்சம்பாபோரேறும் செய்யபன்னிவளநாடு
பவளச்சம்பாநெல்விளையும் பார்நெல்லிவளநாடு
மிளகுசம்பாநெல்விளையும் வீரநெல்லிவளநாடு
அந்தவளநாட்டை ஆண்டிருந்தாரெங்களண்ணர்
இந்தப்புதுமையெல்லாம் ஈஸ்பரியாள்தான்கேட்டு
தங்காளைப்பார்த்து தாயாருமேதுசொல்வாள்
அண்ணமார்தங்கையரே அருக்காணியிளவரசே
வர்னபசுங்கிளியே வாய்பேசாத்தங்கையரே
மானின்றகண்ணே மானத்தருந்ததியே

கானமயிலீன்ற கண்மணியேயிளவரசே
காரும்பசுவீன்ற கண்மணியேதங்கையரே
தாருக்களீன்றெடுத்த தங்கத்திருமேனியரே
உன்-நாட்டுவளப்பம் நாகரிகமுள்ளதெல்லாம்
ஏட்டிலெழுதினப்போ லெடுத்துரைத்தாய்தங்கையரே
உன்தாயார்திருவழகும் தகப்பனார்பேரழகும்
எனக்குரைக்கவேணுமடி யிளவரசேதங்கையரே
என்று-ஈஸ்பரியாள்கேட்க யெடுத்துரைப்பாள்தங்கை
யரும், வாய்விசேஷம்சொன்னால் மண்டலத்துக்கேரு
து, மெய்யென்றிருப்பாரோ மேதினியிலுள்ளவர்கள்
என்றுசொல்லித்தங்காளும் ஈஸ்பரியுந்தானகைத்து
ஆனாலுமென்ன அவரழகைசொல்லுமம்மா
என்தகப்பன்தன்னழகை ஈஸ்பரியேகேளுமம்மா
தென்னமரம்போலே திருத்துடைகள்தானுமது
கரும்பனைத்துண்டதுபோல் கையிரண்டுநீண்டிருக்கும்
குண்ணுஞ்சால்போலிருக்கும் கொடியயவரழகும்
மதயானைபோலிருக்கும் மத்தகந்தோள்புயமும்
ஆனபடியாலே எங்களையர்திருநாமம்
குண்ணுடையானென்று குவலயத்தில்பேருச்சு
தாயாரழகுதனை தயாபரியேகேளுமினி
கூந்தலழகுமித்த குவலயத்திற்கிட்டாது
சேர்ந்தஸ்தனம்மார்பு செப்புக்குடம்போலிருக்கும் [ல்
ஆடுந்துடைகள்ரெண்டும் அடிவாழைத்தண்டதுபோ
கூடும்புருவம்ரெண்டும் கொன்றைக்காய்போலிருக்கும்
ஆடும்புருவம்ரெண்டும் அம்மானைப்போலிருக்கும்
சோடுவிழிகள்ரெண்டும் சொக்கட்டான்பூப்போலே
நாட்டியேமேன்மையுள்ள நல்லதிருவழகு
ஏட்டிலடங்காது என்தாயார்திருவழகு
சிமையிலில்லாத சிறந்ததிருவழகு
பாரத்திருவழகை பைங்கொடியாள்தானுரைக்க
கர்த்தன்குமாரத்தியும் கயிலாசகன்னியரும்
மெத்தமனமகிழ்ந்து மேனியெல்லாந்தான்குளிர்ந்து



ஏந்திழையைப்பார்த்து எடுத்துரைப்பாளீஸ்பரியும் 135.
அருந்துதியேபெண்ணணங்சே அதிரூபநாயகியே
சாயலழகை சந்திரர்க்குவொப்பிடலாம்
கூந்தலழகுயிந்த குவலயத்திற்கிட்டாது
அன்னக்கிளியே அதிரூபநாயகமே
வர்னக்கிளியே வாய்பேசாத்தங்கையரே
நீ-ஒருத்தியாய்வந்ததென்ன உத்தமாபத்தினியே
உற்றதுணையில்லாமல் ஒருத்திவந்தகாரியமேன்
என்றுதாயார்கேட்க எடுத்துரைப்பாள்தங்காளும்
ஆதிபரமேஸ்மரியே அகிலாண்டநாயகியே
சோதிசிவனருளே சொல்லுகிறேன்கேளுமம்மா
எனையீன்றமாதாவை என்பிறகேவந்தவரை
எனக்-கீடேற்றமில்லையென்று னிறுத்திவந்தேனித்து
றுடர்ந்தமனிதரெல்லாம் தூரத்தேநில்லுமென்று[ரம்
நல்லண்ணரைத்தேடி நயந்துவந்தேனித்தூரம்
என்றுசொல்லயீஸ்பரியும் இதமுடனேதான்குளித்து
கண்டகினப்போலே காரிழையேசொல்லுகிறாய்
என்றுமேஈஸ்பரியும் ஏதுசொள்வாளப்போது
பார்த்தவிடங்களெல்லாம் பாழ்பிணம்கூத்தாட
குறைப்பிணங்கள்கூத்தாட குள்ளநரிகொக்கரிக்க
நிறைநிறையாய்நரிகள்தின்று நின்றேப்பமிட்டிடவே
மேனாட்டுவேடுபடை வெகுகோடிமாண்டிடத்தில்
கொங்கருடசேனை கோடிபடைமாண்டிடத்தில்
மலுக்கர்துலுக்கர் மன்னவர்மாண்டிடத்தில்
துலுக்கர்பெரும்படையும் சோனகிரிமன்னியரும்
ஓடியேவேடுபடை வொருகோடிமாண்டிடத்தில்
வெட்டிவரும்ராஜாக்கள் மேலைமலையானருடன்
வீருதிவீரர் வெகுபடைகள்மாண்டிடத்தில்
சூருதிசூரர் துரைமக்கள்மாண்டிடத்தில்
பட்டாணிருவுத்தர் படைமன்னர்மாண்டிடத்தில்
கட்டாணியுங்களண்ணர் காணிக்காமாண்டிடத்தில்
அளவறுக்கக்கூடுமோ அருந்துதியேயிளவரசே

இளவரசேதங்கையரே எவரென்றுகாண்பமடி
உங்களண்ணர்தன்னை யுகந்துகாண்பதெப்படிசொல்

தங்காள் பெரியக்காண்டியிடத்தில் அண்ணமார்
கள் இறந்தவிடத்திலிருக்கும் அடையாளம்
சொல்வது.

என்று-யீஸ்பரியும்கேட்க எடுத்துரைப்பாள்தங்கையரு
எங்களண்ணர்க்கடையாளம் யினிகேளுமாதாவே [ம்
சாய்த்தாரைவெட்டறியார் சவுரியமுள்ளவர்கள்
விழுந்தாலுமெங்களண்ணர் தன்முகங்கள்வாடாது
மாண்டாலுமெங்களண்ணர் மண்டியிட்டபாவனையாய்
வேண்டாரைச்சங்கரிக்கும் விசையனைப்போலிருக்கும்
பரிசைவிழுந்தவீடம் பாரமலைபோலிருக்கும்
வீரமலைபோலேயொரு வெள்ளிமலையிருந்தாப்போல்
கால்வைத்தயிடங்களெல்லாம் கதித்தானைப்போலிருக்கு
கைவாள்வைத்திடத்தில் காலனுமஞ்சிடுவான் [ம்
துடையாடுஞ்சல்லி துவண்டாடும்பரிமானும்
குடையாடும்சல்லி குங்குமப்பூபோலிருக்கும்
முதுகாடும்சல்லியது முன்னே நிழலாடிநிற்கும்
எதிருடும்சல்லியது யெங்குநிழலாடிநிற்கும்
அவர்கள்-பட்டபடுகளமும் பரலோகம்போலிருக்கும்
வெட்டிமடிந்திடத்தில் வீரசொர்க்கம்போலிருக்கும்
ஆண்டவர்தன்னிடத்தி லதிகவரம்பெற்றவர்கள்
அவர்கள்-மாண்டகளமும் வைகுந்தம்போலிருக்கும்
பூவாமரங்களெல்லாம் பூத்துபபொகுந்திருக்கும்
காயாமரங்களெல்லாம் காய்த்துப்பழுத்துநிற்கும்
பட்டமரங்களெல்லாம் பச்சையாய்தழைத்துநிற்கும்
தழைமோதுஞ்சோலையிலே கானமயிலாடிநிற்கும்
அஞ்சுவர்னக்கிளிகள் அத்தைபிள்ளைபடுகளத்தில்
கொஞ்சிவிளையாடும் குமாரசங்கன்படுகளத்தில்
மாங்கனிக்குமந்திவந்து மகிழ்ந்துவிளையாடும்
தேன்கனிக்குகிளிகள்வந்து சேர்ந்துவிளையாடும்
இந்தவடையாளம் இருக்குமம்மாமாதாவே



யென்றுசொல்லத்தங்காளும் ஈஸ்பரியும்போது
பக்கத்தில்நின்றகன்னி பரிவுள்ளமாதர்களை
தெய்வநெல்லகனனியரை தேன்மொழியாள்தான்பார்
த்து, வனத்திலேபூவெடுக்கு வர்மமுள்ளமாதர்களே
பாரவனந்தனிலே பரிந்தோடிபூவெடுக்கும்
கன்னிகளேநீங்கள் கண்டதுண்டோசொல்லுங்கடி
யென்றுசொல்லிகேட்க யெடுத்துரைப்பார்கன்னியர்க
ள், வனங்களைச்சுற்றி மலரெடுக்கும்வேளையிலே
கன்னிவனப்பூஞ்சோலை கானகத்தேபோய்பார்த்தோம்
வெள்ளியங்காடுமேல் குறிஞ்சிவனத்தருகே
மழுவேந்துமீஸ்பரர்க்கு மலரெடுக்கப்போனிடத்தில்
தகடுகல்லுகுமுடுபாறை தச்சன்கொம்பைக்கணுவாயல்
முகடுமுட்டமரம்வளர்ந்து மூர்க்கமாய்நிற்கும்வனம்
மாம்பாடுசேவலிலே மானிடரிருவர்களும்
வாங்குசிலையும் வடுக்கணையும்கைபிடித்து
மண்டியிட்டபாவனையாய் மன்னரிருவர்களும்
வேங்கைமரத்தடியில் வீற்றிருக்கக்கண்டுவந்தோம்
ஆதிசிவன்கர்த்தாவும் ஐயனுக்குயொப்பிடலாம்
சோதிவழகும் துய்யமுகத்தழகும்
மாயன்பெருமாள்போல் மண்டியிட்டபாவனையும் [ம்
ஆயன்பெருமாள்போல் அவ்வனத்தில்கண்டுவந்தோ
தோகைநல்லாள்பத்தினியே சொற்படியுந்தப்பாது
வாகுடனேஅவ்வனத்தில் மனமாரக்கண்டுவந்தோம்

கன்னிமார்கள் பெரியக்காண்டியிடத்தில் அண்
ணமார்கள் இறந்திருக்கும் அடையாளம்
சொல்ல தங்காள்கேட்டுப்புலம்பல்.

யென்றுசொல்லகன்னியர்களேங்கியேதங்காளும்
நின்றநிலைதனிலே நினைவுதடுமாறியே
மண்டலத்துசீமையைப்போல் மயங்கியேகீழ்விழுந்தா
ள், மயக்கம்தெளிந்துமே மாருபடாபத்தினியும்
கன்னியர்கள்சொற்கேட்டு காரிழையுங்கண்கலங்கி

கோடையிடியண்ணாவே குமாரசங்காயென்பிரவி
காடோவனவாசம் உங்களுக்குகானகமோவீற்றிருப்பு
சின்னண்ணாயென்பிரவி சிறுபுலியேயென்றழுதாள்
குண்ணுடையவளநாடு கோடையிடித்ததம்பிசங்கன்
படையையலங்கரித்து பரிகளைமுன்னேவிட்டு [த்தி
குடையையலங்கரித்துயென்பிறவி குதிரையைமுன்னிரு
ஆனையலங்கரித்துசின்னண்ணா அணிபடையைமுன்னி
றுத்தி, சேனையலங்கரித்து சேர்ந்தபடைபொருதாமல்
தென்னிலங்கையிராவணன்போல்சேர்ந்தபடைபோன
பின்பு, பொன்னிலங்கும்பத்துமுடி புழுதியிலேயிரண்
டாப்போல்,வீரமலையடிவாரம்அண்ணாவி வேங்கைமர
ச்சோலையிலே, தோகைமலைக்கணுவாயில் அண்ணாவே
சேர்ந்திருக்கக்காரியமேன், பெரியண்ணாபாதகரே நீங்க
ள் பிழைமோசம்போனதென்ன, அரியதொருசோகை
யரே நீங்களரண்மனையில்வைத்தல்லவோ,கோபம்கொ
டியவரை என்னைக்கோட்டையிலேதானிருத்தி [கி
தாகமுள்ளதங்கையரை நீங்கள் தனித்தொருத்திதானுக்
பகையானவேட்டுவர்மேல்படைபொருதபோனவர்கள்
வகையானகானகத்தில் நீங்கள்கருங்கச்சைசுங்குவிட்டு
தொட்டகபாயுடனே தொடுவச்சிரசீருவும்
பொன்னின்கடுக்கனிட்டு பொன்னெழுத்துச்சோமன்க
ட்டி, அஞ்சினர்மார்புருவ அம்புறுத்தூணிகட்டி
பட்டாவுங்கேடையமும் பாங்குடனேகைப்பிடித்து
வெட்டிக்கெலித்துஅண்ணாவே வீடுவந்துசேருமல்
மானயெனவேவந்த மாயன்பின்னே துடர்ந்து
தானோடிநாவுலர்ந்து தண்ணீர்மிகத்தேடி
நச்சுபொய்கைநீர்குடித்து நல்லதம்பிமாருடனே
பட்சமுடன்நால்வர்களும் பதைத்துவிழுந்தாப்போல்
அச்சமில்லாதம்பியுடன் ஆனைபடைதளத்துடனே
மெச்சியதோர்கானகத்தில்நீங்கள் வீழ்ந்திருக்கக்காரிய
மேன், நாடுகலங்கிடவே நடனபரிமீதேறி
வேடுபடையத்தனையும் வெட்டிக்கறுவருத்து



ஓடிவருவீரென்றுநான் உத்தமியாள்பார்த்திருந்தேன்
நாடிவந்தபஞ்சவர்போல் நடுவனத்தில்சாய்ந்தீரே
பூண்டவிதிப்படியோ புண்ணியனார்சொற்படியோ
ஆண்டவனார்சொற்படியோ யண்ணாவே ஆதிநாள்விதி
ப்படியோ, கர்த்தனார்சொற்படியோ காரணாயென்பிறவி
தெண்டிரைசூழ்கானகத்தில் சேனைபடைசூழ்ந்துநிற்க
மண்டியிட்டபாவனையாய் நீங்கள்மடிந்திருக்ககாரியமே
ன், பொன்னம்பலந்தனிலே புகழ்பெறவேதவமிருந்து
சன்னாசிவரம்பெற்ற நீங்கள் சாய்ந்துவிடக்காரியமேன்
மந்திரவாள்தானெடுத்தால் மண்டலத்திலுள்ளவர்கள்
கண்டேநடுங்கிடுவார் கனவேடரத்தனையும்
இந்திரலோகத்தில் யிருக்கின்றமன்னவர்கள்
சந்திரரும்சூரியரும் தானேநடுங்கிடுவார்
உக்கிரகண்டமந்திரவாள் கொக்கரித்துதானெடுத்தால்
கொங்கரொடுங்கிடுவர் கோடிபடைமாண்டிடுமே
சங்காண்ணர்வாளெடுத்தால் தரணிகளும்தானேதிரோ
தச்சன்கொம்பைக்கணுவாயில் நீங்கள்சாய்ந்திருக்ககா
ரியமேன், வற்றாதசெல்வமுடன்வைகைவளநாடாளும்
அத்தைபிள்ளைவாளெடுத்தால்ஆனைபடைமாண்டிடுமே
அந்திகொலுவிளங்கும் நம்மாசாரச்சாவடியும்
சந்திக்கவந்தவர்கள் சதகோடிமன்னவர்கள்
அக்ரோணிசேனை இருபுரமுஞ்சூழ்ந்துநிற்க
பதினெட்டக்ரோணிபடை பக்கமேசூழ்ந்துநிற்க
கரிகாலன்மனமகிழ்ந்து கச்சைகட்டிவாள்பூட்டி
பரியின்மீதேறியண்ணா பதினெட்டுலாகுகொண்டு
எழுபதடிகற்றூணையண்ணா இருபிளவாய்செய்தீரே
கழுகுபரந்தாட நீங்கள் களைத்திருக்ககாரியமேன்
அம்புபடவுமில்லைஉங்களுக்கு அரக்காயம்தானுமில்லை
செம்பொன்திருமேனி நீங்கள் சிரறியக்காரியமேன்
தந்திரமாய்வேட்டுவரை தானழைத்துதம்பிசங்கன்
மந்திரவாள்தன்னாலே மணிக்குடல்களற்றுவிழ
சர்டினன்வேட்டுவரை தலையூருமட்டாகக்

கோடிபடைகருவருத்து கோட்டையிடித்தம்பிசங்கன்
கனவேடரத்தனையும் காலனுக்குவிருந்தாக்கி
புனல்வேடரத்தனையும் பூந்துவெட்டிகருவருத்து
முடிக்கிவந்தவேட்டுவரை முன்வீச்சுக்காயிரமாய்
கடுகிவந்தவேட்டுவரை கழுகுபசிதீர
தத்தளிக்கவெட்டி தளம்பாடிபோகமட்டும்
வெட்டிக்கருவருத்து விருதுகொம்புதானூதி
அதிவீரர்வருவீரென்றுநான் அன்பாகபார்த்திருந்தே
ன், விதியெழுத்தைப்பாராமல் நீங்கள்விதமாய்மடிந்த
தென்ன,சுற்றியேகோட்டையிட்டு நீங்கள்சூரியனைக்கா
ணாமல், வற்றாதசெல்வமுடன் வாழ்ந்திருந்தேரீமன்னு
ளில்,வித்தாரமாக நீங்கள் வீற்றிருக்கும்சபைதனிலே
ஆரணங்களும்நல்ல அழகானசாவடியும்
பாடரங்குமாளிகையும் வச்சிரபாணியுப்பரிகை
முடிமன்னராஜாக்கள் முன்னருகில்சூழ்ந்திருக்க
கொடியமன்னராஜாக்கள் கெடிவுள்ளவீரியரும்
அனைவரும்சூழ்ந்திருக்க அணியணியாய்சேவகரும்
சேனைபடைசூழ்ந்திருக்க சேனைபரியாடிநிற்க
யேறியகுதிரைவிட்டு ரணசூர்த்தவீரியரும் •
ஆரியதுலுக்கர்களும் அதியபட்டாணிகளும்
எதிர்த்தாரைவீரடக்கும் யெங்களத்தைபிள்ளைசேனைத
ளம், கதிர்த்தாரைவீரடக்கும் கனகமுடிவீரருடன்
வானவர்கள்கொண்டாடும் வையப்பெருமாளும்
சேனைமிகுகாவலரும் செய்யபெருமாளும் •
மதியூகிமந்திரியும் வையப்பெருமாளும்
எதிரில்லாருசர்களும் ரணக்களத்துமன்னவரும்
எல்லாருங்கூடி இருக்குமந்தவேளையிலே
வல்லபிராமணர்கள் வந்துசாஸ்திரமுரைக்க
சித்திரமணிக்கூடத்திலும் சிறந்தகொலுவிருக்க
உத்தரதூணருகே நானுத்தமியும்பார்த்துநிற்க
காந்தாரிகண்ணீரு காணாமல்பட்டதுண்டோ
ஏந்திழையாள்கண்ணீரு அண்ணாவேயிருவர்மேல்பட்



டதுண்டோ, பத்தினியாள்கண்ணீரு அண்ணாவே பத
றியங்கேபட்டதுண்டோ, உத்தமியாள்கண்ணீரு ஊடு
ருவப்பட்டதுண்டோ, வெள்ளைக்குடைபிடிக்க வெண்
சாமரம்வீச, தெள்ளியநாட்டியப்பெண் சிரந்தங்கேயா
டிநிற்க, சந்திரவட்டகுடைநிழற்ற தாசிகளாடிநிற்க
இந்திரவர்ன்னடாலுகள் இருபுரமும்சூழ்ந்துநிற்க
கொங்கர்தெலுங்கர் கும்பிட்டுக்கொலுகாண
வங்ககலிங்கர்வந்து வகையாகப்பட்டங்கட்ட
அந்தநல்லவேளையிலே அறியதொருதங்கையரும்
சிந்தைகுளிர்ந்து செல்வமுடனிருக்கையிலே
முன்னவருங்காரியங்கள் மூதாக்கள்தானறிய
பின்னவருங்காரியங்கள் பெருங்கதையாய் சொன்னே
னே, தங்கையர்சொன்னதெல்லாம் தரித்துதோவுன்ம
னதில், பங்கப்படவேணுமென்று பரமனார்சொற்படி
யோ, நாடிழந்துநகரிழந்துஅண்ணமாரேநல்லபதிதா
னிழந்து, வீடுவிட்டுகாடுறைய வித்தகனார்விதித்தாரே
சொல்லாமல்பெரியவரே வீரியபெருமாளே
பனைபிளந்துவில்லேற்றும் பாரமுடிராசாவே
நீங்கள்-கணையெடுத்தம்புதொட்டால் காலனுமோடிடு
வான், சிலைபிளந்தம்புதொட்டால்சேனைதளம்மாண்டி
டுமே, மலையடிவாரத்திலே நீங்கள் மாண்டிருக்ககாரிய
மேன், எதிர்க்கப்படைபொருதி யிருந்துபடைவெல்லா
மல், மார்க்கப்படைபொருதிநீங்கள் மடிந்தகளமான
தென்ன, தாக்கப்படைபொருதிநீங்கள் சவுரியங்கள்
கொள்ளாமல், மன்னவரேநீங்களெல்லாம் மடிந்துவி
ட்டகாரணமேன், உங்களுக்குவரப்போரதலைகாணி வா
ய்க்காலேபஞ்சுமெத்தை, இரப்போதலைகாணி உங்களு
க்கு கிடிகரையோபஞ்சுமெத்தை, புல்லோதலைகாணிஉ
ங்களுக்கு பூமியோபஞ்சுமெத்தை, உங்களுக்குகல்லோ
தலைகாணி கானலோபஞ்சுமெத்தை
பாற்கடலுக்குள்ளே பள்ளிகொண்டபாவனைபோல்
உக்கிராணமாளிகையும் உயர்ந்தநல்லமேடைகளும்

பஞ்சணைமெத்தையிலே படுத்திருக்குமுங்களுக்கு
இந்தவனத்திற்படுக்க ஈசனெழுதினதோ
காலாளுஞ்சேவகரும் கருதிமுன்னே நின்றிடவே
பண்டுநீங்கள்செய்த பாவத்தால்மாண்டீரோ
அன்னாளிலேசெய்த அருந்தவத்தால்வந்துதித்த
மன்னர்களே நீங்கள் மடிந்துவிடக்காரியமேன்
ஆயனருள்பெற்ற அத்தைபிள்ளைமாண்டதென்ன
புலியிருக்குங்காடுதனில் பில்லாயும்மேய்வதென்ன
ஆளியிருந்து அரசாளுங்கானகத்தில்
கூளியிருந்து கூத்தாட நீதியுண்டோ
சிங்கமிருந்திடத்தில் சிற்றுனைவாழ்ந்ததுபோல்
பங்கப்பட நீங்கள் பதரிமடிந்ததென்ன
மானுமறையும் வாழ்ந்திருக்கும்காடுதனில்
பூனைபோலேதியங்கி புலம்புவனேயிவ்வனத்தில்
சொல்லுமறந்தீரோ சொற்பெரியகானகத்தில்
வில்லுமறந்தீரோ அண்ணாவே வீரமலையடிவாரம்
மெய்யானயென்பிறவிஉங்களுக்கு மெய்யிலொருகாயமி
ல்லை, வாய்ப்பாகயிவ்வனத்தில் நீங்கள் மாண்டிருக்ககா
ரியமேன், அம்புபடவுமில்லை அரைக்காயந்தானுமில்லை
செம்பொன் திருமேனியண்ணாவே சீவிக்ககாரியமேன்
என்றுகுத்திக்கொண்டாள்மார்மேலே கூவென்றபயமி
ட்டாள், மெத்தவிழுந்தாளேமேனியெல்லாம்புண்ணாக
புணுகொழுகும்மணிமார்பா புண்ணியரேயென்றழுதா
அண்ணரேயென்று அழுதாள்பலவிதமாய் [ள்
துணையிழந்தமான்போலே தோகைநல்லாள்பத்தினியு
ம், உனையிழந்துஅண்ணாவே உலகிலிருப்பேனோ
என்னைவிட்டுத்தான்பிரிய யீசரிட்டகட்டளையோ
என்றுபுலம்பித்தங்காள் ஏங்கிமுகம்வாடி
அழுதுபுலம்பி அன்னம்போல்சோர்கிறதை
கண்டுபெரியகாண்டி கண்குளிரத்தான்பார்த்து
தங்காளைப்பார்த்து தான்சொல்வாளப்போது
அண்ணமார்தங்கையரே அருக்காணியிளவரசே



உனமனது துயரமெல்லாமுத்தமியேவிட்டுவிடு
பக்கமே நீவாடி பைங்கிளியேயுத்தமியே
அழகானபொய்கையிலே அன்புடனேதான்குளித்து
முழுகிநீருடியிங்கே மொய்குழலாள் வாருமம்மா
என்றுபெரியகாண்டி யெடுத்துரைத்தாள்தங்காட்கு
அப்போதண்ணருடன்பிறந்த அருக்காணியிளவரசு
பொன்னருடன்பிறந்த பேடைமயில்ரத்தினமும்
அன்னம்போல்வாய்திறந்து அருக்காணியேதுசொ
ல்வாள், என்னவகைமாதாவே இவ்வார்த்தை நீயுரைத்
தாய், அண்ணரிருவோரும் மத்தைபிள்ளைமூவர்களும்
எண்ணத்துலையாத அக்குரோணிசேனைதளம்
பட்டுபடுகளமும் நான்பாரதமுங்காணமல்
வட்டமிடும்பரியேறும் மன்னவரைக்காணமல்
அழுக்குக்களைவதில்லை ஆனசுத்தம்செய்வதில்லை
முழிகிக்குளிப்பதில்லை முழுகுழல்களைவதில்லை
எங்களண்ணரைக்காணமல் ஆனசுத்தம்செய்வதில்லை
என்றுசொல்லத்தங்காளும் யேதுசொல்வாளீஸ்பரியும்
உங்களண்ணரைக்காட்டுகிறேன் உயிர்பெறவேயான்தா
ரேன் அஞ்சாதேதங்கையரே ஆனதுணை நான்வாரேன்
விடியுமுன்வந்து வீரியரைக்காட்டுகிறேன்
மஞ்சனத்தீர்த்தமுண்டு மருதாணிபொய்கையுண்டு
பொன்னுலவுங்காவேரி புகழ்பெரியதீர்த்தமுண்டு
கன்னியர்கள் நீராடும் கயிலாசதீர்த்தமுண்டு
நாயகருங்காணாத, நல்லதிருச்சுனையில்
அந்தாதீர்த்தம் அருங்கிளியேயாடுமம்மா
அந்தமொழிகேட்டு அரியதொருதங்கையரும்
சிந்தைமிகத்தெளிந்து தேன்மொழியாளுத்தமியும்
தீர்த்தங்கள்தானாடி சிவனையடிபணிந்து
முழுகியேநீராடி மொய்குழலாள்தானுமங்கே
உடுத்ததுயில்பிழிந்து ஒருசிறகுமோர்போத்தி
வர்னத்துகிலை வனமாய்முக்காடுமிட்டு
எடுத்தாளிருகரத்தில் ஏந்திழைவேப்பங்குலை

வர்ன்னமணிப்பூங்கரம் வடிவுடனே தானெடுத்து
அண்ணருக்குதாகம் அன்பாகதீர்வதற்கு
தாங்கியேபொற்கரகம் தலைமேலெடுத்துவைத்து
ஓங்கிவழிநடந்தாள் ஒருநொடியிற்றந்நாளும்
பேரால்புகழ்படைத்த பெரியக்காண்டிமாதாவும்
காருளர்வங்கிஷத்தை கண்டுவரவேணுமென்று
ஆதிசிவன்குமாரத்தியும் அன்புடனேதானெழுந்து
நீதியுள்ளமாதாவும் நேரிழையைத்தான்பார்த்து
நீராடியாசாரமாய் நேசமுடன்வாரதையும்
ஏரிட்டுத்தான்பார்த்து ஈஸ்பரியுமேது சொல்வாள்
மானீன்றகண்ணே மலர்பெற்றமாணிக்கமே
தலையானசந்திரன்போல் வந்தாயேகானகத்தில்
நீ-தானுகவந்தவுடன் என்தவசுமுடிந்துதடி
நானுகவாறேனடி நல்லதங்காளுத்தமியே
என்றுசொல்லியீஸ்பரியும் இங்கிதமாய்க்கிட்டவந்து

பெரியக்காண்டியும் தங்காளும் படுகளத்தை
தேடிக்கொண்டு வருதல்.

படுகளந்தேடி பரிவுடனேதான்பார்த்து
கண்டுவரவேணுமென்று கைகோர்த்துதங்காளை
இருவருமாக யேங்கிநடந்தாரே
பெரும்பாறைகுடகுவனம் பெரியநல்லக்கணவாயில்
வழிநடந்தாளுத்தமியாள் வாள்வீரர்களைத்தேடி
தேடிவருகும்போதுதங்காள் திகைத்துபுலம்புகிறுள்
பழிகாரிநான்வாறேன் உங்கள்படுகளத்தைதான்தேடி
மாருபடாமேனியெல்லாம் மாருபட்டதென்றுசொல்லி
படுகளத்தைதேடி பத்தினியாள்நான்வாறேன்
கோடையிடித்தம்பி குமாரசங்கன்படுகளத்தை
தேடிவழிநடந்து திகைத்துநான்வாரனண்ணை
கண்ணுனயென்பிறவி காவலரைநான்தேடி
உன்னேடேதான்பிறந்த உத்தமியும்வாரனண்ணை
கால்களுந்தடுமாரி கண்களுமேபஞ்சடைந்து
மேலும்விழிகள்ரண்டும் விண்ணிற்பறந்திடவே



திங்கள்முகங்கண்டறியேன் திகைத்துவழிவாறேனுன்
அங்காடிகண்டறியேன் அசல்முகத்தைதானறியேன்
மின்னல்மழைதானறியேன் மேகத்தைகண்டறியேன்
தண்ணீர்த்துறைக்கு தட்டும்வழியறியேன்
வாய்க்கால்கடந்தறியேன் வழிநடந்துவாறேனண்ணை
தன்மைமிகுசந்திரனை தான்கண்டறிந்ததில்லை
முத்தம்பெருக்கறியேன் முறத்தில்புடைத்தறியேன்
உற்றவிடந்தனக்கு ஒருநாளும்போயறியேன்
வாசற்படிதனக்கு வழிகடந்துபோயறியேன்
தேசம்கண்டறிந்ததில்லை திகைத்துவழிவாறேனுன்
செப்பூலாம்வகைகாடு சிறுகுறஞ்சாவலம்தேடி
பேயுறையுங்கானகத்தில் பிரபலமாய்நான்வாறேன்
காடோவனக்காடு கரடிபுலிவாழும்
தாடாவனம்தனிலே தங்கையரும்வாறேனுன்
கூவியேபள்ளமதில் குலக்கொடியாள்வருகையிலே
தண்ணீர்தகித்திடுமாம் தங்கைநல்லாளுத்தமிக்கு
அண்ணருடன்பிறந்த அருக்காணியிளவரசு
பொன்னருடன்பிறந்த பேடைமயில்தங்காளும்
அக்கரைபோகையிலே அடிச்சுவடுகாய்ந்திடுமாம்
தணலைமிதித்தாப்போல் அதிகசூடுண்டாகி
ஆக்கரித்தாள்தங்காளும் அடியும்குளிர்ந்ததுவே
மண்டியிட்டுத்தாளிருந்து மணலைப்பரித்திடவே
மணலைப்பரித்தல்லவோ மாமயிலாளப்போது
கோவென்றபயமிட்டாள் கோடையிடிபோலே
தம்பிசங்கனை நினைக்க தனிதீர்த்தம்பெருகியதே
ஆவென்றபயமிட்டாள் அருந்தீர்த்தம்தானுச்சு
வெள்ளிக்கிழமையிலே விதமானதங்கையரும்
அள்ளியேதீர்த்தமது அடைவுடனேதான்குடித்து
தாகமதுதெளிந்து தண்ணீர்விடாய்தீர்ந்தபின்பு
கூவினுன்பள்ளமென்று குவலயத்திலேபேருச்சு
அந்தவனங்கடந்து அப்பாலேபோகையிலே

சிந்தைகலங்கியே திசைதோறுந்தான்பார்த்து
செப்பூலாங்காடு சிறுகள்ளிவனந்தனிலே
அப்பால்குரிஞ்சவன மதுகடந்துபோகையிலே
கல்லுகளுமுள்ளுகளும் கணவர்ய்மிகுதியுமாய்
மெள்ளவேதானடந்து விறைந்துவழிபோகையிலே
சிங்கங்கரடிபுலி செந்நாய்வருமிருகம்
பொங்கமுள்ளவனந்தனிலே பெருமையுடன்தான்திரி
யும், வால்நீண்டமிருகங்களும் வாழுமறையினமும்
கால்நீண்டபக்ஷிகளும் கதித்திருக்கும்யானைகளும்
பேருனசெந்நாயும் பேயும்கழுகுகளும்
சீருனபட்சிகளும் சித்தானைக்குட்டிகளும்
காண்டாமிருகவ்னங் கடிகியேதான்கடந்து
பாம்பாருசேவலிலே மானிடவர்தன்னிலே
பாம்பாட்டிவீரன் பறுங்கணவாய்வழிதனிலே
ஓங்கிவளர்ந்திருக்கும் உயர்ந்தவனச்சோலையிலே

தங்காள் சின்னண்ணர் இறந்தயிடத்தில்வந்து
கண்டுபுலம்பல்.

வேங்கைமரத்தடியில்தம்பிசங்கன் வீருடனேசாய்ந்தி
ருக்க, ஆதிசிவன்தன்மகளும் அன்புடனேதானுங்க
ண்டு, ஐயன்குமாரத்தியும் அடைவுடனேகண்டல்ல
வோ, தங்காளைத்தானிறுத்தி தயவுடனேபாருமென்று
ள், அங்கேயிருக்கிறவர் ஆரென்றுபாருமென்றுள்
தங்காளுமப்போ தானோடிபார்த்திடவே
சங்கர்திருயுருவை தான்கண்டுதங்காளும்
சின்னண்ணன்திருவடியை சிறப்பாககண்டவுடன்
வலதுபுரஞ்சுத்திவந்து வாள்வீரண்ணரையும்
இடதுபுரம்சுத்திவந்து இன்பமுடன்மண்டியிட்டு
கோவென்றபயமிட்டு குத்திக்கொண்டாள்மார்மேலே
மய்ரைவிரித்தல்லவோமார்மேலறைந்துக்கொண்டாள்
அடித்துவிழுந்தாள் அய்யோசிவனேயென்று
மயிரைவிரித்தலரி மண்டியிட்டுத்தானழுதாள்
அண்ணாவேயென்று அடித்துக்கொண்டாள்மார்மீதில்



கோபமுள்ளமங்கையரைகோட்டையிலேதான்விடுத்து
தாகமுள்ளமங்கையரை தனித்தொருந்திதாளுக்கி
பாரமுடிராவணன்போல் பட்டூரேயிவ்வனத்தில்
முடியிழந்துராசமன்னர் முன்சமரில்மாண்டதுபோல்
படியிழந்ததாமரைப்போல் நீங்கள்பள்ளிகொண்டகா
ரியமேன், பச்சைவர்னபட்டணிந்து பரிவானகச்சைக
ட்டி, கைச்சிலையுந்தான்பிடித்து சமர்க்களத்தில்மடிந்த
தென்ன, வெள்ளிவேல்கையிலிருக்க நீங்கள்விழிசோ
ரக்காரியமேன், வுக்கிரகண்டவாளிருக்க சூலைகளத்தில்
மடிந்ததென்ன, என்னைத்தவிக்கவைத்து அண்ணுவே
யெமலோகஞ்சேர்த்ததென்ன, நானும்பரதவிக்க நம
னுலகிற்போனதென்ன, கொடியாள்தவிக்கவிட்டு குமா
றசங்காபோனதென்ன, உன்னோடேநான்பிறந்து அ
ண்ணுவே ஊதாரியானேனே, என்பிறவியண்ணுவே
என்னைவிட்டுப்போனீரே, பெண்ணுளை யிங்கேவிட்டு
போவதுஞாயமுண்டோ, பேர்பெரியஅண்ணுவே பெ
ரியண்ணரையெங்கேவிட்டாய், கொண்டல்வண்ணமா
யவனுர் கோபாலர்தன்னருளால், பண்டுபழிசெய்த பா
விதுரியோதிரனை, வென்றவகைபோலே வெற்றிகொ
ண்டுவாருமல், பாரமலையிடத்தில் பதைபதைத்துதான்
விழவே, அம்புமறந்தாரோ அத்தைபிள்ளைமூவர்களு
ம், வில்லுமறந்தீரோ நீங்கள்வீரமலைகானகத்தே
வுக்கிரகண்டமந்திரவாள்கொடுங்கையிலேதானெடுத்து
தாங்கியதோர்கேடயமும் தன்முதுகிலேயிருக்கி
உருக்குநல்லசீருவும் உண்டையுடன்தானணிந்து
இருப்புநல்லகேடயமும் இடதுதோளிலேயிருக்கி
வெள்ளிக்கட்டுவேல்பிடித்து வீரமலைகானகத்தில் [க
காண்டாவனமெரித்தஅண்ணுவேகையிலம்புதானிருக்
வேண்டாரைச்சங்கரிக்கும் விசையனைப்போலிருக்க
மாண்டாயோதம்பிசங்கா மகாதேவர்சொற்படியோ
ஆண்டவனுர்சொற்படியோ அதிகாரவிதிப்படியோ
முதனுளில்சுக்ரீவன் முடிகியேருவணன்மேல்

பாய்ந்துகிரீடத்தை பரித்துவந்தபாவனைபோல்
வேட்டுவரைச்சங்கரித்து வெற்றிகொண்டுவாருமல்
கொங்கரைச்சங்கரித்து கோட்டைவந்துசேருமல்
படுகளத்தில்மாண்டதென்ன புகழ்பெரியவீரியரே
அனுமானும் வெற்றிகொண்டு ஆயன்முன்வந்தாப்
போல், இதமில்லாகறுவருத்து எழில்பெரியவேட்டுவ
ரை, வருவீரகளென்று சொல்லி மங்கைநான்பார்த்திரு
ந்தேன், பத்தினியாள்முன்னலே பரிவுசொல்லிவாரும
ல், உத்தமியாள்பார்த்திருக்க ஊருவந்துசேருமல்
சின்னண்ணயென்பிறவி சிவலோகம்சேர்ந்ததென்ன
இந்தப்படியிறக்க ஈசனர்கட்டளையோ
என்றுசொல்லிதங்காளும் ஏங்கிமுகம்வாடி
மண்டியிட்டுத்தானும் மார்மேல்மயிர்விரித்து
அண்ணருடன்பிறந்த அருக்காணியிளவரசு
மயிரைவிரித்துவிட்டு மார்மேலேதானறைந்து
கோவென்றபயமிட்டு குத்திக்கொண்டாள்மார்மேலே
பத்துதடாயென்வயிறு பாதகனேதம்பிசங்கா
என்று-மார்மேலேகண்ணீறு தாரைவிட்டுதானழுதாள்
சின்னண்ணன்மேல்விழுந்துதிகைத்துப்பிறண்டழுதா
தங்காள்புலம்புறதை தான்கண்டுமாதாவும் [ள்
அய்யன்குமாரத்தி யருகிற்போய்த்தங்கையுரை
கையைபிடித்து கடுகெனவேதானெழுப்பி
கண்ணீர்தனை துடைத்து கலங்காதேதங்கையரே
என்று-கண்ணீரைவாங்கி தாயார்முகந்துடைத்தாள்
துயரமெல்லாமுள்ளடக்கு தோகையிளமயிலே
என்பக்கமே நீவாடி பாங்கானபைங்கிளியே
உங்க-ளண்ணர்தனையெழுப்ப உத்தமியேவேண்டியது
என்னுடனேசொல்லுமடி இளங்கிளியேதங்கையரே
வேணுமென்றதெல்லாம் விதமாகநான்தாறேன்
என்று-ஈவ்பரியுஞ்சொல்லஎடுத்துரைப்பாள்தங்காவும்
என்தாயேயீவ்பரியே இனிக்கேளும்என்வார்த்தை
காருவின்கோவாரி கடுகியிங்கேவேணுமம்மா



ஆவின்பாலும்நெய்யும் அன்பாகவேணுமம்மா
கோவாரிச்சஞ்சீவி இந்தகொடுவனத்திற்கிட்டாது
குறிஞ்சிவனந்தனிலே கோவாரிதானிருக்கும்
குறிஞ்சிவனம்போய் கொண்டுவரவேணுமம்மா
காவேரிதீர்த்தமது கடுகவரவேணுமென்றுள்
காவேரிதீர்த்தமென்றல் காதவழிபோகவேணும்
அந்தந்ததிக்குகளி லானதொருதீர்த்தமுண்டு
மஞ்சநீர்சுனையம் மருதாணித்தீர்த்தமுண்டு
இந்தநல்லதீர்த்தமும் ஏழுசமிதைகளும்
சாம்பிராணிகூடம் சகலமும்வேணுமம்மா
அத்தியரசுடனே ஆலுபலாவின்சுப்பல்
மாவுமரசுடனே வகையானசுப்பல்களும்
வெற்றியுள்ளதெற்பைகளும் வேணுமென்றுள் தங்கை
யரும், புண்ணியயாகம்செய்ய யரசுடனேசுப்பல்களும்
எண்ணியேயேழுசுப்பல் இப்பவரவேணுமென்றுள்
கொண்டுவரவேணுமம்மா குலக்கொடியேமாதாவே
என்றமொழிகேட்டு இன்பமுடன்மாதாவும்
அப்போதுதாயார் அனுமாரைத்தானழைத்து
மலையிலுள்ளமந்திகளை யழையுமென்றுள்மாதாவும்
அப்போதுமந்தியெல்லாம் அடிபணிந்துநிற்கையிலே
மெய்யானயேழுசுப்பல் விரைந்துகொண்டுவாருமென்
யேவினுள்மந்திகளை இயல்பெரியமாதாவும் [று
சிந்தைகுளிர்ந்துபத்தி சீக்கிரமாய்த்தான்தாண்டி
சீதைக்குதூதுசொல்ல தென்னிலங்கைபாய்ந்தாப்போ
ல், காண்டியங்கேயோடி சஞ்சீவியெடுத்தாப்போல்
அரைட்சணமேமந்திகளும் ஆனசுப்பல்தானெடுத்து
கொண்டுவந்துமந்திகளும் கொடுத்தங்கேபோனதுவே
வாடாதபுஷ்பங்களும் மருதாணிதீர்த்தமெல்லாம்
இங்கேவந்ததம்மா இனியென்னவேணுமென்று
தாயாரும்கேட்கையிலே தான்சொல்வாள்தங்கையரும்
குற்றமரவோமம்செய்ய ஒருகுருக்களும்வேணுமென்று
ள், அப்போதுயீவ்பரியும் அன்பாகயெடுத்துரைப்பா

ள், நால்வேதமாறுசாஸ்திரம் நான்முடிப்பேன் தங்கை
யரே, குருக்கள்மார்விதிகளெல்லாம்குணமுடனே நான்
முடிப்பேன், பிரபலமாய்நான்முடிப்பேன் பேரரசேதங்
கையரே, யென்றுசொல்லத்தங்காளும் யெழுந்தாள்க
ரையருகே,நடத்துகிறயாகமெல்லாம் நடத்துகிறளீஸ்
வரியும், வடம்பிடுங்கோட்டையிட்டுவகையாயடிபணி

### தங்காளும் பெரியகாண்டியும் தவம்செய்து [ந்து ஈஸ்வரரிடம்வரம்பெற்று சகலரையும் யெழுப்புவதற்காக முதல்சங்கரை யெழுப்புதல்.

சந்திரகாந்தத்தாலே தானுமுக்காடுமிட்டு
இந்திரவர்ன்னபட்டெடுத்து இங்கிதமாய்தான்மூடி
தம்பிசங்கன்காயத்தை தான்பார்த்துதங்காளும்
பொன்னூசிகொண்டல்லவோ பொருதினள்திரேகமெ
ல்லாம், காயம்பொருதியல்லோ கடும்புழுதிதான்றுடை
த்து, தாய்பெற்றமேனிபோல் சரீரமெங்குஞ்சுத்திபண்
ணி,வாடாதமாலை வடமாலைதான்சாத்தி
சூடாதபுஷ்பமெல்லாம் சூடியலங்கரித்து
சந்தனம்புனுகு சவ்வாதுகளபமுடன்
குங்குமம்கஸ்தூரி குமுகுமெனத்தான்தெளிந்து
முத்துவர்ன்னபட்டெடுத்து முக்காடுதானுமிட்டு
சற்றுமுகந்தெரியாமல் சரீரமெல்லாம்தான்மூடி
இட்டவிதியென்று ஈசனுரைப்பணிந்து
அட்டமாய்சுத்திவந்து அலரிவிழுந்தழுதாள்
சின்னண்ணதம்பிசங்கர் சிறுபுலியேயென்றழுதாள்
மயிரைவிரித்தலரி மார்மேலறைந்துக்கொண்டாள்
மண்டியிட்டும்மயிர்விரித்து மண்மேலேதான்புலம்பி
தாகத்துக்கொருகரகம் தண்ணீருகொண்டுவந்தேன்
கோபம்தணிக்கவந்தேன் குளிர்ந்தமுகம்பார்க்கவந்தே
ன், தாகமுள்ளதங்கைமுகம் தான்பார்த்துஅண்ணவும்
வஞ்சனைகள்செய்தாப்போல்வகைமூன்றுய்த்தான்பிரிந்
தோம், நெஞ்சிலறைந்துகொண்டு நின்றழுதுதங்கைய



ரும், என்செய்வேன் அண்ணவேயென்றுஏங்கிமிகவழு
தாள், ஐயோசிவனேயென்று அடித்துமிகவழுதாள்
சின்னண்ணதோழியரே தீமூட்டவேள்விசெய்து
கல்லுக்கடன்கழித்து கயிலாசம்சேறுமென்று
எள்ளுந்தண்ணீரு மிறைத்துவந்தேனண்ணவே
பேச்சிமுலையுண்டருளும் பெருமாள்வடிவெடுத்து
காச்சியபால்தயிரை கவர்ந்ததொருகள்ளனைப்போல்
வைத்தமண்டிபேறுமல் மந்திரவாள்தோளில்வைத்து
பச்சைநிரவண்ணனைப்போல்பள்ளிகொண்டகாரியமே
ன், குளிகையுமண்டபமும் துய்யமணிமாளிகையும்
தளம்பாடிக்கணவாவில் தானுச்சோவண்ணவே
வறப்போதலைகாணி வாய்க்காலோபஞ்சுமெத்தை
இறப்போதலைகாணியுங்களுக்கு யிடுகறையோபஞ்சுமெ
த்தை,கல்லோதலைகாணியுங்களுக்கு கானலேபஞ்சுமெ
த்தை,புல்லோதலைகாணியுங்களுக்கு பூமியோபஞ்சுமெ
த்தை,வழுசுத்துகோட்டை யிலகுமணிச்சாவடியில்
வாளெடுத்துதான்வீசி மன்னர்கள்நிற்கையிலே
என்னுடையகண்ணீரு இதமுடனேபட்டதுண்டோ
பாவியுடகண்ணீரு பதறுமல்பட்டதுண்டோ
உத்தமியாள்கண்ணீரு ஊடுருவப்பட்டதுண்டோ
நாலுமூலைக்கலசம்வைத்து நன்றாகநூலணிந்து
நாலுதலைவாசல்விட்டு நன்றாகதிண்ணையிட்டு
நடுவேயொருதிண்ணையிட்டுநற்கும்பம்தானும்வைத்து
வடம்பிடித்துநூலணிந்து மாவிலையுந்தான்சொருகி
இடம்பெரியவகல்பரப்பி இயல்விளக்குத்தானேற்றி
தடமரிந்துசிவலோகம் தான்போகவேணுமென்று
திடமாகத்தானிருந்து செபித்தாளேமந்திரத்தை
ஐயன்குமாரந்தி அன்புடனேபூசைபண்ணி
ஓமம்வளர்த்திநாளே உண்மைபெரியகாண்டி
திறமுடனேயோமப்புகை தெய்வலோகமூடுதெப்போ
அப்போதுஈஸ்வரரு மானதொருநாரதனை
என்னபுகையெனக்கேட்க யெடுத்துரைப்பார்நாரதரும்

பஞ்சவர்களைவரைப்போல் பாருலகில்காருளன்
வெற்றிமிகுந்தொரு வீரியர்களிருவருண்டு
அத்தைபிள்ளைமூவருண்டு அதிவீதிசூரர்களும்
கோனாட்டிற்குடியிருந்து கொங்கரைச்சங்கரித்து
மேனாட்டுவேடுவரை வெட்டிக்கருவறுத்து
பாரமுடியார்கள் பட்டுவிழுந்தார்கள்
வீரமலையடிவாரம் விதமாய்மடிந்தார்கள்
அவர்களுடன்பிறந்த அருக்காணியிளவரசு
ஓமம்வளர்த்துகிறாள் உத்தமாபத்தினியும்
யாகம்வளர்த்துகிறாள் அருந்ததிநல்லதங்காள்
ஆனவரம்பெற்ற வகிலாண்டநாயகியும்
தவசுநிலையிற்புங்க தானென்றுசொல்லிநின்றார் •
அப்போ-யேழுபேருக்கிளைய யேழுகிரிநாச்சியாரை
மழுவேந்துமீசன் மலரடியைத்தான்போற்றி
ஐயாசரணமென்று அடிவணங்கித்தெண்டனிட்டு
பொன்னம்பலவரைப் போற்றியேதெண்டனிட்டு
அண்ணரிருவரும் அத்தைபிள்ளைமூவர்களும்
யெண்ணத்தொலையாத அக்ரோணிசேனைகளும்
ஆனைபடையதனை யடங்கலுந்தானெழுப்ப
மண்டலத்திற்றானிருக்க வரம்வாங்கிவாருமென்று
அனுப்பினாள் நாச்சியரை ஆதிசிவன்மகளும்
பொன்னேணிவைத்தல்லோ பூவேணிமேலேறி
சிறந்தொருநாச்சியரும் சிவலோகம்போய்ச்சேர்ந்து
சிவனாரைக்கண்டு தெண்டனிட்டாள்நாச்சியரும்
சிவனாருமப்போது திரும்பிமுகம்பார்த்து
யேழுகிரிநாச்சியரை யெங்கேவந்தாயென்றுகேட்க
அப்போதுநாச்சியரும் அரனாற்குயேதுரைப்பாள்
பூலோகம்தன்னிலே பொன்னரென்றுஞ்சங்கரென்று
ம், மன்னவர்களிருவருண்டு மகாசூரவல்லவர்கள்
வேட்டுவரைச்சங்கரித்து வீணாய்மடிந்துவிட்டார்
நாடுபடைபொருதி நடுவனத்தில்மாண்டார்கள்
எழுப்பவரம்வாங்கிவர யென்னைவிட்டாள்மாதாவும்



பிழைக்கவரம்வாங்கிவரப் பெரியகாண்டிமாதாவும்
இட்சணமேவாங்கிவர யென்னையனுப்பிவிட்டாள்
என்றுசொல்லிநாச்சியரு மின்பமுடன்றெண்டனிட்
டாள், அப்போதுஈஸ்வரனார் அகமகிழ்ந்துகொண்டா
டி, மானிடர்தன்பொருட்டாய் வந்தாயேயித்தூரம்
நல்லதென்றுசொல்லி நகைத்துமேசங்கரரும்
பொன்னூசிபொற்சரடு பொருந்திடவேகாயத்திற்கு
கனவூசிதந்து கனத்தவரம்தான்கொடுத்து
செம்பொன்சிலையேந்தும் சிவனாருமென்னசொல்வார்
மற்பொருதும்படுகளத்தைவந்துநான்பார்க்கவேணும்
வந்துநின்றுபார்த்து வகையுடனேயவர்களுக்கு
வாக்குவரமு மனதாரநான்தருவேன் • •
யேழுகறைநாச்சியரை யினியேகுமென்றுசொல்லி
அனுப்பவேநாச்சியரும் அன்புடனேகீழிறங்கி
பக்கமேயோடிவந்து பரமனா சொன்னதெல்லாம்
சீராகநாச்சியரும் செப்பினாளீஸ்வரிக்கு
அப்போ-பெருமையுள்ளதாயார் பெரியகண்டிமாதாவு
ம், அறியபெரியகாண்டி ஐயன்குமாரத்தியும்
கர்த்தன்குமாரத்தி கயிலாசக்கன்னியரும்
மெத்தமனமகிழ்ந்து மேலானதங்கையரை
அண்ணருடன்பிறந்த அருக்காணியிளவரசே
பொன்னருடன்பிறந்த பேடைமயில்றங்கையரே
திக்கெனவேதானழைத்து செப்புவாள்மாதாவும்
தங்கத்திருமேனி தாழ்வில்லாப்பத்தினியே
சங்கருடன்பிறந்த சாதிமருக்கொழுந்தே
பக்கமேதானழைத்து மத்தினியாள்தன்கையிலே
பொன்னூசிபொற்சரடு பொருந்தவேகைகொடுத்தாள்
காயம்பொருதுமம்மா கனத்தமுடிதங்கையரே
எழுப்பவரம்வந்ததடி யெல்லவரேயிப்பொழுதே
என்றுபெரியகாண்டி யியல்பாய்வரங்கொடுத்தாள்
அப்போதுதங்யைரும் ஆனவரம்வாங்கி

ஆதிசிவனாரை யன்புடனேதெண்டனிட்டு
யாகமதுதான்வளர்த்தி அறியதொருபிறவியரும்
ஓமம்வளர்த்தலவோ உத்தமாபத்தினியும்
அண்ணருடன்பிறந்த அருக்காணியிளவரசு
பொன்னருடன்பிறந்த பேடைமயில்வாகனமும் [டு
திக்கெனவேதானெழுந்து திசைதோறும்தெண்டனிட்
அண்ணர்பட்டபடுகளத்தை அனைவரும்போனார்கள்
கண்டுமேதங்காளும் கதறிமிகவழுது
அடித்துவிழுந்து அட்டமாய்சுத்திவந்து
கெட்டேனேயண்ணாவே கெடுத்தானேயேமனுந்தான்

பொன்னரைக்கண்டு தங்காள்புலம்பி எழுப்புதல்.

தட்டான்சொற்கேட்டு சதிகாரன்பின்போய்
மட்டுபடாவேடுபடை வந்ததையுங்காணாமல்
சத்தியமேமெய்யாகச் சதிகாரன்பின்போய்
வெற்றிசெய்து நீங்கள் விதமாயிறந்ததினால்
தம்பிசங்கன்படுகளத்தைத் தானெழுப்பிவந்தேனான்
வெற்றியுள்ளதம்பிசங்கன் வீரியனும்வந்துநிற்க
செம்பொன்றிருமேனியண்ணாவி சீவிக்கக்காரியமேன்
அம்புபடவுமில்லை அரக்காயந்தானுமில்லை
மண்டியிட்டபாவனையாய் மடிந்திருக்கக்காரியமேன்
பல்லாக்குமேல்நீங்கள் பாவனையாயவருகையிலே
விற்காரரொருகோடி வேல்காரரொருகோடி
நவமணிக்குஞ்சரங்கள் நாலுதிக்கும்சூழ்ந்துவர
பறியேறிராவுத்தரும் பக்கமேசூழ்ந்துவர . [பேன்
நான்-வர்னத்திருவீதியிலே வகையுடனேபார்த்திருப்
என்கண்ணீருபட்டதோ கர்த்தாவின்சொற்படியோ
வெண்ணீறுபூசாமல் வெறுபுழுதியணைந்ததென்ன
அந்தனல்லவேளையிலே ஆதிசிவன்கர்த்தாவும்
சாந்திப்பிராமணன்போல் தள்ளாடிதள்ளாடி
திறமானபுஸ்தகமும் தெண்டுகோலைத்தானணி
பீறலுள்ளவேட்டிகட்டி பெரியன்போல்நடுங்கி
வள்ளலுடையகையில் வாகானகொப்பேந்தி



பூணூலணிந்து பிரபலமாயப்பொழுது
நீறுமெத்ததான்பூசி நிறைந்தருத்திராட்சமுடன்
புண்ணும்பொடியுடனே புறப்பட்டார்வேதியரும்
அண்ணருடன்பிறந்த அருக்காணிதானறிந்து
அறிந்துகொண்டாள்தங்கையரும்ஐயனார்தன்வடிவை
ஏரிட்டுப்பார்த்தல்லோ என்னசொல்வாள்தங்கையரும்
சிலையெடுத்துவந்தவர்போல் சிவரூபமானீரே
அம்புகளைத்திருத்தி அலகுயொருயிதழாக
கொடுங்கணைத்தான்விட்டு கொன்றவரும்நீர்தானே
வாழைத்தண்டைவில்வளைத்து மலருலையெய்துவிட்
டீர், தாமரைமலர்தொட்டு பட்டுருவமெய்தீரே
வாருமென்றுதங்காளும் வளமாயடிபணிந்து
அப்போதுஆண்டவனார் அருங்கிளியைத்தான்பார்த்து
சிவனாருமப்போது சொல்லுகிறார்தங்கையர்க்கு
செப்புகரகந்தண்ணீர் சீக்கிரம்கொண்டுவாரும்
அப்படியேதங்காளும் அடைவுடனேகொண்டுவந்தாள்
நாற்சதிரமாக நலமாய்மொழுகுமென்றார்
தலைவாழையிலையுமங்கே தான்போட்டுஐயருந்தான்
அரிசிபறப்பி ஆனவோமங்கள்செய்து
கரகத்துநீரை கடிகியங்கேதான்கொடுத்தார்
தீர்த்தந்தனைத்தெளித்து சீக்கிரமாயெழுப்புமென்றார்
அப்போதுதங்கையரும் அடிபணிந்துதான்வணங்கி
மண்டியிட்டவண்ணவரை வலமாகச்சுத்திவந்து
தீர்த்தத்தைவாங்கி சின்னண்ணன்மேற்றெளித்தாள்

சங்கரெழுந்திருந்துதங்காளை வெட்டப்போக
பெரியக்காண்டி தடுத்து நிறுத்தல்.

ஆக்கரித்துத்தம்பிசங்கன் அதட்டியெழுந்திருந்து
தங்காளும்நிற்கிறதை தான்கண்டான்தம்பிசங்கன்
சீக்கிரத்தில்தங்காளை சினந்துமுகங்கடுத்து
கோட்டையிலேவைத்துவைத்தேன் கூசாமலித்தூரம்
நாட்டின்வழிவந்ததென்ன நலமாகயித்தூரம்
வழித்துணைகளில்லாமல் வரலாமோவென்றுசொல்லி
பழிகாரன்தேசத்திலே பத்தினியும்வந்ததென்ன
என்றுசொல்லிதம்பிசங்கன் எடுத்தானேமந்திரவாள்
வாளெடுத்துகையிலேந்தி வளமுடனேதங்காளை
வெட்டவேணுமென்று விதமுடனேநிற்கையிலே

கண்டுபெரியகாண்டி கனமோசம்வந்ததென்று
இதமுடனேதம்பிசங்கன் எந்தனையும்பாராமல்
வீசவேணுமென்று விதமாயெழுந்தானே
மனமுந்துணிந்தானே மாபாவிதம்பிசங்கன்
என்று-சங்கரைப்பார்த்து தானுரைப்பாள்மாதாவும்
பெண்ணென்றசென்மம் பிறப்பாரோவையகத்தில்
அண்ணரைத்தேடிதங்காள் அழுதகுரல்கேட்டு
வழிக்குதுணையாக வந்தேனுன்தங்கையுடன்
பழிக்குநீபாருதேநான் பத்தினியைக்கூட்டிவந்தேன்
என்றுசொல்லத்தம்பிசங்கன் இருதோளும்பூரித்து
கட்டியணைத்து கதரியேதம்பிசங்கன்
அண்ணரைக்காணேனென்று ஐயோவெனவழுதான்
தங்காளுமப்போது சங்கர்க்கெடுத்துரைப்பாள்
அஞ்சாதேயென்பிறவி நான்அண்ணரைக்காட்டுகிறே
ன், எழுப்புகிறேன்யெல்லவரை ஏதுக்குமஞ்சாதே
உங்கள்பழிதீர்க்க உத்தமியாள்நானும்வந்தேன்
பெண்ணாய்ப்பிறந்தல்லவோ பேதைமதியானேனே
என்றுதங்காள்சொல்ல ஏதுசொல்வான்சங்கனுமே
நீ-ஆணாய்ப்பிறந்தால் அரசாள்வாவையகத்தில்
என்றுசொல்லிதம்பிசங்கன் இதங்கள்மிகவுரைத்தான்
அப்போதுதங்காளும் அனைவரையுந்தான்கூட்டி
பெரியண்ணர்பட்டயிடம்.பிரபலமாயெங்கையென்று

பொன்னர் சகலமானபேரையும் வீரசொர்க்கஞ்
சேரும்படி வேள்விசெய்து முடியுமென்ன
தங்காள் சொல்லுதல்.

அப்போதுபொன்னுண்டார் அன்பாயெடுத்துரைப்பா
ர், அறிபபிறவியரே அன்புள்ளதங்கையரே
முன்னாளில்யெங்களுக்கு முக்கணனார்தந்தவரம்
பதினாறுவயதுதான் பார்வதியேயெங்களுக்கு
இருக்கவுங்கூடாது என்பிறவிதங்கையரே
இந்தயுலகில் யிருக்கவழியுமில்லை
சிவலோகம்போய் சேர்ந்திருக்கநாங்களெல்லாம்
ஈஸ்வரியேதாயே நீ இங்கேனழைத்துவிட்டாய்
பழையபடிநாங்கள் பரமன்பதஞ்சேர
அனுப்பியேவேள்விசெய்யும் ஆனபிறவியரே
எங்களைத்தானே ஈடேற்றநீபிறந்தாய்



என்றுமேபொன்னுண்டார் எடுத்துமிகவுரைத்து
அந்தமொழிகேட்டு அறியபிறவியரும்
ஐயோசிவனே ஆதிமகாதேவா
எனக்குத்துணையென்று எழுப்பினேனுங்களைத்தான்
ஆனதுணையென்று அனைவரையும்நானெழுப்ப
என்னைத்தனியவிட்டு ஏகுரேனென்றீரே
பத்தினியாள்தனக்கு பாருலகிலாருதுணை
உத்தமியாள்தனக்கு ஒருவர்துணையில்லையென்று
முன்னாள்விதிப்படியோ முக்கணனார்சொற்படியோ
சோதிசிவனருளோ சொக்கட்டான்கட்டளையோ
வேதியனார்சொற்படியோ விதியெழுத்தைநானறியேன்
மாதுநல்லாள்புலம்பி மண்மேல்விழுந்தழுதாள்
மயிரைவிரித்தல்லவோ மாதுப்புலம்புகிறாள்
கொடியதொருதம்பிசங்கன் குமாரனெழுந்திருந்தாள்
வேடுபடைதங்களையே விதமாகசங்கரித்து
கொக்கரித்துமந்திரவாள் குமரிநிலத்தூணி
சிங்கம்போல்சீறி சினத்துடனேநிற்கையிலே
கண்டந்ததங்கையரும் கடுகியேஓடிவந்து
மிஞ்சாதேயென்பிறவி விரும்பியெழுப்புகிறேன்
சுத்திநிறைவளைத்து சூதானம்பண்ணியங்கே
காயம்பொருந்தியே கடியதொருதங்கையரும்
மண்டியிட்டுதங்காளும் மயிரைவிரித்தல்லவோ
அட்டமாய்சுத்திவந்து அடிபணிந்துதெண்டனிட்டு
செப்புகாகந்தண்ணீர் சீக்கிரமாய்த்தானெடுத்து
நிலத்தோடேதான்மோதி நின்றாளேதங்கையரும்
தம்பிசங்கன்கண்கலங்க தான்சீறியெழுந்திருந்து
வாவில்விழுவனென்று வாள்வீரன்துணிந்துநிற்க
தங்காளும்தான்துணிந்துதண்ணீரைவிட்டெறிந்தாள்
தங்காள்படுந்துயரம்பொன்னர் தன்செவியிற்கேட்டிட
வே, வாள்நிறுத்திதம்பிசங்கன் மடகிறேனென்றுசொ
ல்லி, தம்பிபடுந்துயரம் தானுமிகக்கேட்டு
தங்காளும்நீரிறைக்க தயவுடனேமனங்குளிர்ந்து
வாய்விட்டலறினார் வாள்வீரன்பொன்னுண்டார்
பாயில்படுத்தவன்போல் பதறியங்கேதானெழுந்தார்
முத்திபெற்றபொன்னருந்தான் மொய்குழலைத்தான்பா
ர்த்து, தங்காள்பிரவியரே நீ தனித்துவரக்காரியமேன்

இத்தூரம்வந்ததென்ன இளவரசேதங்கையரே
உன்-தோழிமாரெங்கையடி தோகையரேஎன்பிறவி
உன்-தாதிமாரெங்கையடி தங்கைநல்லாள்பத்தினியே
என்றுசொல்ல அண்ணருக்குஏதுசொல்வாள்பத்தினியு
ம்,வாவென்றுதோழியரை விழிதுணையாயழைத்துவந்
தேன், துணைவாருமென்று தோழியரைநானழைத்தே
ன், அனைவோரும்வாறதில்லை அவ்வனத்தேயென்றார்
கள், என்னைத்தனியே ஏகுமென்றுசொன்னார்கள்
தீமூட்டிவேள்விசெய்து திறமாகவந்துவிட்டேன்
அக்கினியைமூட்டி அவர்களுக்குவேள்விசெய்து
பட்சமுள்ளசாஸ்திரங்கள் பலகடனுந்தான்தீர்த்து
கல்லுக்கடன்கழித்து கயிலாசம்சேர்த்துவந்தேன்
வனத்தில்தனியே வருகிறவேளையிலே
அழுதகுரல்கேட்டு அறியதொருமாதாவும்
உனக்குத்துணையாக இங்குவந்தோமண்ணாவே
என்று-தங்காளுரைகேட்டு தாஷ்டிகனுமேதுசொல்வா
ன், உத்தமாபத்தினியே உண்மையுள்ளநாயகமே

## பொன்னர்சொன்னபடி தங்காள் அத்தைபிள்ளை களையும் சகலமானசேனைகளை எழுப்புதல்.

அத்தைபிள்ளைமூவரையும் ஆனைபடைசேனைகளும்
எழுப்பிடவேணுமென்றாரேபொன்னுண்டார்
அப்போ-நல்லதென்றுதங்கையரும்நாடிப்படுகளத்தை
அத்தைபிள்ளைமூவரையும் அன்புடனேகண்டார்கள்
தம்பிசங்கன்பொன்னருமே தான்கண்டுகண்கலங்கி
பார்க்கிறவேளையிலே பரிவுடனேதங்காளும்
செப்புக்கரகந்தண்ணீர் சீக்கிரமாய்விட்டெறிந்தாள்
அத்தைபிள்ளைமூவர்களும்அலறியங்கேதானெழுந்தார்
ஆனைபடைசேனை அடங்கலும்நீரிறைத்தாள்
சேனைபடையெல்லாம் திறமாயெழுந்ததுவே
அப்போதுதங்காள் அண்ணரடிபணிந்து
ஈஸ்வரியாள்கட்டளையாள் எல்லாஞ்சுகமானோம்
ஊருக்குப்போகலாம் உத்தமரேவாருமென்றாள்
நம்சீமைக்குப்போகலாம் சீக்கிரமாய்வாருமென்றாள்
கோட்டைக்குப்போகலாம் கொற்றவனேவாருமென்றா
ள்,போகவேயுங்கள்மனம் பொருந்தியதோவண்ணாவே
பத்தினியாள்நானும் பாவிதனித்திருக்க



என்னதான்வுங்கள்மனம் என்றழுதாள்தங்கையரும்
அழுதுபுலம்ப அண்ணருமேகிட்டவந்து
கண்ணீர்தனை துடைத்து கண்ணோடுறவணைத்து
அஞ்சாதேதங்கையரே ஆண்டவனார்துணையுமுண்டு
அறியபெரியக்காண்டி அம்மாள்துணையுமுண்டு
ஈஸ்பரியாள்துணையுமுண்டு இளவரசேதங்கையரே
பாங்கானதெய்வகன்னி பக்கத்துணையுமுண்டு
எங்கள்துயரமது இனிவேண்டாமென்றிறவி
எங்களுக்குகயிலாசம் இனிமேல்தரவேண்டும்
கயிலாசமெங்களுக்கு கன்னியிளவரசே
சீக்கிரமாய்வேள்விசெய்யும் தெய்வப்பசுங்கிளியே
எங்களை-கயிலாசம்சேர்த்துவிட்டு கனகமுடிதங்கையரே
கனவேள்விசெய்து கைலாசம்சேருமென்றார்
அந்தமொழிகேட்டு ஆனதொருதங்கையரும்
நல்லதென்றுசொல்லியே நமஸ்கரித்தண்ணர்களை
சூதானம்பண்ணி சுத்தித்திறைவளைத்து
அண்ணரிருவோர்க்கும் அன்பானபட்டுடுத்தி

## தங்காள் சகலமானபேருக்கும் வேள்வி செய்து முடித்தல்.

மேலெங்குந்தெரியாமல் மூடியேதங்காளும்
பொன்னூசிகொண்டு பொருந்துஞ்சரட்டையெல்லாம்
செப்பூசிகொண்டு சேர்ந்தசரட்டையெல்லாம்
தங்காளுந்தானுருவ தரணியிலேமடிந்துவிட்டார்
பொன்னுஞ்சரடுருவ பொன்னர்மடிந்துவிட்டார்
தம்பிசங்கன்சரடுருவ தானுமடிந்துவிட்டார்
அத்தைபிள்ளைமூவர்களும் அனைவோருமேமடிந்தார்
அண்ணறைத்தானடக்கி ஆனதொருதங்காளும்
சந்தனகட்டையாலே தணலையுமூட்டிவிட்டாள்
அக்கினியைவளர்த்தி அனைவோரையுமெடுத்து
தீர்க்கடனு நீர்க்கடனும் சீக்கிரமாய்த்தான்முடித்து
கல்லுக்கடன்கழித்து கைலாசம்சேருமென்றாள்
சகலகருமங்களும் தான்முடித்துதங்காளும்
வீரமலைச்சோங்கில் விதமாகவேயிருந்து
அரனைநினைத்து அன்புடனேபூசைசெய்தான்
பெரியகாண்டிமாதாவும் பிரபலமாய்ச்செய்கையிலே

## தங்காளும் பெரியக்காண்டியும் கன்னிமார்களும் கைலாசஞ்சேருதல்.

அப்போதரனாரும் அன்பாய்மனமகிழ்ந்து
புஷ்பவிமானத்தை புகழாயனுப்பிவைத்தார்
புஷ்பமாரிபொழிந்து பொன்னூரதம்வந்ததுவே
கண்டுபெரியக்காண்டி கண்கள்மிகக்குளிர்ந்து
தங்காளும்மீஸ்வரியும் தங்கரதத்தின்மேல்
ஈசன்தனைப்பணிந்து ஏறினாரப்போது
சத்தகன்னிமாரும் தானேறிப்போனார்கள்
அப்போதுபுஷ்பரதம் அரசனிடத்தில்போனதுவே
சிவலோகம்போய்ச் சேர்ந்தாரனைவோரும்
தங்காளும்பெரியக்காண்டி தானிறங்கியன்னேரம்
பரமனார்பாதத்தில் பணிந்துநமஸ்கரித்தார்
அப்போ-ஈசர்மனமகிழ்ந்துஇருவரையுந்தான்பார்த்து
இந்தவுலகத்தில் இவர்களைப்போல்கண்டதில்லை
பதிவிரதையானதினால் பரலோகந்தன்னிலே
வாழ்ந்திருங்களென்று வரமளித்தாரீச்சுரனார்
வரம்பெற்றுதங்காளும் வாழ்ந்திருந்தாரப்போது
கைலாசந்தன்னிலே காட்சிபெற்றுவாழ்ந்திருந்தார்
பெரியக்காண்டிதன்னுடனே பிரபலமாய்வாழ்ந்திருந்
தார், இந்தக்கதைதன்னை எழுதிப்படித்தவர்கள்
ஆலைபோலேதழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திருப்பார்
கிளைமேற்கிளைதழைத்து கீர்த்திமிகப்பெருகி
அரனார்கிருபைபெற்று அவனியில்வாழ்ந்திருப்பார்
சுவாமிகிருபைபெற்று சதிருகவாழ்ந்திருப்பார்
வாழிமிகவாழி வையகமும்வாழியதே

பொன்னழகரென்னும்

கள்ளழகர் அம்மானை

முற்றிற்று.

---